Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

தினமுரசு வாரமலர்

மார்ச். 30 - ஏப். 05 , 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 656

## அடுத்த கட்டப் பேச்சுக்கு தடை போடுவது யார்?







## மாறி வரும் அரசியல் சூழலும் மலையகத்தில் உருவாகும் மாற்றங்களும்!

## படையணிகளுக்குச் சிறுவர்களைப் பிடித்தவர் சர்வதேச நீதிமன்றில்!



## ஆரம்பம் புதிய தொடர்

## 'பட்டாம் பூச்சி...'

## திருமதியாகும் 'ரக்ஷிதா'



# இறை ஒளி

நாள் தோறும் நாம் தூய்மையான மொழியினைப் பேசும் போது அதில் இருந்து ஒளி வெளிப்படும் இறைவனின் ஒளியே இறை அமுதமாக வெளிப்பட்டு எமக்கு உணவாகக் கிடைக்கின்றது.

உருவமே ஒளியாக உள்ளது. ஒளியே உருவமாக உள்ளது. இறைவன் ஒளியுடன் ஒன்றாகி உள்ளார். இறைவன் உருவத்துடன் ஒன்றாகி உள்ளார்.

இறை சக்தியில் இருந்து வெளிப்படும் ஒளி, எல்லா விதமான இருளையும் முற்றாகவே நீக்கிவிடும். இறைவன் எம் அகத்தினை ஒளிமயமாக்கி எம்முடனேயே இருக்கின்றார்.

சர்வத்திற்கும் வேண்டிய எல்லா வளங்களையும் இறை ஜோதியானது தன்னகத்தே கொண்டிருப்பதுடன் எவ்வித களங்கமும் இல்லாத ஒளியை எம்முள்ளேயும் ஏற்படுத்தி அதனோடு இறைவன் ஒன்று கலக்கின்றார்.

எமது உடலின் தாற்பரியம் ஒளியினால் தெளிவு பெற்றுவிடும். நாம் தவ வாழ்வினை மேற்கொள்ளும்போது எம்மில் இருந்து ஒளி வெளிப்படும்.

திருமூலர் திருமந்திரம் — சி.உமாசங்கர் அடிகளாரின் உரையிலிருந்து.

# ஆன்மீகம்



## மன்னிப்போம்! மறப்போம்!!

நமது பாவங்களை மன்னித்து - பாவிகளாகிய மனுக்குலத்தை இரட்சிக்கவே இயேசு மண்ணிலகில் வந்துதித்தார். அவர் நமது பாவங்களை மன்னிக்கும் சித்தம் கொண்டவராகவே எப்போதும் இருக்கிறார். அவர் நினைத்தால் எம்மை அடியோடு அழித்தொழிக்க வெகு நேரம் எடுக்காது. ஆனால் அவர் அப்படிச் செய்ய நினைப்பதில்லை. மாறாக மனந்திருந்தி வாழ்வதையே விரும்புகிறார். ஆனால் மனிதராகப் பிறந்த நாம் பேராசை, பொறாமை, குரோதம் போன்ற தீய எண்ணங்களுடன் மற்றவனை அழிக்கும் காரியங்களில் ஈடுபடுவதோடு தெரிந்தோ, தெரியாமலோ தவறு செய்து விட்டால் தண்டிக்கவே துடிக்கிறோம்.

இது தவக்காலம் - எனவே தவறுகளைச் செய்பவர்களை மன்னிப்போம். தவறுகளை மறப்போம். நாம் வாழ எமது பாவங்களுக்காக இரத்தம் சிந்திய இயேசுவின் நாமத்தைப் போற்றுவோமாக. நல்லதைச் செய்து, நல்ல வழிகளில் சென்று தவக்காலத்தில் தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வோமாக.

எஸ். நிரஞ்சன்குமார், வத்தளை.

## மறுமையின் நினைவு மனிதனுக்கு அவசியம்

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் மறுமை வாழ்வு பற்றி நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அல் குர் ஆன் னையே இங்கே அவதானியுங்கள்.

மனிதர்களே! மறுமையில் உங்களுக்கு உயிர் கொடுத்து எழுப்புவதைப் பற்றி நீங்கள் சந்தேகம் கொண்டால், முதலில் உங்களை எவ்வாறு படைத்தோம் என்பதை கவனியுங்கள்."

இவ்வாறு மறுமையின் நம்பிக்கையை மட்டும் மாமறை கூறவில்லை. மறுமை நாள் நெருங்கும் போது நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றியும் இறை தூதரை இறைமறை விழிக்கிறது.


நபியே! அந் நிகழ்ச்சி இன்னவென்று அறிவீரா? அந்த நாளில் மனிதர்கள் சிதறிக் கிடக்கும் ஈசல்கள் போல் ஆகிவிடுவார்கள். மறுமை நாளின் திடுக்கம் பாரியது.

மரித்தோர்கள், மண்ணிலே உயிருடன் இருப்போர்கள் அனைவரையும் இது விட்டுவிடாது.

ஆம் அல்குர் ஆன் கூறும் மறுமை நாள் காட்சிகளை மனிதன் சீரிய சிந்தனையுடன் நோக்க வேண்டும். மறுமையின் நினைவு மனிதனுக்கு அவசியம்.

எம்.சி. கலீல், கல்முனை -05.

## கவிதைப் போட்டி இல.653



பரிசுக்குரிய கவிதை

### அறிவுரை

ஐக்கியமும் அரவணைப்பும்
ஆபத்தில் மட்டுமல்ல
யார் மீதாயினும் -
ஆரம்பத்திலிருந்து
வரவேண்டும்!

- எம்.ஏ.எம். தஹானீ, காத்தான்குடி - 06.

## கவிதைப் போட்டி இல.656



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 04.04.2006.

கவிதைப் போட்டி இல.656
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### இரத்தம்

தாயின் நிலையைப் பார்த்தால்.
கண்ணில் நீர் வடிகிறது
தாய் நாட்டின் நிலையைப் பார்த்தால்
கண்ணில் இரத்தம் வடிகிறது.

எஸ். ஹஜேந்திரன், சித்தங்கேணி.

இழந்த செல்வங்கள்,
மடிந்த உறவுகள்
பற்றிக் கவலைப்படவில்லை....
சீதனத்தின் பிடியால்
வாழ்க்கையற்று
கற்பிழந்து
விலைமாதுகளாய்ப் போன
பெண்ணினம் பற்றியதுதான்

- இ.ஐ. அனஸ்சப்ராஸ், மூதூர் - 01

மலிவுச் சந்தையில்
விற்பனைக்குப்
போடப்பட்ட
பொருட்களாய்
போய்விட்டதே
பெண்ணியத்தின் கற்பு

கியாஸ் எம். மீப்ராஸ், மூதூர் 07.

கொஞ்சும் குழந்தை நீயும்
கொடூரம் கண்டு ஏங்கி விட்டாய்.....
இந்நாட்டின் விதி இதுதான்
வா மகனே... நம் நாடு சென்று
நலமாக வாழ்ந்திடுவோம்.

எஸ்.கே. ரமேஷ், பெரிய போரதீவு.

### நியதி

உறவுகளில் யாரும்
உயிர் நீங்கிப்
போனாரோ?
ஏன் இந்தத் துயரம்?
நேற்று பிறக்கையில்
கூடவே இறப்பையும்
வாங்கி வந்தாய்
நாளை நீயும்
மரணிக்கக் கூடும்
மகளே!
அழுகையை
நிறுத்தி விடு!!

ஏ.ஆர்.எம். நதார், திருகோணமலை.

### நிச்சயம்

விம்மி அழுது
புலம்புவதனால்
இழந்த உமதுரிமையை
மீட்க முடியயாது
பெண்ணே.....
துணிவோடு போராடினால்
எல்லாவற்றிலிருந்தும்
மீட்சி நிச்சயம்!!

காமில் ஜாவித் - பாத்திமாஹனா, ஏறாவூர் - 03

### ஐயகோ!

திரவியந் தேட
திரைகட லோடிய
எங்கள் கணவர்கள் இன்று
கடற் கொள்ளையரின்
பணயக் கைதிகள்!

- அ.சந்தியாகோ, கண்டி.

### வழியுண்டு!

பார்வை உள்ளோரெல்லாம்
பாவலராய் வாழ்வதில்லை
பார்வை இல்லாத போதும்
பார்புகழ வாழலாம்
முயற்சியும் நம்பிக்கையும்
குறையாது இருந்து விட்டால்.

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### பொற்சிலைகள் ஏன்?

கண்ணிருந்தும்
குருடர்களாகக்
காதிருந்தும்
செவிடர்களாகக்
காட்சி
தருகின்ற
மனித
உலகிலே
கண்ணாடிக்குள்
கண்களை
மறைத்து
வாழப்பழகி
விட்ட
இவர்கள்,
கபோதிகளல்ல;
கண்ணிறைந்த
பொற்சிலைகள்!

- நா. ஜெயபாலன், பிபிலை.

அணைக்க கரம்
வேண்டும்.
ஆறுதல் கூற
நல் அன்னை
வேண்டும்.
இறுகிய
மனதுக்குள்ளும்
ஈரம் கொஞ்சம்
இருக்க
வேண்டும்.
ஆனால் சிலர்
அணைக்கும்
கரம் கொண்டு
- எம்மை
அழிக்கத்
துடிக்கின்றனரே!
ஏன்..

- எஸ்.வி. றிச்சாட், கண்டி.

### சோகத்தின் முடிவு

சோகத்தின்
விளிம்பில்
எத்தனை
முடிவுகள்!
சொந்த மண்ணில்
வாழ முடியாதோர்!
சொந்த உறவுடன்
சேர முடியாதோர்
சொந்த உழைப்பில்
உண்ண
முடியாதோர்
இதை விட வேறு....
சொந்த துணையும்
இல்லை
யென்றால்...
என்ன விடிவு!

- த.ஜெசிக்கா, யாழ்ப்பாணம்.


# உங்கள் பக்கம்

## விளைந்த நெல்லை விற்க முடியாத நிலை

பாரம்பரிய விவசாயப் பிரதேசங்களில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் கிராமமும் ஒன்றாகும். அதிலும் நெற்செய்கை இங்கு பிரதான விவசாயம். எனினும் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளம் காரணமாக நெற்செய்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் பெரிதும் நஷ்டப்பட்டனர். இத்தகைய இன்னல்களுக்கு மத்தியிலும் கண்ணீரும், வியர்வையும் சிந்தி கஷ்டப்பட்டு அறுவடை செய்த நெல்லைக் குறைந்த விலைக்குக் கூட கொள்வனவு செய்ய முதலாளிகள் முன்வரவில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் கூட இதனைக் கவனத்தில் கொள்வதில்லை. இங்கு கூலித் தொழிலாளிகளுக்குக் கூட நெல்லே கூலியாக கொடுக்கப்படுவதால் கூலியாட்கள் 1 மூடை நெல்லை கூட விற்க முடியாமல் திண்டாடுகின்றாரகள். இந்நிலை தொடருமானால் விவசாயிகள் மட்டுமன்றி பொதுமக்களும் வர்த்தகர்களும் பாதிக்கப்படுவர். எனவே விவசாயிகளினதும் பொதுமக்களிளதும் நன்மை கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்திலெடுத்து செயற்பட வேண்டும். பொறுப்புள்ளவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வார்களா?

ஏ.எச்.எம். ஆசிக், இராஜ் நகர், தம்பலகாமம்.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

எனது இனிமைக்கு தினமும் தோன்றும் தினமுரசே, உன்னில் இடம் பெறும் சேவைகளும் புதி அம்சமாகவும் இருக்கின்றது. அது மட்டுமல்ல ஹிட்லர் என்பவரை நான் தெரிந்து கொள்வதற்காக மிகவும் பாடுபட்டுக் கொண்டிருந்தேன். எனது இனிய முரசே நீ அதனை கொண்டு வந்து தருகிறாய். அதற்கு எனது பல கோடி வாழ்த்துக்கள் இன்னும் உன் புகழும் பெருமை உயர்வதற்கு எனது வாழ்த்துக்கள்.

ஆ. செல்வமலர், நமுனுகுல.

# வாசகர் சாலை

## தனிச் சிறப்பு

வாசகர் நெஞ்சங்கள் உன்பால் நேசிக்கவும் - மேலும்
யோசிக்கவும் வழிவகுக்கும் தினமுரசே!
நீதாங்கி வரும் வண்ணங்களும் - அதில் பொறிக்கப்படும்
எணண்ணங்களும் உண்மையை ஊரறிய
முத்திரை பதிக்கும் தைரியமும் உனக்கே உரிய
தனிச்சிறப்பு!!

எஸ்.திவ்யா, கந்தர்மடம்.

## அற்புத ஏடு

ஆதி முதல் அந்தம் வரை அனைத்து படைப்புகளும் பாராட்டுக்குரியவை!
ஊடுருவும் எக்ஸ்ரேயும் உண்மை நிலை விளக்கும் முரசம்,
அலசுகின்ற விடயங்களும், நாசூக்கான அதிரடியும்,
ஒப்புநோக்கும் இன்னொருவர் பார்வை, புதிய தகவல் தரும்
பெட்டியும், வண்ணங்களுடன் சினிமாவும், சில தேன் துளிகளும்,
சிந்திக்க வைக்கும் பதில்களும், நயமான இலக்கியமும் இன்னும்
எத்தனையோ முத்துக்கள் பதித்த அற்புத ஏடு தான் தினமுரசு.

நித்தியா, வவுனியா.

## உன்னால் முடியும்!

உண்மைகளை உறங்கிடச்
செய்யும்
ஊனமுற்ற ஊடக சமூகத்தில்
உணர்ச்சிகளை புறக்கணித்து
உள்ளன உள்ளபடி உரைத்து
வஞ்சகர்களின் வன்முறைகளை
வையகத்தில் பறை சாற்றி -
அவர்களின்
பூச்சாண்டிகளுக்கு பூட்டுப் போட்டு
பூமியே ஆயிரம் காலம்
பூத்திருக்க உன்னால் மட்டும்
முடியும்.
வாழ்க முரசே! வளர்க முரசே!!

வி.சேகர், மட்டக்களப்பு.

## துவிக்கும் தமிழர்கள்!

கடந்த வாரம் பிரசுரமாகிய இன்னொருவர் பார்வையில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் எந்த வகையில் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அறிய முடிந்தது. இங்குதான் எமது மக்கள் அவலங்களை எதிர்கொள்வதாக எண்ணியிருந்தேன். இந்த கொடுமைகளை வெளிப்படுத்திய முரசுக்கு எமது நன்றிகள்.

கே. மனோகரன், நெல்லியடி.

# கடல் வலயத் தடையால் தமிழ், முஸ்லிம் மீனவர்கள் பாதிப்பு

மன்னாருக்கும் புத்தளத்துக்குமிடையிலான குதிரைமலைக் கடற்பரப்பில் கடந்த 25ஆம் திகதி புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் கடற்படையினரின் டோரா ரோந்துப் படகு மூழ்கடிக்கப்பட்டதையடுத்து கடல் வலயத் தடையை கடற்படையினர் மீண்டும் அமுல்படுத்தியுள்ளனர். 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முன்னர் அமுலிலிருந்த இந்தத் தடை, பாதுகாப்புக் காரணங்களுக்காகவே மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார். சங்கமான்கந்தையிலிருந்து புத்தளம் வட பகுதி வரையிலான கடற்பரப்பிலும், யாழ்.குடா நாட்டைச் சுற்றியுள்ள கடற்பரப்பிலும் இத்தடை 27ஆம் திகதி முத-ல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி கரையிலிருந்து 12 கடல் மைல்களுக்கு அப்பால் இலங்கை - இந்திய கடல் எல்லை வரை மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



அதாவது மூன்று தொன்களுக்கு மேற்பட்ட எடை கொண்ட படகுகள், 28 அடிக்கு மேற்பட்ட நீளமான படகுகள், ஒரு நாளுக்கு மேல் தங்கி நின்று மீன்பிடிப்பில் ஈடுபடும் படகுகளுக்கே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தப் படகுகள் குறிப்பிட்ட பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட வேண்டுமானால் கடற்படைத் தளபதியிடமிருந்து அல்லது உத்தரவு பெற்ற கடற்படை அதிகாரியிடமிருந்து எழுத்து மூலம் அனுமதி பெற வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. சிறிய மீன்பிடிப் படகுகள் தொடர்ந்தும் மீன்பிடிப்பில் ஈடுபட அனுமதிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் இழுவைப் படகொன்று கடற்படையினரின் டோரா படகு மீது நடத்திய தற்கொலைத் தாக்குதலில் எட்டுக் கடற்படைச் சிப்பாய்கள் இறந்துவிட்டனரென்றும் 11 பேர் மீட்கப்பட்டனரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. புலிகளின் படகிலிருந்த ஆறு பேரும் வெடிபொருட்களை வெடிக்க வைத்ததால் அந்த இழுவைப் படகு சிதறியுள்ளது.

யாழ்ப்பாணம், குருநகர் மீனவர் சங்கப் பிரதிநிதி அன்ரன் நிக்கிலாஸ் இக் கடல் வலயத் தடை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், “இத் தடையால் அப்பாவி மீனவர்களும் அவர்களின் குடும்பத்தினருமே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஏற்கனவே திருமலைக் கடலிலும் டோரா படகொன்று தாக்கிச் சிதறடிக்கப்பட்டதையடுத்து அங்கும் கட்டுப்பாடுகள் போடப்பட்டிருந்தன. சில வாரங்களுக்கு முன்னர்தான் யாழ். கடற்பரப்பில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இவ்வாறு கடற் பரப்பில் தாக்குதல்கள் நடத்துவதைப் புலிகள் நிறுத்த வேண்டும். சமீபத்தில் மன்னார் கடற்பரப்பிலும் புலிகள் நடத்திய தாக்குதலால் அப்பகுதி மீனவர்களே பெரிதும் பாதிப்படைந்தனர். வெறுமனே கடல் வலயத் தடையை நீக்கு என்று கோஷமிடுவதிலோ ஆர்ப்பாட்டம் நடத்துவதிலோ பயனில்லை. இவ்வாறான தாக்குதல்களை நிறுத்தினால் எம்மால் பிரச்சினைகளின்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியும்” என்றார். “யுத்தத்தை விரும்புபவர்கள் வேறு எங்காவது மோதிக் கொள்ளட்டும். இலட்சோப இலட்சம் மக்களின் அன்றாட ஜீவனத்துக்கு உதவும் கடல் தாயை அமைதியாக இருக்க விடுங்கள்” என்கிறார் அன்ரனி சிமியோன்

இக் கடல் வலயத் தடை குறித்து கடற்படைப் பேச்சாளரிடம் கேட்டபோது, “இனிமேல் கடற்படையினர் மீது தாக்குதல்கள் நடத்தப்படமாட்டாதென்று உறுதியான உத்தரவாதமளிக்கப்பட்டால் தடையை நீக்க நாம் தயாராகவுள்ளோம்” என்று கூறினார்.

## புலிக் கொடி ஏற்றுவது ஒப்பந்த மீறலாகும்

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிக் கொடியை ஏற்றக்கூடாதென்பது, யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலுள்ள ஒரு முக்கியமான விதி. யாழ்ப்பாணம், கொக்குவிலிலுள்ள உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் புலிக்கொடி ஏற்றப்பட்டமை ஒப்பந்த மீறலாகும் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார். “புலிக் கொடியை ஏற்றியது யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலல்ல. புலிகள் இந்த நாட்டில் தடை செய்யப்பட்ட இயக்கமல்ல. எனவே புலிக் கொடியை ஏற்ற முடியும்” என்றும் “புலிக்கொடி, தமிழினத்தின் தேசியக்கொடி” என்றும் தமிழ்ச்செல்வன் கூறியது பற்றிக் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். “புலிக்கொடி தமிழ் மக்களின் தேசியக் கொடியா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களேயொழிய, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரல்ல” என்றும் அவர் பதிலளித்தார். இக் கொடியேற்றம் குறித்துக் கருத்துத் தெரிவித்த மேற்படி கல்லூரி மாணவன் சந்திரசேகரன் “வீம்புக்குப் புலிக் கொடியை ஏற்றிவிட்டு மாணவர்களுக்குப் பிரச்சினையை ஏற்படுத்துவது தவறான செயலாகும். பல்வேறு கருத்துக்கள் கொண்ட மாணவர்கள் பயிலும் இடமே கல்லூரியாகும். இங்கு புலிக் கொடியை ஏற்றி மாணவர்களுக்குத் தொந்தரவு தருபவர்கள், தமது வீடுகளில் இக் கொடிகளை ஏற்றிவிட்டு, விளைவுகளை எதிர்பார்ப்பதே நல்லது. இப்போது புதிய நிலையொன்று எழுந்துள்ளது. இவ்வாறான வீம்பு நடவடிக்கைகளைப் படையினர் இனியும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதே அது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்” என்றார் அவர்.

## இன ரீதியான படைப் பிரிவு ஐக்கியத்துக்கு ஆப்பு வைக்கும்

“இலங்கை இராணுவத்தில் முஸ்லிம் படைப் பிரிவொன்றினை அமைப்பதற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சில தரப்புகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு தனியான முஸ்லிம் படைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டால் காலவோட்டத்தில் தமிழ் படைப்பிரிவு, தனிச் சிங்களப் படைப் பிரிவு, பறங்கியர் படைப் பிரிவினர் எனப் பல இனரீதியான படைகளை ஏற்படுத்த வேண்டி வரும். இது ஆரோக்கியமான செயலல்ல” என்கிறார் அரசியல் ஆய்வாளர் மதிவண்ணன். இலங்கையில் யுத்தம், இனப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டிருப்பதால் இது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்துமென்றும் அவர் கூறினார்.

## வெள்ளவத்தையில் குரங்குச் சேட்டை

கொழும்பு, வெள்ளவத்தை பொலிஸ் நிலையச் சுற்றாடலில் கட்டாக்காலியாகத் திரிந்த குரங்கொன்றினால் பத்துக்கு மேற்பட்டவர்கள் பயங்கரக் கடிகாயங்களுக்கு இலக்காகியுள்ளனர். இடுப்பில் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் தப்பி வந்த இக் குரங்கு, பெரும்பாலும் பெண்களையே பதம் பார்த்துள்ளது. சுடிதார் அணிந்து சென்ற இளம் பெண்ணொருவரை விரட்டிச் சென்ற குரங்கை மிரட்ட முனைந்த இளைஞரொருவரின் தொடையைக் குரங்கு பதம் பார்த்துவிட்டது. படுகாயங்களுக்குள்ளான சிறுவர் பாடசாலை ஆசிரியையொருவர் பொலிஸாரினால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சிறுவர்கள் பெண்கள் ஆகியோரை அச்சுறுத்திய குரங்கை பிடிக்கவோ, வேறு நடவடிக்கை தொடர்பிலோ வெள்ளவத்தை பொலிஸார் எவ்வித நடவடிக்கையையும் 3 நாட்களாக எடுக்கவில்லை.

## கடலில் பிடிபட்டார்

யாழ்ப்பாணத்தில் கடத்திக் கொலை செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் சுப்ரிண்டன் சார்ள்ஸ் விஜேவர்த்தனாவின் கொலை தொடர்பான சந்தேக நபர் பருத்தித்துறைக் கடலில் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர். இவர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளார் என்று தெரிய வருகிறது.

## குதிரைமலைத் தாக்குதல்; ஆயுத உதிரிப் பாகங்கள் உலகின் கவனத்துக்கு

குதிரைமலைக் கடற்பரப்பில் புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல் சம்பந்தமாக உலக நாடுகளினதும் சர்வதேச சமூகத்தினதும் கவனத்துக்குக் கொண்டு வரும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட இணைத் தலைமை நாடுகளுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் இவ் விவகாரம் கொண்டு செல்லப்படவுள்ளது. புலிகள் வெடித்துத் தகர்த்த படகில் விமான உதிரிப் பாகங்கள், ஏவுகணைகள் மற்றும் வெடி பொருட்கள் இருந்ததாகவும் கடற்படையினர் டோரா படகில் தம்மை நெருங்கி வந்ததையடுத்தே புலிகள் வெடிபொருட்களை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டனரென்று கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இப் படகிலிருந்து வெடித்துச் சிதறிய ஆயுதங்களின் உதிரிப் பாகங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். இப் பாகங்கள் இந்தியா, ஜப்பான், பிரிட்டன் உட்படப் பல நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

புலிகள், ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் கடத்தி வருகிறார்களென்பதற்கு குதிரைமலைச் சம்பவம் ஓர் உதாரணமென்றும், இந்த யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் குறித்து உலகின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக சிரேஷ்ட அதிகாரிகள் மூவர் விரைவில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவரென்றும் அவர் சொன்னார்.

## ஆளில்லா விமானம் வீழ்ந்தமைக்குக் காரணம்

வவுனியா, மகாறம்பைக்குளம் என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆளில்லா விமானம் வீழ்ந்தமைக்கு இயந்திரக் கோளாறே காரணமென்று விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. வவுனியா நகரிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் மகாறம்பைக்குளம் அமைந்துள்ளது.

## யுத்தத்துக்குப் புலிகள் தயாராகிறார்களாம்

புலிகள் யுத்தத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்களென்று பரவலாக எழுந்த ஊகத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உண்மையென ஏற்றுக் கொண்டிருக்கிறார். கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் வழங்கிய கருத்து கடந்த வாரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சமாதான முன்னெடுப்பில் எவ்வித முன்னேற்றமும் காணப்படாததால் அல்லது சிறிதளவு முன்னேற்றமே காணப்பட்டதாலேயே புலிகள் யுத்தத்துக்குத் தயாராகிறார்களென்று அவர் தெரிவித்திருக்கிறார். கடந்த நான்கு வருடங்களாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனக் கூறிய அவர், ஆகவேதான் புலிகள் யுத்தத்துக்குத் தயாராகிறார்கள் என்றும் சொன்னார்.

## “இனியும் கண்ணீர் சிந்தாதே” சகோதரியே

‘மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு’ லண்டனில் நடத்திய திரைப்பட விழாவில் இலங்கையின் மனித உரிமைப் போராளி ரஜனி திரணகமவின் வாழ்க்கையையும் மனித உரிமைச் செயற்பாடுகளையும் சித்திரிக்கும் விவரணத் திரைப்படம் காட்டப்பட்டது. கடந்த 22ஆம் திகதி முதல் காண்பிக்கப்பட்ட இத் திரைப்பட நிகழ்வில், ரஜனியின் மூத்த சகோதரியான நிர்மலா, ரஜனியின் கணவர் திரணகம, பெண்பிள்ளைகள் இருவர் ஆகியோர் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டனர். ‘இனியும் கண்ணீர் சிந்தாதே, சகோதரியே” என்ற தலைப்பில் இத் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் புலிகள் உட்படப் பல்வேறு ஆயுதக் குழுக்களாலும் இலங்கை - இந்தியப் படைகளாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களைக் காரசாரமாகக் கண்டித்தவர் ரஜனி திரணகம. மருத்துவப் பேராசிரியராக யாழ்.பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வந்த இவர், 1989ஆம் ஆண்டு புலிகள் அமைப்பைச் சேர்ந்த சார்ள்ஸ் என்பவனால் பல்கலைக்கழகத்துக்கு சமீபமாக வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## டென்மார்க்கில் தேடுதல்

டென்மார்க்கின் தலைநகரான கொபன்ஹேகனில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைமையகத்தை, டென்மார்க் புலனாய்வுச் சேவையைச் சேர்ந்த பொலிஸார் முற்றுகையிட்டுத் தேடுதல் நடத்தினர். கடந்த திங்கட்கிழமை 27ஆம் திகதி இச் சம்பவம் நடைபெற்றது. சுனாமி நிவாரணத்தின் பெயரால் சேகரிக்கப்படும் நிதி ஆயுதக் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே இத் தேடுதல் நடாத்தப்பட்டதென்று பொலிஸார் தெரிவித்தனர்.

## தேர்தல் முறையில் மாற்றம்

சர்ச்சைக்கு இலக்காகியிருக்கும் விகிதாசாரத் தேர்தல் முறை அடுத்த செப்டெம்பர் மாதத்துக்குள் மாற்றியமைக்கப்படுமென்று அரசியலமைப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. விகிதாசாரத் தேர்தல் முறையையும் தொகுதி முறையையும் ஒன்றிணைத்து ஜெர்மன் பாணியிலான தேர்தல் அமைப்பு முறை அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# சிறை மீண்ட முதல் ஈழப் பெண் போராளி 20 வருட மௌனத்தைக் கலைக்கிறார்

“மிதவாதக் கருத்துகள் கொண்ட சகல தமிழ் தலைவர்களையும் புலிகள் இயக்கமே கொன்றொழித்தது. எனது சகோதரி ரஜனி திரணகம, நன்கு திட்டமிடப்பட்டுக் கொல்லப்பட்டார். அது உயர் மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். எனது சகோதரி வெளிப்படையாகவே பேசியவர். அவரும், அவருடைய நெருங்கிய சகாக்கள் அனைவரும் அழிக்கப்பட்டுவிட்டனர். புலிகள் இயக்கம், மிகவும் மத்தியத்துவப்படுத்தப்பட்ட அதிகார அமைப்பாகவும் ஜனநாயக ரீதியான எதிர்ப்புகளுக்கு மதிப்பளிக்காத இராணுவமாக உருவெடுத்துள்ளது” என்று நிர்மலா இராஜசிங்கம் (முன்னர் நிர்மலா நித்தியானந்தன்) லண்டன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். தற்போது லண்டனில் வாழ்ந்து வரும் இவர், இருபது வருடங்களாகக் காத்து வந்த மௌனத்தைக் கலைத்து, பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டியிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

“இப்போது நான் உண்மையைப் பேச வேண்டிய சந்தர்ப்பம் இறுதியாக வந்துள்ளதென்று என்று குடும்ப அங்கத்தவர்கள் தீர்மானித்துள்ளனர். இலங்கையில் உண்மையாக என்ன நடக்கிறதென்பதைப் பற்றிய எனது அரசியல் அபிப்பிராயத்தை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதன் மூலம் எனது மக்களுக்கு எனது கடமையைச் செய்ய வேண்டியவளாக உள்ளேன். புலிகள் இயக்கம், முற்றுமுழுதான இராணுவ அமைப்பாகும். தனியொருவரே சகல தீர்மானங்களையும் எடுக்கக் கூடிய வகையில் அது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாமேயென்ற கொள்கையை அவர்கள் கொண்டுள்ளனர். அதனை நாம் ஏற்றுக் கொண்டால், வேறெந்த மாற்று அரசியல் கருத்துக்களுக்கோ அல்லது அரசியல் கட்சிக்கோ இடமில்லையென்றாகி விடும். இலங்கையில் வடக்கு - கிழக்கில் நிலைமை மிக மோசமாகியுள்ளது. பெரும்பாலான மக்கள் சாப்பிடுவதற்கே வாயைத் திறக்கிறார்கள். சூசக மொழியிலேயே அவர்கள் பேச வேண்டியுள்ளது. 1986ஆம் ஆண்டிலிருந்தே ஏனைய தமிழ் இயக்கங்களைத் தடை செய்யப் புலிகள் ஆரம்பித்தனர். அவர்கள் மிக மோசமான தாக்குதல்களை நடத்தி ஒன்றன் பின் ஒன்றாகத் தமிழ் இயக்கங்களை அழித்தார்கள். அவ்வமைப்புக்களின் பல நூற்றுக் கணக்கான உறுப்பினர்களை ஒவ்வொரு தடவையும் கொன்றார்கள். தமிழ்ப் பகுதிகள் மீது இலங்கை அரசு நெருக்கடிகளை ஏற்படுத்தத் தொடங்கியதிலிருந்து இன முரண்பாடு ஆரம்பமானது. தமிழ் மக்களின் விடுதலைக் காகப் போராட வேண்டுமென்று நானும் எனது சகோதரியும் நினைத்தோம். தீவிரவாதிகளை மறைத்து வைத்து, மருத்துவ உதவி அளித்தமைக்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, இலங்கை அரசினால் சிறை வைக்கப்பட்ட முதலாவது பெண் நான். மிகக் குறுகிய காலமே நான் புலிகள் இயக்கத்திலிருந்தேன். ஒவ்வொரு தடவையும் அங்கே ஒழுங்கீனமான செயற்பாடுகளைக் கண்டேன். அதற்கு எதிராகப் பேசினேன். பெரும் அடக்குமுறைச் சூழ்நிலையே அங்கு நிலவியது. தமிழ் மக்களை விடுவிக்கும் கனவு புலிகளால் புரிந்து கொள்ளப் படவில்லையென்பதை நான் உணர்ந்து கொண்டேன். இதனால்தான் நான் தப்பியோடி பிரிட்டனுக்கு வரத் தீர்மானித்தேன். புலிகள் இயக்கத்தை விட்டு விலகினால் வேறெந்த அரசியலிலும் ஈடுபட முடியாது. அப்படி ஈடுபட்டால் உங்கள் உயிரை இழக்க வேண்டிவரும். இலங்கை யில் இப்போது நடைபெறும் சமாதானப் பேச்சு வெற்றியளிக்குமென நம்புகிறேன். பரிபூரணமான ஜனநாயகச் சூழ்நிலை நிலவும் பட்சத்தில் எனது நாட்டுக்குச் செல்லவே விரும்புகிறேன் - இவ்வாறு அவர் கூறினார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### சுய விமர்சனம் செய்து கொள்ளுங்கள்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**உள்ளூராட்சிச்** சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பாக வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் திருப்தியடையவில்லை. பல வருடகாலமாகப் பின்னடைவு கண்டுவரும் வடக்கு, கிழக்கின் நிர்வாகச் செயற்பாடுகளை இன்னொரு ஆறு மாதத்துக்குத் தள்ளிப்போட்ட திருப்தியும், அதனூடாக தாம்தான் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று பிரசாரம் பண்ணி மலினமான அரசியல் லாபம் தேடுவதும் அருவருக்கத் தக்கது. இயல்பு நிலையையும் சுமுகமான சூழலையும் கட்டியெழுப்புவதில் அக்கறை கொண்ட மக்களுக்கு அரசின் இந்த முடிவும் பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது என்பதை ஜனநாயக விரோதிகள் புரிந்து கொள்ள வேண்டும். தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான இயல்பு நிலை உருவாக வேண்டும் என்று கூறும் எவரிடமும் வடக்கு, கிழக்கில் இயல்பு நிலையை உருவாக்குவதற்கான உழைப்பு இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக வடக்கு, கிழக்கின் சமகால நிலைமை ஜெனீவாப் பேச்சுக்கு முன்னர் இருந்ததை விட மோசமான சூழலை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவே இருக்கிறது.

கிழக்கில் குறிப்பாக அரச கட்டுப்பாடற்ற பகுதியில் புலிகளின் இரு பிரிவினரும் தமக்குள் தாக்குதல்களை நடத்துவதும், திருகோணமலையில் கடற்படை படகு மீது புலிகள் தாக்குவதும், அதற்குப் பதில் தாக்குதலை கடற்படையினர் நடத்துவதும், வவுனியாவில் கப்பம் அறவிடுவதில் ஏற்படக்கூடிய சர்ச்சைகளும், தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக வர்த்தகர்கள் படுகொலை செய்யப்படுவதும், அதுபோல யாழ்ப்பாணத்தில் புலிகளின் கொடியை ஒப்பந்த விதிகளுக்கு முரணாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஏற்றுவதில் ஏற்படும் தேவையற்ற முரண்பாடுகளும், பதற்றமான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன. இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் குதிரைமலை கடற் பிராந்தியத்தில் ரோலர் படகும், டோராப் படகும் வெடித்துச் சிதறிய சம்பவம், இன்னும் கிழக்கின் கிராமப் புறங்களில் கட்டாய ஆட்சேர்ப்புகளும், பயிற்சிகளும் தொடருவதானது மீண்டுமொரு நெருக்கடியான நிலையை தோற்றுவிக்கவே உதவியுள்ளது.

இதன் விளைவாக ஏப்ரல் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறாமல் போகலாம் அல்லது ஒத்திவைக்கப்படலாம் என்ற நிலையே அதிகரித்து வருகிறது.

படுகொலைகளுக்கும் தாக்குதல்களுக்கும் வழிவிட்டிருக்கும் ஒப்பந்தம் திருத்தி அமைக்கப்படாத விடத்து நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விரும்பத்தகாத சம்பவங்களை நிறுத்தமுடியாது என்ற உண்மை தற்போது பல தரப்பாலும் உணரப்பட்டுள்ளது.

அதை விடுத்து, ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவதும், யுத்தத்திற்கான அறை கூவலை விடுப்பதும், ஆத்திரமூட்டும் செயற்பாடுகளைப் புரிவதும் ஒழுங்கான யுத்த தவிர்ப்புக்கோ, சமாதானத்திற்கான நியாயமான அணுகுமுறைக்கோ, இயல்பு நிலைக்கோ, ஒரு காலமும் தோதாக அமையப் போவதில்லை. 'உத்தமர்கள் அடுத்தவர் மீது குற்றம் சாட்டுங்கள்' என்று சுய கட்டுப்பாட்டோடு நிலைமைகளை ஒவ்வொருவரும் அணுகுவது நல்லது. ஏனெனின் எவருக்கும் அந்த அருகதை இருப்பதாக மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. மாறாக வன்முறையோடும், படுகொலைகளோடும், விரும்பத்தகாத தாக்குதல்களோடும் தொடர்புடைய அனைவருமே கௌரவமான சமாதானத்துக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பரம விரோதிகள் என்பதே மக்களின் கணிப்பீடாக உள்ளது. இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு ஒவ்வொரு தரப்பும் அடுத்தவரின் அழுக்கை சுட்டிக்காட்டுவதற்கு முன்னர் தத்தமது அழுக்குகளைத் தேய்த்துச் சுத்தப்படுத்தினால் மட்டுமே வாய்ப் பேச்சில் மென்று விழுங்கப்படும் இயல்பு வாழ்வு மீண்டும் இம் மண்ணில் தோன்றும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அடுத்த கட்டப் பேச்சுக்குத் தடை போடுவது யார்?

***சகட்டு மேனிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்திக் கொண்டு மேசையிலிருந்து நழுவிப் போகும் தந்திரோ பாயங்களைப் புலிகள் கைவிட வேண்டும். அடுத்த சுற்றுப் பேச்சுகள் நடைபெறுமா? இல்லையா? என்பது வழமைபோல அந்தரத்தில் நிற்கிறது. பேச்சை இழுத்தடிப்பதா? இல்லையா? என்பது குறித்து முடிவெடுக்க வேண்டியவர்கள் புலிகள்தான். மக்களுக்குத் தேவை தமிழீழமல்ல. கௌரவமான உரிமையுடன் வாழக்கூடிய சமாதானம் என்பதைப் புலிகளால் புரிந்து கொள்ள முடியாவிட்டால், காலம் அவர்களுக்கு அதனைப் புரிய வைக்கும் என்பதே உண்மை.***

**அரசாங்கத்துக்கும்** புலிகளுக்குமிடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையை எதிர்வரும் 19ஆம் 21ஆம் திகதிகளுக்கிடையில் நடத்துவதென்று முதல் சுற்றுப் பேச்சில் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுமே இணக்கம் கண்டிருந்தன. இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கு இன்னும் மூன்று வாரங்கள் கூட இல்லை. இருந்தாலும் அடுத்த சுற்றுப் பேச்சு நடக்குமாவென்ற சந்தேகத்தைப் பல சம்பவங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. மூதூரிலும், திருமலை மஹிந்தபுரவிலும் கடற்படையினரும் புலிகளும் ஏட்டிக்குப் போட்டியாகத் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொண்டனரென்று தகவல்கள் வெளிவந்தன. இச் சம்பவத்தின் அலை வீச்சுகள், ஆடி அடங்குவதற்கு முன்னதாகவே கற்பிட்டிக்கு அப்பாலுள்ள குதிரைமலைக் கடற்பரப்பில் புலிகளின் படகொன்று வெடித்துச் சிதறியது. இச் சம்பவம், அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையை வெடித்துச் சிதறவைக்குமாவென்ற ஆதங்கம் பரவலாக எழுந்துள்ளது. கடற்படையினரின் டோரா படகொன்று வெடித்துச் சிதறி நீரில் மூழ்கியதாகவும், எட்டுக் கடற்படையினரைக் காணவில்லையென்றும் தகவல்கள் வெளிவந்தன. ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டிருந்த புலிகளின் படகைக் கடற்படையினர் சுற்றிவளைக்க முனைந்தபோதே வெடிபொருட்களை வெடிக்க வைத்து படகைச் சிதறடித்ததால் ஆறு புலிகள் பலியானார்களென்று படைத்தரப்பில் கூறப்படுகின்றது. இச் சம்பவம் தொடர்பாக அரசும் புலிகளும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருக்கின்றன. கடற்படையினரின் டோரா படகு மீது நடத்தப்பட்ட இத் தாக்குதலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது. இரு தரப்புகளுமே யுத்த நிறுத்த ஒப்பந்த உணர்வுகளை மதித்துச் செயற்பட வில்லையென்றும், இரு தரப்புகளுமே ஒப்பந்தத்தைப் போதியளவு மதித்து நடக்கவில்லையென்றும் கண்காணிப்புக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தவிர, வவுனியாவில் வர்த்தகர்கள் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இக் கொலைகள் தொடர்பாகவும் இரு தரப்புகளுமே பரஸ்பரம் குற்றஞ்சாட்டுகின்றன. கடந்த பெப்ரவரியில் இடம்பெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இன்று வரை நூற்றுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவென்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார். "இரு தரப்புகளுமே புகார்களைத் தெரிவித்திருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை சிறிய சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகளாகும். சில மிகைப்படுத்தப்பட்ட புகார்களாகும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். "யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குக் கூடியளவு புகார்களைத் தெரிவித்தவர்களென்ற பெயரைத் தட்டிக்கொள்ள இரு தரப்புகளுமே போட்டியில் ஈடுபடுவதைப் போல் தெரிகிறது" என்றும் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள உயர் தொழில்நுட்பக் கல்லூரி வளவுக்குள் புலிக் கொடி ஏற்றப்பட்டமையும் அதன் தொடர்ச்சியாக இராணுவத்தினர் உட்புகுந்து தாக்கினார்களென்ற குற்றச்சாட்டும் முறுகல் நிலையை ஏற்படுத்தியிருந்தது. இங்கும் இரு தரப்புகளுமே பரபஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொண்டன. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகொடியை ஏற்றுவது யுத்த நிறுத்த மீறலென்பது ஒப்பந்த விதி. புலிக் கொடியை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஏற்றும் விவகாரம் இன்று, நேற்று நடந்த சம்பவமல்ல. பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு புலிக் கொடிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், கொக்குவில் சம்பவத்தில் இராணுவத்தினர் ஒரு புதிய செய்தியைப் புலிகளுக்கும் புலி முகவர்களுக்கும் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, புலி கொடிகளை ஏற்றி, வீரப் பிரதாபங்களைக் காட்ட முன்வந்தால், இனிமேல் என்ன நடக்குமென்பதற்கு ஓர் எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்களென்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

லண்டனில் அன்ரன் பாலசிங்கமும் வன்னியில் தமிழ்ச்செல்வனும் மீண்டும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். கருணா தரப்பின் தாக்குதல்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதும் துணைப் படைகளென்று கூறப்படுபவைகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென்றும் எச்சரித்துள்ளனர். இல்லையேல் அடுத்த சுற்றுப் பேச்சுக்கு வரமாட்டோமென்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். துணைப்படைகளென்று கூறப்படும் எவையும் தமது கட்டுப்பாட்டில் இல்லையென்று அரசு அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கிறது. அதேவேளை மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை ஆயுதங்களால் அழித்தொழித்து வரும் புலிகள் இயக்கம், தமது ஆயுதங்களைக் கைவிடாதவரை ஏனைய இயக்கங்களின் ஆயுதங்களைக் களையுமாறு எவ்விதம் கோர முடியுமென்றும் அரசு கேள்வி எழுப்பியுள்ளது. அரசாங்கக் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் தம்மால் ஒன்றும் செய்ய முடியாதென்றும் அரசு கையை விரித்துள்ளது. அதாவது, கருணா தரப்பின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தி தம்மிடம் இல்லையென்பதே அரசின் பதிலாகும்.

இவை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான விவகாரங்கள் அல்லது இத் தரப்புகளோடு சம்பந்தப்பட்ட விவகாரங்களாகும். இவற்றோடு பேச்சுவார்த்தையைக் குழப்பியடிக்கக் கூடிய கருத்துக்கள், அரசாங்க தரப்புக்குள்ளிலிருந்தும் வெளி வருகின்றன. ஆனால், அவை வெறும் வெற்று வேட்டுகளாகவும் புஸ்வாணங்களாகவும் அடங்கிப் போய்விடக் கூடியவை. ஜாதிக ஹெல உருமய, ஜே.வி.பி. போன்றவை நோர்வேயின் ஏற்பாட்டாளர் பணிக்கு எதிராகக் கிளப்பும் கூச்சல்களே அவை. தேசத் துரோக நோர்வேயைப் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து வெளியேற்று என்று விமல் வீரவன்ச கத்துகிறார். நோர்வே 24 மணித்தியாலங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று ஜாதிகஹெல உறுமயவின் ரத்ன தேரர் கூச்சலிடுகிறார். நோர்வே மிக மோசமான தவறுகளை இழைத்திருக்கிறது என்பது உண்மைதான். புலிகளின் அங்கீகாரமின்றி நோர்வேயை ஏற்பட்டாளர் பதவியிலிருந்து விலக்க முடியாது என்ற உண்மையை இவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தது, நோர்வேயின் பணியை இன்னொருவர் ஏற்றாக வேண்டும். இது ஒரே இரவுக்குள் செய்து விடக்கூடிய காரியமல்ல. தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சி. எனவே வெறுமனே கலரிக்கு விசிலடிக்கும் தமது தந்திரோபாயங்களை விடுத்து, யதார்த்த நிலையை உணர்ந்து கொண்டு சிங்களத் தேசியக் கட்சிகள் நடந்து கொள்ள வேண்டும். 'குழப்பம் காய்ச்சிகளா' இந்தக் கட்சிகள் செயற்படக் கூடாது. ஏனெனில் சிங்கள இனவாதக் கூச்சல்களும் கற்பனாவாதக் கூப்பாடுகளுமே புலிகளுக்குத் தீனி போடுகின்றன என்பதை இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மாறாக, நோர்வேயைச் சரியான பாதையில் நடப்பதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். ஆனாலும் அரசாங்கப் பேச்சாளர், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியிருக்கும் கருத்து வரவேற்கத்தக்கது. "ஜனநாயக நாட்டில் பல கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். நோர்வேக்கு எதிராகக் கோஷங்களை எழுப்புவதற்கு ஜே.வி.பி.க்கும் ஜாதிகஹெல உறுமயவுக்கும் உரிமையுண்டு. ஆனால், நாம் அரசாங்கமென்ற வகையில் நோர்வேயின் பணியைத் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்" என்று அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்திருக்கிறார்.

எனவே, நோர்வேயின் தவறான சில அணுகுமுறைகளோ அல்லது செயற்பாடுகளோ அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தைகளைப் பாதிக்கப் போவதில்லை. அரசாங்க தரப்பும் கூடப் பேச்சுவார்த்தைக்கு வர மாட்டேனென்று அடம் பிடிக்கக் கூடிய நிலையில் இல்லை. புலிகளைக் கட்டுப்படுத்திப் பேச்சு வார்த்தை மேசையில் வைத்திருக்க வேண்டிய தேவை அரசுக்கு இருக்கிறது. நாட்டில் ஸ்திரமற்ற தன்மை ஏற்படக் கூடாது, யுத்தச் சூழ்நிலை ஏற்படக்கூடாது என்பதெல்லாம் அரசுக்குக் கட்டுப்பாடுகளை போட்டிருக்கின்றன. ஆனால், புலிகளைப் பொறுத்தவரை அந்த நிலையில் இல்லை.

வடக்கிலும், கிழக்கிலும் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் படையினர் மீதும் மக்கள் மீதும் தாக்குதல்களை நடத்திவிட்டு, நாம் தாக்கவில்லை, மக்களே தாக்குதல்களை நடத்தினரென்று கதையளப்பது அவர்களுக்குக் கைவந்த கலை. மக்களுக்கு ஆயுதப் பயிற்சியளிப்பதாகக் கூறி, வெறும் வாய்ப்பந்தல்களைப் போட்டு இராணுவத்தினரையும் அரசையும் உசுப்பி விடுவதும் அவர்களின் செயற்பாடுகள்.


நான்கு ஜனாதிபதிகள் சார்பில் புலிகளோடு பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரே இந்த நால்வருமாவர். இதில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவோடு புலிகள் உட்பட சகல தமிழீழக் குழுக்களும் தமிழர் கூட்டணியும் திம்புப் பேச்சில் பங்குபற்றின. ஜே.ஆரின் "விடாக்கொண்டன், கொடாக் கண்டன்" நிலைப்பாட்டினால் திம்புப் பேச்சு தோல்வியில் முடிந்தது. ஏனைய பேச்சுக்களைக் குழப்பியடித்தவர்கள் புலிகள் இயக்கத்தினர்தான். பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடனும் பேசினார்கள். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கையை முன்வைத்து இழுத்தடித்தார்கள். பூநகரி இராணுவ முகாம் அப்புறப்படுத்தப்பட வேண்டும், கிழக்கில் ஆயுதங்களுடன் நடமாடப் புலிகளுக்கு அனுமதியளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து சந்திரிகாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையைக் குழப்பினார்கள். ஜனாதிபதி பிரேமதாசாவோடு இணைந்து பேச்சுவார்த்தை நடத்தியது மட்டுமல்ல, இந்தியப் படையையும் வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றினார்கள். தமது தேவை முடிந்த பின்னர், ராஜிவ் காந்தியையும் கொன்று, பிரேமதாசாவையும் கொன்றார்கள். ஏனெனில் அவர்கள் தமிழீழத்துக்காகவே போராடுகிறார்கள். அதற்கான தயாரிப்புகளுக்காகவே பேச்சுவார்த்தையென்ற போர்வையைப் போட்டுக் கொள்கிறார்களென்று எழும் குற்றச்சாட்டுகளை நாம் மறந்துவிட முடியாது.

ஓர் ஆயுதமேந்திய இயக்கம், நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து, சமாதான மேசையிலும் போராடுவது நியாயமானது. ஆனால், எந்த அரசாங்கமும் வழங்க முடியாத கோரிக்கைகளை முன்வைப்பது பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையில்லாததால்தான். கருணா தரப்பு மட்டும் புலிகள் இயக்கத்தை விட்டுப் பிரிந்திருக்கா விட்டால், இப்போதைக்கு நான்காவது ஈழ யுத்தம் ஆரம்பமாகியிருக்கும். சர்வதேச சமூகம் யுத்தத்துக்குப் பச்சைக்கொடி காட்ட மாட்டாதென்பது புலிகளுக்கு நன்கு தெரியும். புலிகள் வயது குறைந்த பிள்ளைகளைப் பலாத்காரமாகத் தமது படையணிகளில் சேர்ப்பது உட்படப் பல அத்துமீறல்களில் ஈடுபடுகிறார்களென்று சர்வதேச அமைப்புகளும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கூறுகின்றன. அவர்களால் செய்யக் கூடியதெல்லாம் வெறும் கண்டன அறிக்கைகளை விடுவதுதான். இவற்றையெல்லாம் இலங்கை அரசு செய்திருந்தால், ஐ.நா.சபைக்கு விவகாரம் கொண்டு செல்லப்பட்டிருக்கும். தடைகள் விதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்.

இலங்கை படைத்தரப்பு, அத்துமீறல்களில் ஈடுபடாத 'சுத்தமான சூசையப்பர்கள்' என்று நாம் சொல்ல வரவில்லை. ஆனால், வெறும் சகட்டு மேனிக் குற்றச்சாட்டுகளை சுமத்திக் கொண்டு மேசையிலிருந்து நழுவிப் போகும் தந்திரோ பாயங்களைப் புலிகள் கைவிட வேண்டும். அடுத்த சுற்றுப் பேச்சுகள் நடைபெறுமா? இல்லையா? என்பது வழமைபோல அந்தரத்தில் நிற்கிறது. பேச்சை இழுத்தடிப்பதா? இல்லையா? என்பது குறித்து முடிவெடுக்க வேண்டியவர்கள் புலிகள்தான். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், சிலரைப் பல காலம் ஏமாற்றலாம். பலரைச் சில காலம் ஏமாற்றலாம். எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. தமிழ் மக்களுக்குத் தேவை தமிழீழமல்ல. கௌரவமான உரிமையுடன் வாழக்கூடிய சமாதானம் என்பதைப் புலிகளால் புரிந்து கொள்ள முடியாவிட்டால், காலம் அவர்களுக்கு அதனைப் புரிய வைக்கும் என்பதே உண்மை. ■

---

## ஊரிலிருந்து....



பழி ஒரு இடம் பாவம் ஒரு இடம் எண்டு ஒரு விஷயம் இப்ப கண்ணுக்கு முன்னாலேயே நடந்திருக்குது எண்டு சொல்லிக் கொண்டு மாஸ்டர் வந்தார். விளக்கமாய்ச் சொல்லுங்கோ மாஸ்டர் என்டன்.

உள்ளூராட்சித் தேர்தல் 30ஆம் திகதி நடக்குமெண்டு இருந்துது. இந்த நேரம் பாத்து 'அரசியல் பணி எண்ட பெயரில அவையளும் இல்லை. கம்பஸும் 3 மாதம் இழுத்து மூடியபடி. இதால சனத்திற்கும் அவையலிலையும் அந்த 21 பேரிலையும் கடும் வெறுப்பு. இப்படியே விட்டால் முழுச்சபைகளையும் ஜனநாயக்காரர் கைப்பற்றிப் போடுவினம். எலக்ஷனையும் பள்ளிக்கூடம் மாதிரி பகிஷ்கரிகக முடியாது.

பாத்தீச்சினம் புலிகள் வழமைபோல தங்கட பினாமிகள் ரெண்டு மூண்டு பேரை தாங்களே போட்டுட்டு நாட்டுப் பற்றாளர் ஆக்கிவிடுவம் எண்டு ஈஸ்வரன் தலைமையில் ஒரு கொஞ்சப்பேரை அனுப்பி வைச்சினம். ஆனால் எதிர்பாராதபடி எலக்ஷன் பின் தள்ளிவிட்டுது. கடந்த திங்கட்கிழமை இரவு சாவகச்சேரியிலபிஸ்டலோடை ஈஸ்வரனைக் கண்ட பினாமிகள் இரண்டு பேரும் குய்யோ முறையோ எண்டு கத்தி மெல்லவும் ஏலாம, விழுங்கவும் ஏலாம இப்ப அப்புடியே றெக்கோடை மாத்தி விட்டிச்சினம். பிறகென்ன மாத்திய றெக்கோடை போடத்தான் யாழ்ப்பாண பேப்பர் இருக்குதே வாசிக்கேல்லையோ எண்டு முடிச்சார் மாஸ்டர்.


# மாறி வரும் அரசியல் சூழலும் மலையகத்தில் உருவாகும் மாற்றங்களும்

அலசுவது
- மதியூகி -

**மலையகத்தில்** வாழும் தமிழ் மக்களை காலங் காலமாகத் தொழிலாளிகளாகவும் - அடிமைகளாகவும் மட்டுமே பார்த்தவர்கள் அவர்களை மனிதர்களாகப் பார்க்கத் தவறிவிட்டனர். தோட்டத் தொழிலாளர்கள் என்று அவர்களின் பட்டப் பெயராகவே மாற்றி விட்டார்கள். எல்லாத் தொழில் துறையிலுமே உழைப்பு சுரண்டப்படுகின்றது என்பதில் வேறு கருத்து இருக்க முடியாதுதான். அதற்காக சுரண்டலின் அடையாளமாக மலையக மக்களைக் காட்டுவதும், அந்த அனுதாபத்தில் அரசியல் ஆதாயம் தேடுவதும் துர்ப்பாக்கியமாகும்.

இந்த அடிமைச் சாசனத்தினை உடைத்து மலையக மக்களின் கௌரவம் பாதுகாக்கப்படுகின்ற விதமாகவே நாம் தோட்டத் தொழிலாளர்கள் என்பதைத் தவிர்த்து மலையகத் தமிழர்கள் என்ற சொற் பதத்தைப் பிரயோகிக்கின்றோம். அதுபோல் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு காணப்படுகின்றபோது மலையக மக்களின் கௌரவமான தீர்வு குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். இதற்கு இனப்பிரச்சினை வரலாற்றில் முக்கிய பேச்சுவார்த்தையாகக் கருதப்படும் திம்பு பேச்சுவார்த்தையில் கூட இலங்கைத் தமிழர்களுக்கான பிரஜா உரிமை தொடர்பான விடயம் பேசப்பட்டதன் விளைவாக மலையகத் தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை கிடைக்க வழிவகுக்கப்பட்டது.

இலங்கையில் இனப்பிரச்சினை தீவிரமடையத் தொடங்கியதும், வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வு சீரழிந்து அரசியல் செயற்பாடுகள் முடக்கப்பட்டுப் போனதும் ஒரு சமூகத்தின் மீது எத்தகைய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்பதை கண்கூடாக நிரூபித்துள்ளது. ஆனால் மலையகத்தில் யுத்தம் நடைபெறாத போதும், பாரிய இயற்கை அழிவுகள் நடைபெறாத போதும் குறிப்பிடக்கூடிய அபிவிருத்தியையோ, வளர்ச்சிப் போக்கையோ கண்டு கொள்ள முடியவில்லை. விதவிதமான வீரம் செறிந்த வாக்குறுதிகளை காலத்துக்குக் காலம் அள்ளி வீசிய எந்தவொரு அரசியல் தலைமையும், கொடுத்த வாக்குறுதியையோ, ஏற்ற மக்கள் பணியையோ திருப்தி தரும் வகையில் செய்து முடிக்கவில்லை. இன்று வரைக்கும் கூட லயன் காம்பராக்களில் மலையக தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பது இந்தக் குற்றச்சாட்டுக்குப் பெரும் ஆதாரமாக இருக்கின்றது. இது கூடப் பரவாயில்லை என்று எண்ணத் தோன்றும் மற்றுமொரு விடயம்தான் தோட்டங்களில் பரம்பரை பரம்பரையாகத் தற்காலிக இடங்களில் மக்கள் வாழ்ந்து வருவதும், தோட்டங்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது இருப்புக்கூட



நிரந்தரமில்லாமல் இன்னொரு தோட்டத்தைத் தேடி அலைவதுமான அவலமான வாழ்வாகும். இந்த நிலையிலும் அரசியல் கட்சிகளுக்காக சந்தா செலுத்துவதானது மிக வேதனைக்கும் நகைப்புக்குரியதுமாகும்.

மலையகச் சிறுவர்கள் தலைநகரை நோக்கி வேலை தேடிச் சென்று விடுகிறார்கள் என்பதைப் பற்றி முன்னரும் குறிப்பிட்டிருக்கிறேன். ஏன் இந்த நிலை? அந்தப் பிள்ளைகள் ஒழுங்காகக் கல்வி கற்பதற்கான கல்வி வசதியும், சமூகப் பாதுகாப்பும், வறுமையின் பிடியிலிருந்து தப்பிக்கும் வாய்ப்பும் ஓரளவேனும் இருக்குமாக இருந்தால் ஏன் அந்தச் சிறுவர்கள் தாய் தந்தையரைப் பிரிந்து, சுற்றம் சூழலைப் பிரிந்து, கல்வியை இடை நடுவில் கை விட்டுப் போக வேண்டும். இந்தக் கேள்வியின் விடைபற்றி ஆராய்ந்து தெரிந்து கொள்வதை விட்டுவிட்டு, போகிறார்கள்... போகிறார்கள்... என்று கூவிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இதுவரை காலமும் எத்தனை தேர்தல்கள் வந்தாயிற்றுஞூ அப்போதெல்லாம் எத்தனை விதமான வாக்குறுதிகள் தந்தாயிற்று என்பதைப் பற்றி

> *இந்திய அரசின் நேரடி உதவியும், அரசின் புதிய வேலைத்திட்டங்களும் மலையகத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகவே வாய்த்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி பொருளாதாரத்திலும், சமூகக் கட்டமைப்பிலும், கல்வியிலும் பின் தங்கியிருக்கும் மலையகத் தமிழர்களின் வாழ்வில் புதிய அத்தியாயத்தைக் கட்டியெழுப்ப அனைத்து அரசியல் சக்திகளும் முன்வரவேண்டும்.*

மக்கள் ஒரு நிமிடம் நிதானமாகச் சிந்திக்க வேண்டும். வாக்குப் போட்டு மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்வது, நாலைந்து அடி ஆட்களோடு, நாலைந்து வாகனங்கள் வந்திறங்கி வாக்குப் போட்ட மக்களிடமே வெற்று பந்தா காட்டுவதற்கும், பரபரப்பைக் காட்டுவதற்குமா? இல்லையே என்பதை வாக்களிக்கும் மக்களும், வாக்குப் பெறும் பிரதிநிதிகளும் சிந்திக்க வேண்டும். ஆனால் நிலைமை தலைகீழாக நடந்து வருகிறது. பருவகால நிலை மாறிவருவது போல், இந்த முறை யானையிலும், அடுத்தமுறை நாற்காலியிலும், இன்னொருமுறை வெற்றிலையிலும், இப்படி ஒன்றுக்குமே வாய்ப்பில்லாதபோது தத்தமது சொந்தச் சின்னங்களிலும் வாக்குக் கேட்டு வருவது ஒரு நடைமுறையாகி விட்டுள்ளது. இவை எதிலுமே மக்கள் நலன் சார்ந்த துணியளவு நோக்கமும் இல்லை. தனியே தத்தமது அரசியல் இருப்பும், சொகுசான வசதியும், எதிர்த்தரப்பு அரசியல் அமைப்புகளை நசுக்குவதும் தான் பிரதான நோக்கமாக இருக்கின்றது. இதன் தொடர்ச்சியாகவே தற்போதைய உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலிலும் மலையக அரசியல் சக்திகளின் போக்கு தொடர்கிறது.

ஜனாதிபதி மஹிந்த தொடர்ந்து பன்னிரெண்டு வருடங்கள் ஜனாதிபதியாக இருந்து விட்டால் தமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்ற ஒரே நோக்கம் மட்டுமே, தற்சமய அரசியல் களத்தில் பிரதான பாத்திரம் வகித்துள்ளது. புதிதாக தலையெடுத்துள்ள அரசியல் தலைமைகள் தம்மை ஓரம் கட்டி விடுவார்கள் என்ற பயமும் ஒரு காரணமாகிப் போனதால், கொள்கைகளையும், நம்பிக்கைக்குரிய அரசியல் நண்பர்களையும் உதறித் தள்ளிவிட்டு, பரம எதிரியாக வரிந்து கட்டிப் பிரசாரம் செய்து வந்தவர்களோடு கைகோர்த்துக் கொள்ள வைத்துள்ளது.

மேற்குறிப்பட்டவைகள் காரணங்கள் இல்லையென்றால் மலையக அரசியல் சக்திகளுக்குள் ஏன் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முடியாது போனது. பெரும்பான்மை சிங்களத் தரப்புடன் தேவை எனில் பகைமை பாராட்டவும், தேவை எனில் கைகோர்த்துக் கொள்ளவும் முடியுமானால் ஏன் தமிழர்களுக்குள்ளேயே ஒரு ஒற்றுமை காண முடியாது. இதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்க முடியும். அதாவது ஒவ்வொரு தமிழ் அரசியல் தலைமையிடமும், அது பழைய அரசியல் அமைப்பாக இருக்கலாம், புதிதாக வெட்டி முறிக்கப் போகிறோம் என்று புறப்பட்டவர்களாக இருக்கலாம் - தத்தமது சுய அரசியல் இலாபமும், தத்தமது சொகுசான இருப்பும் தான். இதுவே ஒருவரைக் கண்டு ஒருவர் பயந்து நடுங்குகின்றதன் காரணமாகவுள்ளது.

புதியவர்களோ, பழையவர்களோ எவராக இருந்தாலும், எந்த முகத்தை அணிந்து கொண்டு எந்தச் சின்னத்தில் வந்தாலும், என்ன கொள்கையைக் கொண்டிருப்பதாகப் பிரசாரம் செய்தாலும் ஒரே அரசியல் கோட்பாட்டில் வளர்ந்தவர்கள்தான் என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் வாக்களிக்கும் மக்களும், அந்த மக்களின் அவலம் நிறைந்த வாழ்க்கையும் என்றைக்கும் பழமையானதேயாகும்.

இந்திய அரசின் நேரடி உதவியும், அரசின் புதிய வேலைத்திட்டங்களும் மலையகத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகவே வாய்த்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி பொருளாதாரத்திலும், சமூகக் கட்டமைப்பிலும், கல்வியிலும் பின் தங்கியிருக்கும் மலையகத் தமிழர்களின் வாழ்வில் புதிய அத்தியாயத்தைக் கட்டியெழுப்ப அனைத்து அரசியல் சக்திகளும் முன்வரவேண்டும். கட்சிகளும், தலைமைகளும் தமக்குள் இருக்கும் குறுகிய - குரோத மனப்பான்மையை மறந்து தாம் சார்ந்த மக்களின் நல் வாழ்வுக்காகப் பாடுபட வேண்டும். சகதிக்குள் புதைக்கப்பட்டிருக்கும் அந்த மக்களின் வாழ்க்கையை மீட்கமுடியாமல் போகும் நிலை உருவாகுமானால் அதன் குற்ற உணர்வுகளும் மலையக அரசியல் சக்திகளை வாழ் நாளெல்லாம் வருத்திக் கொண்டே இருக்கப்போகிறது.

---

## அதிரடி அய்யாத்துரை



**கப்பலோட்டிய** தமிழன் எண்டு கேள்விப்பட்டிருப்பியள். ஆனால் கொடியேற்றின தமிழனைக் கேள்விப்பட்டிருப்பியளோ? அது வேற யாருமில்லையுங்கோ. சாட்சாத் கூத்தமைப்பு எம்.பி. குதிரைக் கஜேந்திரனார் தானுங்கோ. அரசாங்கத்தின்ர கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ள ரெண்டெழுத்தாரின்ர கொடியை ஏற்றக்கூடாதெண்டதுக்கு எதிரா இவர் யாழ்ப்பாணத்தின்ர தொழில்நுட்பக் கல்லூரியின்ர கம்பத்தில ஏத்தின வேகத்தில இறக்கி மடிச்சுக் கட்டிப்போட்டு வந்தவராம். உப்பிடியொரு வீரதீரச் செயலை தான் செய்தனான் எண்டால் தேசியத் தலைவர் நம்பமாட்டார் எண்டதாலை போட்டோ பிடிக்க கூடவே ரெண்டு பேரையும் கூட்டிக் கொண்டுபோய் தான் கொடி ஏத்தக்க போஸ் குடுத்தவராம். ஏன் உந்த வீரச்செயலை பேப்பர் காரர் போட்டோ பிடிக்காதபடி செய்தவரெண்டு கேட்டதற்கு பேப்பரில அப்புடியொன்று வந்துதெண்டால் அது இலங்கையின்ர இறைமையையும், சட்ட ஒழுங்கையும் மதிச்சு நடப்பன் எண்டு சத்தியப் பிரமாணம் செய்து எம்.பி. பதவி எடுத்ததுக்கு விரோதமாயிடும் எண்டாராம். அதுதான் சாட்சியில்லாமக் கொடியேத்தினவராம். தலைவர் பார்க்க மட்டும், போட்டோ அனுப்பி விட்டவராம். எம்.பி. பதவி பறிபோயிடக் கூடாதெண்டு வலு கவனமாக இருக்கிறாராம். இலங்கையின்ர இறைமையை மதிக்கிறார் எண்டால், தேசியத் தலைவரின்ர கொள்கையை மீறி, அவருக்குப் பேக்காட்டிப் போடலாமெண்டு நினைக்கிறாராக்கும். என்னவாவது செய்து போட்டுப் போகட்டும். நமக்கெதுக்குங்கோ ஊர் வமபு...

**கிழக்கில** பொங்குற மக்கள் படையெண்டவை தாங்கள் பொங்கப் போறம் எண்டு அறிவிச்சிருக்கினம். உவை முன்னம் ஒருக்கா பொங்கினதில சனம் என்னவிதமான நெருக்கடிக்கு முகம் கொடுத்திச்சினம், எத்தினை படுகொலைகளும், குண்டு வெடிப்புகளும் நடந் துச்சுது எண்டதை இவை மறந்திட்டினம் போலை. ஆனால் சனம் மறக்கயில்லையுங்கோ. உதையே மறுவலமாச் சொல்லுறதெண்டால் உத்தியோகப் பூர்வமில்லாமல் அரசியல் பணி ஆரம்பிக்கப் போகினம் போல இருக்கெண்டு சனம் சொல்லுது களாம். இதென்னடா தலையிடி எண்டு யோசிக் கேக்கையே இன்னொரு தலையிடி வந்துட்டு துங்கோ. அதாவது கூத்தமைப்புக்குச் சார்பாக யார் யார் வாக்களிச்சிச்சினம் எண்ட விபரத்தை இன்னொரு தரப்பு சேகரிச்சுக் கொண்டிருக்காம். அதுபோலை மற்றவைக்கு வாக்களிச்சவையின்ர விபரங்களை ரெண்டெழுத்தார் திரட்டினமாம். எதிரியை களத்தில சந்திக்கிறதை விட்டுப்போட்டு வாக்களிக்கிற மக்களைக் குறி வைக்கிறது கோழைத்தனமெல்லோவெண்டு சனம் திட்டினாலும் துவக்குத் தூக்கினவனெல்லாம் இண்டைக்குத் தேதியில் கோழையாத்தானே போயிட்டான் எண்டும் புதுத் தத்துவமும் சொல்லினமாமுங்கோவ்...

**கொஞ்சநாளாக** வவுனியாவில வர்த்தகர்கள் குறிவைக்கப்பட்டுக் கொண்டிருக்கினமே எண்டும் அதின்ர பின்னணி என்னவா இருக்குமெண்டும் விசாரிச்சதில சில திடுக்கிடும் தகவல்களும் வெளியால வருகுதுங்கோ.

கொல்லப்பட்டவையில சில பேர் ரெண்டெழுத்தாரின்ர முதலீட்டில பினாமியா பிஸினஸ் பண்ணித்தான் வர்த்தகர்களாக வளர்ந்தவையாம். அவைக்கு மாமனிதர் பட்டமோ அல்லது நாட்டுப்பற்றாளர் பட்டமோ நேரடியா வழங்க முடியாமல் போயிட்டுதே எண்டு ரெண்டெழுத்தார் கடுமையா வேதனைப் படுகினமாம். உந்த வேதனைதான் கூத்தமைப்பாரின்ர ஒப்பாரியில தெரியுது எண்டினம். சரி, அப்புடியெண்டால் இவையை யார் குறி வைக்கினம் எண்டு கேட்டால், ரெண்டு காரணம் சொல்லினமுங்கோ. அதாவது, கூத்தமைப்பார் கும்மியடிக்காத வர்த்தகர்கள் கொடுக்கல் வாங்கலில ரெண்டெழுத்தாருக்கு ஓட்டு மாட்டுப்பண்ணினவை எண்டும், மற்றவை முன்னாள் முதலாளிகளின்ர கோபத்துக்கு ஆளா னவை எண்டும் சொல்லிறதைக் கேக்கக்கேயே தலையைச் சுத்துதுங்கோ. கூத்தமைப்பார் போய் மாலை போட்டது ஒரே ஒரு வர்த்தகருக்குத்தான். அப்புடியெண்டால்... சே, எப்புடி யோசிச்சாலும் ஒண்டுமாப் புரியுதில்லையுங்கோ.

**காசு,** சொத்து, சுகம், உறவு எல்லாமே வந்தாலும் போனாலும், சாகும் வரைக்கும் கூடவே கற்ற கல்வி மட்டும் தான் நம்மோடையே இருக்கும் எண்டுவினம். ஒரு காலத்தில் யாழ்ப்பாணந்தான் கல்வியில 'நம்பர் வன்னா' இருந்துது. அதில ஒரு கர்வமும் இருந்திச்சுது. இண்டைக்கு நிலைமை அப்புடியே தலைகீழா மாறிப்போயிட்டுதுங்கோ. நாட்டில எங்க கல்விக்கூடங்களுக்கு அடிக்கடி மூடு விழா நடத்தினமெண்டால் யாழ்ப்பாணத்திலதான் எண்டு சொல்லிற அளவுக்கு மாணவர்களின்ர கல்வி விவரிக்க முடியாதளவுக்கு சீரழிக்கப்பட்டிருக்குதுங்கோ. போராட்டத்தையும், பொலிரிக்ஸையும் கல்விச் செயற்பாட்டுக்குள்ள திணிச்சதாலதான் உந்த நிலைமை தோன்றியிருக்கு. மாணவர்களை விட்டால் ஊருக்குள்ள அரசியல் பணி செய்யவோ, ஆர்ப்பாட்டம் செய்யவோ வேறை ஆக்கள் இல்லையெண்ட மாதிரியாக்கிப் போட்டினமுங்கோ. தொட்டதுக்கெல்லாம் பாடசாலை பகிஷ்கரிப்பு, வகுப்புப் பகிஷ்கரிப்பு எண்டு மாணவர்களின்ர கல்வியில கை வைக்கினமுங்கோ. பெற்றதுகள் பிள்ளைகளின்ர எதிர்காலத்தை நினைச்சு அழுதுகொண்டு திரியினமுங்கோ. உதே நிலை நீடிச்சால் எங்கட எதிர்கால சமூகம் ஊனமாகிப் போயிடுமுங்கோ. உரியவை யோசிங்கோ. பிளீஸ்...

**முன்னாள்** அதிகார அம்மணிக்கும் அவாவின்ர சகோதரனுக்கும் இப்பதானுங்கோ ஞானம் பிறந்திருக்கு எண்டினம். ஏன் அப்புடிச் சொல்லுறியள். அவை பரம்பரை பரம்பரையா அரசியல் செய்தவையாயிற்றே. சுதந்திரமான கட்சிகூட அவையின்ர குடும்பக் கட்சியாயிற்றே எண்டு கேட்டால், அரசியல் பரம்பரையெண்டதும் குடும்பக் கட்சியெண்டதும் உண்மைதானாம். அந்தக் கௌரவம் தங்களுக்கு வாழ்க்கை தரும் எண்ட நினைப்பு நயாப் பைசாவுக்கு உதவப் போறதில்லை எண்டதை அவை அப்ப புரிஞ்சு கொள்ளாமல் தலை கால் தெரியாம ஆடிச்சினம். இப்ப அதிகாரத்தில இருக்கிற மஹிந்தமானவர் செய்யிறதுதான் சரி, அவருக்கு மக்கள் ஆதரவளிக்க வேணும் எண்டெல்லாம் ஒப்பினா அறிக்கை விட்டுக் கொண்டிருக்கினம். இது அவைக்கு மட்டுமில்லையுங்கோ, உந்த மாதிரி ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிற எல்லாருக்கும் தானுங்கோ.

**எதிர்க்கட்சியில** இருந்தாலும் எப்புடி ஆளும் கட்சியோடை டீலைப் போடுறது எண்டதை சரியாப் புரிஞ்சு வச்சிருக்கிற ஒரே மனுசன் எங்கட மண்ணெண்ணெயார் தானுங்கோ. சும்மா சொல்லக்கூடாது. காரைநகரில இருந்த தன்ர வேரை ரெண்டெழுத்தார் புடுங்கி எறிஞ்சாலும் தலைநகரில தன்ர வேரை ஊண்டியே ஆகிறதெண்ட முயற்சியில மனிசன் திடமா இருக்கிறாருங்கோ. அதிகாரமானவரிட்டை ஒரு டீலைப் போட்டு அவரின்ர பெயரிலையே ஒரு தேசிய தமிழ்ப் பாடசாலை ஒண்டை வெள்ளவத்தையில கட்டுறதுக்குத் திட்டம் போட்டுட்டார்.

மேலகம் - கீழகம் எண்டு யார் என்ன சொன்னாலும் மண்ணெண்ணெயார் ஆழமான அத்திவாரத்தைப் போடுறது மட்டுமில்லாம செயலிலையும் காட்டிப்போட நினைக்கிறார். உவரின்ர திட்டம் நிறைவேற நாங்களும் ஒரு சபாஷ் போடுவம். நல்ல திட்டங்களை யார் செய்தாலும் பாராட்டுறதுதானுங்கோ நாகரீகம். ஓமோ..... இல்லையோ....




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

# மலையக நாடோடிப் பாடல்

ஒவ்வொரு முறையும் மலையக நாடோடிப் பாடல்களை தந்துவரும் நாம் இம்முறையும் பிரமிளா செல்வராஜா எழுதிய இந்த மலையக நாடோடிப் பாடலை உங்களுக்காகத் தருகிறோம்.

இப்பாடல் சிறு பிள்ளைகளின் சுவை மிகுந்த விளையாட்டை எமக்கு ஞாபகப்படுத்துகிறது. இப்பாடல்களின் சுவையோ தனி சுவைதான்.

தத்தக்கா புத்தக்கா
தவள சோறு
எட்டெரும எருமபாலு
தூக்கு மரத்துல துணி
கட்டி
சாந்தெடுப்பா வீராயி

பல்லி வந்து பரப்பரங்க
குண்டுமணி கூத்தாட
உங்கப்பன் பேர் என்ன?

முருங்கப் பூ (என மற்றக்
குழந்கை கூறும்)
முரங்கப் பூ திண்ணாம
முல்லந்தண்ணி குடிக்காம

குறத்தியம்மா
கையை எடுப்பியா
எடுக்கமாட்டாயா?

எடுக்க மாட்டேன் (என
மற்றக் குழந்தை கூறும்)

எடுக்காட்டி தார் தார்
வாழக்காய்
தையமுத்து வாழக்காய்
ஒரு கையை வச்சிக்கிட்டு
பூ போல ஒரு கையை எடு.

(தொடரும்)

# பத்திரிகையில் கற்றுக்குட்டிகளா?

**இரண்டு** வாரங்களுக்கு முன் ஒளிவீசும் அதன் வாராந்த பத்திரிகையில் தோல்விப் பயத்தில் ஜெயலலிதா என்ற தலைப்பில் கட்டுரை வரைந்திருந்தார்கள். அக்கட்டுரையை வாசித்த போது நடுநிலைமை தவறி வரையப்பட்டுள்ளது என்பது புலன் ஆகிறது. இதை தமிழ் ஈழமக்கள் மட்டுமன்றி தமிழக மக்கள் கூட சகிக்கமாட்டார்கள்.

இதை அறியாத்தனத்தில் எழுதினீர்களா அல்லது அறிந்தும் அறியாதவர் போல் எழுதீனீர்களா அக்கட்டுரையில் 91ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கே வந்திருக்க முடியாது. ராஜீவ் காந்தியின் மரணத்தால்தான் ஆட்சியைப் பிடித்தார் என்றும் காங்கிரஸ்காரர்கள் நினைத்திருந்தால் கூட்டணியை முறித்துக் கொண்டு தனித்துப் போட்டியிட்டிருந்தால் ஆட்சியமைக்கும் அளவுக்கு அமோக வெற்றி பெற்றிருப்பார்கள். ஆனால் அவர்கள் ஏலவே செய்து கொள்ளப்பட்ட கூட்டணி தர்மத்துக்கு ஏற்ப அரசியல் நாகரீகம் தெரிந்ததனால் அவ்வாறு கீழ்த்தரமாக நடக்கவில்லை என்று எழுதீனீர்கள்.

இவ் கருத்தை காங்கிரஸ் பிரமுகர்கள் கூட அறிந்திருந்தால் சிரித்திருப்பார்கள். அதிகால பதவி ஆசையால் பல குழுக்களா பிரிந்து குடும்பிச்சண்டை போடும் தமிழக காங்கிரஸ் இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடுவார்கள் காமராஜருடன் தமிழக காங்கிரசின் கதை முடிந்தது என்று உங்களுக்கு தெரியாதா?

அக்கட்டுரையில் மேலும் ஜெயலலிதாவை விட ஐயா கலைஞர் எவ்வளவோ மேல் என்று எழுதி இருந்தீர்கள். விடுதலைப் புலிகளை விமர்சிப்பவர் என்ற ஒரே காரணத்திற்காக தான் இதை எழுதினீர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். 91ஆம் ஆண்டில் ஜெயலலிதா ஆட்சியை பிடித்ததில் இருந்து புலிகளை விமர்ச்சிப்பது உண்மைதான். ஆனால் அதற்கு முன் புலிகளை வாயால் புகழ்ந்தது மட்டுமின்றி ஆக்கபூர்வமான செயற்பாடுகளை செயலில் செய்து காட்டினார். மற்றும் மக்களவையில் ராஜசபை எம்.பி.யாக இருந்த போது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சபையில் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் இன்றுவரை இச்செயலை செய்த ஒரே ஒரு தலைவர் இவர்தான்.

இன்று கலைஞர் வழிகாட்டலில் 12 அமைச்சர்கள் மத்திய அரசை அலங்கரித்த போதும் மன்மோகன் சிங்கின் அரசு இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் மானிய முறையில் வழங்கப்படும் அரிசியை நிறுத்திய போது இவ் 12 மத்திய அமைச்சர்களும் வாய்மூடி மவுனிகளாக இருந்தார்கள். மாறாக ஜெயலலிதா எந்த ஒரு மனிதாபிமானம் உள்ள மனிதர்களும் நாட்டை வீட்டை உறவுகளை விட்டு விட்டு உயிரை மட்டும் கொண்டு அண்டை நாட்டில் அடைக்கலம் புகுந்தவர்களை நாங்கள் இவ்வாறு பசி பட்டினியால் துடிக்க விடுவது அழகல்ல என்றும் மத்திய அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையால் ஒரு குறிப்பிட்ட நிதி இலங்கை அகதிகளுக்காக வழங்கப்படுவதையும் சுட்டிக்காட்டி கடிதம் அனுப்பினார் மன்மோகன்சிங் அரசுக்கு இதன் பலனாக நிறுத்தப்பட்ட அந்த உதவி மீண்டும் வழங்கப்பட்டது. இவ்வாறு எத்தனையோ காலமும் நேரமும் வரும் போது யார் மேலானவர் என்று தெரியவரும். ஆனால் இந்த கலைஞர் எங்களுக்காக என்ன செய்தார்?

96ஆம் ஆண்டு தமிழக முதல்வராக கலைஞர் கருணாநிதி வந்தபோது, எம் மக்கள் பட்டாசு கொழுத்தி மகிழ்ந்தார்கள். எமக்காக ஆக்கபூர்வமான காரியத்தை செய்வார் என்று நம்பினார்கள். ஆனால் மாறாக இலங்கைத் தமிழர்கள் விரும்பின் பிரிந்து போகும் உரிமை அவர்களுக்கு உண்டு என்று கூறிவிட்டு எட்ட நின்று வேடிக்கை பார்த்தார் கூறிய கருத்தையும் அரசியலுக்காக பின் மறுத்து அறிக்கைவிட்டார்.

மற்றும் தோல்விப் பயத்தால் ஜெயலலிதா வைகோவை அரவணைப்பதாகவும் தமிழக மக்களின் ஆதரவை பெறவுமே மகிந்தரயபஷ்வை சந்திக்க மறுத்தார் என்று எழுதினீர்கள்.

தமிழக அரசியலை தமிழீழ போராட்ட ஆதரவுத் தன்மை தீர்மானிக்காது. அவர்கள் இரண்டையும் வெவ் வேறாகவே பாக்கிறார்கள். இதற்கு எடுத்துக் காட்டு. விடுதலைப்புலிகளின் ஆதரபோக்குடைய வைகோவால் இன்றுவரை ஒரு ஆசனத்தையும் கைப்பற்ற முடியவில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?

மற்றும் வரும் சட்டமன்ற தேர்தலில் மக்கள் தீர்பால் அரசியலில் இருந்து ஜெயலலிதா காணாமல் போகப் போகிறார் என்று எழுதினீர்கள். 91ரம் ஆண்டில் இருந்து இதைத்தான் இலங்கை தமிழ்ப் பத்திரிகைகள் எழுதிக் கொண்டு இருக்கிறது.

காணாமல் போய்விட்டாரா? எத்தனையோ துன்பங்கள் துயரங்கள் அவமானங்களை சுமந்து விழ விழ எழும் பிணிக்ஸ் பறவையாகவல்லவா இருக்கிறார். இதை ஏன் மனம் ஏற்றுக் கொள்ள தயங்கிறது.

மற்றும் அரசியலில் ஜெயலலிதா ஒரு கற்றுக்குட்டி என்று எழுதி இருந்தீர்கள். உங்கள் கட்டுரையை வாசித்தவர்கள் எழுத்துலகில் நீங்கள் தான் ஒரு கற்றுக் குட்டி என்பதை அறிந்திருப்பார்கள். இரண்டு முறை அரசியல் ஆடுகளத்தில் பழுத்த அரசியல் வாதியான கருணாநிதியோடு முட்டி மோதி வெற்றிவாகை சூடியவர். மூன்றாம் முறையாக ஆடுகளத்தில் இறங்கியிருக்கிறார் மோதுவதற்காக இதுவேதான் தி.மு.க. - அ.தி.மு.க. கடசிக்களமாக இருக்கும்.

அ.தி.மு.க. உயிர்துடிப்புடன் இருக்குப்போதே தி.மு.க.வின் சுவாசத்தை நிறுத்துவதற்கு காய்நகர்த்தி உள்ளார் என்பதை வருகின்ற தேர்தல் முடிவுகள் நிறுபிக்கும்.

இரண்டாயிரத்து பதினொண்டில் சட்டசபை தேர்தலில் ம.தி.மு.க. அ.தி.மு.க.வுக்குமே போட்டியாக இருக்கும்.

இவ்வாறு அரசியல் முதிர்ச்சி கொண்ட ஜெயலலிதாவை அரசியலில் கற்றுக்குட்டி என்று கூறுவது நியாயமா?

மற்றும் தி.மு.க. தொண்டர்கள் தேர்தல் வெற்றிக்குப் பின் சட்ட சபையில் ஜெயலலிதாவை மீண்டும் உரிய கூட காத்திருக்கிறார்கள் என்று எழுதினீர்கள்.

எவ்வாறு இந்த கிழ்தரமான சொல்லை எழுத முடிந்தது பெண்மையை தெய்வமாக போற்றும் சமுகம் ஐயா நாங்கள் பெண்மை பெற்றேடுத்த மைந்தன் தானே நீங்கள்? அரசியல் நாகரிகத்தை பற்றி அறிந்த நீங்கள் பத்திரிகை நாகரீகத்தை அறியவில்லையா?

புலிகளை விமர்சிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை விமர்சித்து இல்லாதவற்றையும், கீழ்த்தரமாகவும் எழுதி காக்கா புடிக்கும் உங்கள் எண்ணத்திற்கு புனிதமான பத்திரிகைத் துறையை துஷ்பிரயோகம் செய்யாதிருங்கள்.

தமிழகத்தில் கூட ஜெயலலிதாவை எதிர்த்து அரசியல் செய்யும் அரசியல்வாதிகள் கூட அந்த அம்மா செய்வது பிழை என்றுதான் கூறிவார்கள். அம்மா என்று மரியாதையாக சொல்லுவார்கள். பதவிக்காக அல்ல அவருடைய வயசுக்காக. எனவே மக்கள் முகம் சுழிக்கும் அளவுக்கு எழுதுவதையும் நடுநிலமை தவறி எழுதுவதையும் தயவு செய்து நிறுத்துங்கள்.

*–காங்கேசன் மரிசுதன்.*

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி. **- ஆசிரியர்**

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.


உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):– murasu@sltnet.lk


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.


DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
067-2250349




## நவசித்தர் மாந்தீரீகம்

ஓம் குருவே நம: கர்ம வினைகளினால் தீய சக்திகளால் ஏற்பட்ட தீராத துன்ப துயரங்கள், வீட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டு பிரயாணத் தடை, காதல் பிரச்சினை, காதலர்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்ய, பிரிந்தவர் ஒன்று சேர, கணவன் மனைவி பிரச்சினைகள் தீர வேண்டாதவரை பிரிக்க, கிரக தோஷ நிவர்த்தி செய்து வீட்டில் லட்சுமிகரம் ஏற்பட, வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு கடல் கடந்து பலன் அளிக்கக் கூடியவாறு விசேடமாக செய்து கொடுக்கப்படும். இன்னும் அநேக காரியங்களுக்கு மட்டக்களப்பு பரம்பரை மஹா சக்தி உபாசகர் சித்த ஆயுள்வேத மாந்திரீக விஷ மருத்துவர்.

Dr.T.Murukuppillai (S.A.M.P.), Main Street, Pandiruppu - 01. Kalmunai. (Sri Lanka) Tel: 067 - 2224077, வெளிநாடு: 0094672224077







## மலையாள மாந்தீரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com




**கொங்கோ என்ற மத்திய ஆபிரிக்க நாட்டில், 'ஹெமா' என்ற இனக் குழுவின் சார்பாக ஆயுமேந்திப் போராடிய அமைப்பின் தலைவரான தோமஸ் லுபாங்கா என்பவர் 'ஹேக்'கிலுள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக நிறுத்தப்பட்டிருக்கிறார். வயது குறைந்த பிள்ளைகளைப் பலாத்காரமாக யுத்தத்துக்குத் திரட்டியது உட்படப் பல யுத்தக் குற்றங்கள், இவர் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. 'அஸோஸியேட்டட் பிரஞ் பிரஸ்' என்றழைக்கப்படும் ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**


தோமஸ் லுபாங்கா

# படையணிகளுக்குச் சிறுவர்களைப் பிடித்தவர் சர்வதேச நீதிமன்றில்!

**யுத்தத்தால்** சீரழிந்து போயிருக்கும் கொங்கோ ஜனநாயகக் குடியரசில், சிறுவர்களைப் போர் வீரர்களாகச் சேவையில் ஈடுபடுத்தியமைக்காகக் கைது செய்யப்பட்ட கிளர்ச்சித் தலைவர் தோமஸ் லுபாங்கா, கடந்த 20ஆம் திகதி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜரானார். இக் குற்றச்சாட்டின் பேரில் சர்வதேச நீதிமன்றினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முதலாவது நபர் இவராவார்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் வடக்கு, கிழக்குப் பகுதியில் அட்டகாசம் புரிந்த ஆயுதக் குழுவின் தலைவரே லுபாங்கா ஆவார். ஹேக்கில் இயங்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் மூன்று யுத்தக் குற்றங்களுக்காக இவர் விசாரணைக்காகத் தேடப்பட்டு வந்தார். பதினைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட விடலைப் பருவத்தினரை போர்வீரர்களாகச் சேர்த்துக் கொண்டாரென்றும் பலாத்காரமாகப் படையணிகளில் சேர்த்து வலுக்கட்டாயமாகப் போரில் தீவிரமாக ஈடுபடுத்தினாரென்றும் இவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

ஒரு சம்பிரதாயபூர்வ அடையாளமாகவே அவர் கடந்த 20ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அதாவது, லுபாங்காவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பற்றி அவருக்கு அறிவிப்பதற்காகவும் விசாரணை நடைபெறுவதற்கு முன்னர் அவரால் பிணை கோர அவருக்கு இருக்கும் உரிமை பற்றித் தெரிவிப்பதற்காகவுமே அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனவொழிப்புச் செயற்பாடுகள் பற்றிய வழக்குகளை விசாரிக்கக் கூடிய உலகின் முதலாவது நிரந்தர, சுயாதீனமான சர்வதேச நீதிமன்றம் இதுவாகும்.

ஹேக் நகருக்கு அண்மையிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விளக்கமறியல் நிலையத்துக்குக் கடந்த 17ஆம் திகதி லுபாங்கா இடமாற்றப்பட்டார்.

கடந்த வருடம் மார்ச் மாதம் இவர் கைது செய்யப்பட்ட பின்னர், கொங்கோவின் கின்சாசா நகரில் காவலில் வைக்கப்பட்டிருந்தார். பரந்த மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஐந்து வருட கால மோதல், 2003ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. அங்கு இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் பற்றி விசாரணை நடத்துமாறு கொங்கோ ஜன நாயகக் குடியரசின் ஜனாதிபதி ஜோசப் கபிலா, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைக் கோரியிருந்தார்.

கொங்கோ தேசபக்தர்களின் ஹெமா யூனியனென்ற


கொங்கோ விடுதலை அமைப்பினால் பிடிக்கப்பட்ட ஒரு சிறுவன்

இனரீதியிலான அரசியல் இயக்கத்தினதும் அதன் ஆயுதப் பிரிவான கொங்கோ விடுதலைத் தேசபக்த சக்திகள் என்ற அமைப்புக்கும் தலைவராக விளங்கியவர் லுபாங்கா. கொங்கோவின் வட கிழக்கேயுள்ள இருரி பிரதேசத்தில் தீவிரமாக இயங்கி வந்த ஆயுதக் குழுக்களில் லுபாங்காவின் ஆயுத அமைப்பும் ஒன்றாகும். போட்டி ஆயுதக் குழுக்களுக்கிடையில் மோதல்கள் மோசமாகப் பல வருடங்களாக இருரி பிரதேசத்தில் இடம்பெற்று வந்துள்ளன. மோசமான இன வன்செயல்களும் இங்கு இடம்பெற்று வந்திருக்கின்றன. இப் பிராந்தியத்திலிருக்கும் தங்கம் மற்றும் ஏனைய கனிஜ வளங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே பெரும்பாலும் மோதல்கள் இடம்பெற்று வந்துள்ளன.

1999ஆம் ஆண்டு முதல் இங்கு மோதல்கள் இடம்பெற்று வந்துள்ளன. ஹெமா ஆதிவாசிகளுக்கும் லெண்டு ஆதிவாசிகளுக்குமிடையிலான மோதல்கள் மற்றும் வன்செயல்களினால் இப் பிராந்தியத்தில் அறுபதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இறந்துள்ளனரென்று மனிதாபிமான அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இயற்கை வளங்கள் நிரம்பிய, ஆனால் வறுமையால் பீடிக்கப்பட்ட இந்த நாடு, பல வருடங்களாக இடம்பெற்று வந்த யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இப்போது அங்கே ஐக்கிய நாடுகளின் சமாதானப் படை நிலைகொண்டுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் அங்கு தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. நாற்பது வருடங்களுக்குப் பின்னர் நடைபெறவிருக்கும் முதலாவது ஜனநாயகத் தேர்தல் இதுவாகும். அதற்கான பணிகளில் ஐ.நா. அமைதிப்படை ஈடுபட்டுள்ளது.

இருரி மாகாணத்திலேயே லுபாங்கா கண்டுபிடிக்கப்பட்டார். இந்த மாகாணம் உட்பட கிழக்குப் பகுதியும் சுட் - கிவு மற்றும் நோர்ட் - கிவு ஆகிய பகுதிகள் இன்னமும் ஸ்திரமற்ற நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

# வடக்கு, கிழக்கு தேர்தல் ஒத்திவைப்பு
# ஜனநாயக விரோதச் செயல்

**வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமையானது, 'நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவனுக்கு உயிர்ப் பாதுகாப்பு வழங்க மறுப்பதைப் போன்றதாகும்' என்ற தலைப்பில் கடந்த 22ஆம் திகதி 'த ஜலண்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்ட ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

**பாதுகாப்பு** நிலைமை காரணமாக அம்பாறையையும் திருகோணமலையையும் தவிர வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை, தேர்தல் ஆணையாளர் ஆறு மாதங்களுக்குப் பிற்போட்டுள்ளார். புலிகளும் அவர்களது முகவர்களும் கூட அதே காரணங்களுக்காகத் தேர்தலைப் பிற்போடுமாறு கோரி வந்தனர். தேர்தலை நடத்தவதற்கு அடுத்த ஆறு மாதங்களுக்குள் நிலைமை முன்னேற்றமடையுமென்று எப்படித் தேர்தல் ஆணையாளர் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளாரென்பது விசித்திரமானது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர், யாழ். மாநகரசபைக்குக் கூடத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. சமாதான முன்னெடுப்பு, நிலைமையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட வழிவகுக்கவில்லை. மாறாக நிலைமை சீர்குலைவதற்கே வழிவகுத்துள்ளது.

புலிகளுக்கு மட்டுமே வடக்கு, கிழக்கில் தேர்தல்கள் தேவையில்லை. ஏனைய அனைவருமே ஜனநாயகம் புத்துயிர் பெற வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். அடிமட்ட மக்களின் விவகாரங்கள், அவர்களிடம் விடப்படுவதே சிறந்தது. அவர்களின் வாக்குகளை அவர்கள் பயன்படுத்துவதனூடாகவே அவர்களின் அதிகாரம் அவர்களுக்குக் கிடைக்கிறது. தேர்தல்களைத் தடுக்கும் எவருமே அவர்களின் அடிப்படை உரிமையினை மீறுகின்றனர்.

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் தேர்தல்களை நடத்தி, ஜனநாயகத்தை ஆட்சி பீடமேற்றுவதற்காக, அமெரிக்காவின் தலைமையிலான படைகள் அந்த நாடுகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்தி, அவற்றைக் கற்காலத்துக்கு இட்டுச் சென்றன. அவர்கள் தமது யுத்த முயற்சிக்குப் பல நூற்றுக்கணக்கான கோடி டொலர்களையும் பவுண்களையும் செலவழிக்கிறார்கள். விரோத மண் பரப்பில் பல்லாயிரக் கணக்கான துருப்புகளை வாழ்வா சாவா என்ற நிலைக்குத் தள்ளி விட்டிருக்கின்றார்கள். இவையெல்லாம் ஜனநாயகத்தைச் செயற்படுவதற்காக என்று அவர்கள் கூறிக் கொள்கிறார்கள். பெற்றோலுக்கான அவர்களது தீய நோக்குகளுக்கும் தாகத்துக்கும் அப்பால், இந்த நாடுகளின் ஜனநாயகமயப்படுத்தல் ஒரு நீண்ட தேவையாகக் கருதப்பட்டு வந்தது. யாராவது அதனைச் செய்துதானாக வேண்டும். ஆனால் தவறானவர்கள் அதனைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஜனநாயகமென்பது, ஒரு வகையில் பல விடயங்களை உள்ளடக்கியது. மனித உறுப்புகள், ஒழுங்காகப் பயன்படுத்தப்படவில்லையென்றால் பழுதடைவது போன்று, ஜனநாயகமும் பாதிப்படைகிறது. அது மிக அருமையாகவே மீளச் செயலாக்கம் பெறுகிறது. நீண்ட காலத்துக்கு ஜனநாயகம் அடக்கப்பட்டால், அது சர்வாதிகாரத்துக்கு அல்லது அராஜகத்துக்கு வழிவகுக்கும். இதற்கு ஈராக்கும் ஆப்கானிஸ்தானும் சிறந்த உதாரணங்களாகும். இதனால்தான், என்றுமே தேர்தல் நடத்தாமல் விடுவதைவிட, அத்துமீறல்களுடன் கூடிய தேர்தல் ஆயிரம் தடவைகள் மேலானதென்று கூறப்படுகிறது.

தென்னிலங்கையில் தேர்தல்கள் குறிப்பிட்டபடி நடத்தப்பட்டதால், ஜே.வி.பி. பயங்கரவாதத்திலிருந்து ஜனநாயகம் தப்பிப் பிழைத்தது.

1980களின் பிற்பகுதியில் நிலவிய சூழ்நிலைகள், எந்தவொரு தேர்தல் செயற்பாட்டுக்கும் உகந்ததல்ல. வாக்காளர்களைச் சுட்டுத் தள்ளுவதற்கு கொலைக் குழுக்கள் எங்கும் வெளிக் கிளம்பியிருந்தன. அவர்களில் விழிப்புணர்வு பெற்றவர்களும் கூட பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். அப்போதுதான் அவர்களது எஜமானர்கள் தாம் விரும்பியபடி வாக்கு மோசடிகளில் ஈடுபடலாமென்பதற்காக அதனைச் செய்தார்கள். வாக்களித்தவர்களின் தொகை மிகக் குறைவானதாக இருந்தது. வாக்குப் பெட்டிகளுக்குள் வாக்குச் சீட்டுகள் அள்ளிப் போடப்பட்டன. ஆனால், எவ்வளவுதான் தேர்தல்கள் மாசுபடுத்தப்பட்ட போதிலும், ஜனநாயகத்துக்கு மறு வாழ்வு அளிக்கப்பட்டது. துப்பாக்கிச் சன்னங்களுக்குத் துணிந்து முகங்கொடுத்து வாக்களித்தவர்களுக்கு, அவர்கள் எந்தக் கட்சி ஆதரவாளர்களாக இருந்தாலும் அவர்களுக்கே அந்தப் பாராட்டுப் போய்ச் சேரவேண்டும்.

ஜே.வி.பி.யும் புலிகளும் பல்வேறு வகைகளில் வித்தியாசமானவையாக இருக்கலாம். ஆனால், ஜனநாயகத்தை அழித்தொழிக்க விரும்புபவர்களின் விருப்புக்கேற்ப தேர்தல்கள் பிற்போடப்படக் கூடாதென்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். இலங்கையின் பிணக்கில் சம்பந்தப்பட்டிருக்கும் இணைத் தலைமை நாடுகள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளின் உதவி, புலிகளைத் தேர்தலுக்கு இணங்க் வைப்பதற்குப் பெறப்பட வேண்டும். 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை நடத்தவும், புலிகளின் முகவர்களைத் தேர்ந்தெடுக்கவும் முடியுமென்றால், (மிக மோசமான வாக்கு மோசடிகள் இடம்பெற்றன என்றபோதிலும்) இன்னுமொரு தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை நியாயப்படுத்த எவ்வித காரணமும் புலிகளுக்கு இல்லை. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று புலிகள் தம்மைக் கூறிக் கொள்கின்றனர். அப்படியானால், உலகத்துக்குத் தனது கூற்றை நிரூபிப்பதற்கும் தமது இலட்சியத்தை முன்னெடுப்பதற்கும் அவர்களுக்குத் தேர்தல் சந்தர்ப்பமளிக்கிறது. எவ்வாறாயினும், தேர்தல்கள் உரிய முறையில் கண்காணிக்கப்பட வேண்டும். ஏனைய தரப்புகளும் தேர்தலில் பங்குபற்ற அனுமதிக்கப்பட வேண்டும். நியாயமான முறையில் சகல வெற்றிகளையும் புலிகள் பெற்றால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதுதான். அவ்வாறானதொரு முடிவு ஏற்படும் பட்சத்தில், ஜனநாயக ரீதியாக அச் சபைகளை நடத்துவதற்குத் தேவையான சகல உதவிகளும் புலிகளுக்கு வழங்கப்பட வேண்டும். தீவிர அரசியலில் புலிகள் ஈடுபடுவதற்கும் புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவக் கோரிக்கையைக் கேலி செய்து விமர்சிப்பவர்களை மௌனிகளாக்குவதற்கும் இதுவே புலிகளுக்குச் சிறந்த வழியாகும்.

இலங்கை சம்பந்தப்பட்ட பெரும்பாலான விடயங்கள் விசித்திரமானவை. அதன் சமாதான முன்னெடுப்பும் அவ்வாறானதுதான். ஜனநாயகத்தையும் மக்களின் வாக்குரிமையையும் பேணுவதற்காகவே சமாதான முயற்சிகள் வழமையாக உதவுகின்றன. அவை ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்கின்றன. ஆனால், இங்கே சமாதான வழிமுறைகளால் முதலில் பாதிக்கப்பட்டிருப்பது தேர்தல்களாகும். பொலிஸ் போன்ற பல்வேறு அரசாங்க நிறுவனங்களையும் இந்தச் சமாதான வழிமுறை பாதித்துள்ளது. யுத்த காலத்தில் (1993இல்) ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா, கிழக்கு மாகாணத்தில் வெற்றிகரமாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை நடத்தினார். ஆனால், இன்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் இருக்கும்போது, அங்கே சில பகுதிகளில் தேர்தல்களை நடத்த முடியவில்லை. வடக்கு, கிழக்கில் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வருவதென்று அண்மையில் ஜெனீவாவில் இணக்கம் காணப்பட்ட பின்னரும் கூடத் தேர்தலை நடத்த முடியவில்லை. ஜெனீவாவில் அன்ரன் பாலசிங்கம், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வானளாவப் புகழ்ந்தமை ஆச்சரியத்துக்குரியதல்ல.


யுத்தத்தால் சலிப்படைந்துள்ள மக்களுக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கி, ஜனநாயகத்துக்கு மீண்டும் ஒளியூட்ட உதவ மறுப்பதானது, தண்ணீரில் அமிழ்ந்து கொண்டிருப்பவனுக்கு உயிர்ப் பாதுகாப்புக் கருவி வழங்க மறுப்பதற்கு ஒப்பானதாகும். அதனைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**“அய்யங்கார்** அய்யர் சண்டை உன் மாதிரி ஆசாமிகளாலயாவது ஓயட்டுமய்ய...” என்றார்.

“அய்யங்கார்களுக்குள்ளும் வடயலையா? தெக்கலையா?' என்று அடிபிடி நடக்குறது. உங்களுக்குத் தெரியமே அண்ணே!..... காஞ்சிபுரம் யானைக்கு என்ன நாமம் போடறதுன்னு, கேஸ் நடந்துதே... அதைப் பத்தி ஒரு பத்தி ஒரு கவிதை எழுதியிருக்கேன்... கேட்கறீங்களா?” என்றேன்.



“படிய்யா....” என்று பரவசத்தோடு சொன்னார் கவியரசர். அவரிடம், அப்போது படித்த கவிதையை இப்போது சொல்லுகிறேன்.

‘வட கலையா?
தென் கலையா?
வாதியும் பிரதிவாதியும்
வாய்தா மேல்
வாய்தா வாங்க -
வழக்கு
வருஷக்கணக்கா
நெடு நாட்களாய்...
நெற்றியில்
நாமமே இல்லாமல் -
நின்று கொண்டிருந்த
கோவில் யானை....
ஒரு நாள்
சங்கிலியை
அறுத்துக் கொண்டு
சொல்லாமல் கொள்ளாமல் -
ஊரை விட்டு
ஓடியே போயிற்று.
ஊர் பேசியது;
மதம் பிடித்ததால்தான்
ஓடியது என்று
உண்மையில்.....
மதம் பிடிக்காததால்தான் -
ஓடிப் போயிற்று
யானை..'

தொலைபேசியில் நான் சொன்ன கவிதையைக் கேட்டு கண்ணதாசன் விழுந்து விழுந்து சிரித்தார்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் என் படப் பாடல் ஒன்றைக் கேட்டு கண்ணதாசன் வியந்து பாராட்டிய நிகழ்ச்சியும் உண்டு.

எனது அருமை நண்பர் நடிகர் பெருந்தகை திரு.வி.கே.ராமசாமி அவர்களின் சகோதரர் திரு.வி.கே.முத்துலிங்கம் அவர்கள் ‘கண்மலர்’ என்று ஒரு படத்தை கிருஷ்ணன் பஞ்சு மேற்பார்வையில், என் அன்புச் சகோதரர் பட்டு டைரக்ஷனில் தயாரித்து கொண்டிருந்தார்.

திரு.கே.வி. மகாதேவன் இசையில் நான் இரண்டு பாடல்கள் எழுதி அவை படமாக்கப்பட்டும் இருந்தன.

இரண்டு பாடல்கள் திரு. கண்ணதாசன் எழுத வேண்டும் என்பதற்காக, எடுத்தவரை அந்தப் படத்தை கவிஞருக்குப் போட்டுக் காண்பித்தார்கள்.

அதில் என்னுடைய பாடல் காட்சி ஒன்றைப் பார்த்துவிட்டு.

“இந்தப் பாட்டு வரிகளை திருமுறை தேவாரத்திலே இருந்து எடுத்துப் போட்டீங்களா...?” என்று கண்ணதாசன், அருகில் அமர்ந்திருந்த திரு.வி.கே. முத்துராமலிங்கத்திடம் கேட்டார்.

“இல்லைண்ணே, இது நம்ம வாலி எழுதினது....” என்று முத்துராமலிங்கம் சொன்னவுடன் கவிஞர் ‘அப்படியா?’ என்று வியப்போடு கூறினார்.

அன்றிரவு தொலைபேசியில் என்னை அழைத்து, - “வாலி! உனக்கு என்ன விஸ்கி பிடிக்கும் சொல்லு.... உடனே அனுப்புறேன்” என்றார் கவியரசர்.

“என்னண்ணே; திடீர்னு இப்படி கேக்குறீங்க....” என்றேன் நான்.

“கண்மலர் படத்துல - பிரமாதமா ஒரு பாட்டை எழுதிட்டேய்யா.. அதுக்குத்தான்யா, விஸ்கி அனுப்பிற்று உன்னெ வாழ்த்துறேன்...” என்று சொன்ன கவிஞர், நான் எழுதிய முழுப்பாடலையும் வரி பிசகாமல் தொலைபேசியிலே சொன்னவுடன், என் பூர்வஜன்ம புண்ணியத்தை எண்ணி நான் புளகித்துப் போனேன்.

அந்தப் பாடல், திரு.கே.வி.எம். இசையமைத்து திரு. பாலமுரளி கிருஷ்ணா பாடியது. இந்தப் பாடல் பற்றி. சிலோன் ரேடியோவிற்காக என் நடிக நண்பர் திரு.எஸ்.வி.சேகரின் தந்தை, திரு.வெங்கட்ராமன் அவர்கள் தயாரித்தளித்த பேட்டியிலும், கண்ணதாசன் வரிகளைச் சொல்லியே பாராட்டிப் பேசியிருக்கிறார்.

(தொடரும்.......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....




### புகைப்படங்களின் பங்கு

**என்னுடைய** ஓவர் கோட்டில் இந்தக் கருவி பொருத்தப்பட்டதால், என்னை அவர்கள் கடுமையான சோதனைக்கு உள்ளாக்குவார்கள் என்று எதிர்பார்த்தேன். நான் ஒரு தந்திரம் செய்தேன். அந்த எலக்ட்ரானிக் கருவியை அப்புறப்படுத்தாமலேயே ஓவர் கோட்டை அணிந்து கொண்டு சென்றேன். என்னை யாராவது தொடர்ந்து வருகிறார்களா என தெரிந்து கொள்ளவும் நான் அக்கறை காட்டவில்லை.

“இப்படியே இரண்டு தினங்கள் கழிந்தன. ஓவர் கோட்டிலிருந்து எலக்ரானிக் கருவி அப்புறப்படுத்தப்பட்டு விட்டதை நான் கவனித்தேன். இது எப்போது நடந்தது? எப்படி நடந்தது என்று எனக்குத் தெரியாது. இரண்டு நாள் சோதனைக்குள்ளாகவே என் மீதுள்ள கண்காணிப்பை ரஷ்யர்கள் நீக்கியிருப்பார்கள் என்றும் எனக்குத் தோன்றவில்லை. ஆகவே மறுபடியும் என்னிடமிருந்து எல்லாப் பொருள்களையும் சோதனையிட்ட போது அந்த எலக்ட்ரானிக் கருவி என்னுடைய கைப்பெட்டியில் பொருத்தப்பட்டிருப்பதைக் கவனித்தேன். அடுத்த சில வாரங்கள் வரை என்னைச் சந்தேகிக்க முடியாதபடி நடந்து கொண்டேன். அந்தக் கருவி இடம் மாறிக் கொண்டே இருந்தது. மற்றொரு சமயம் அது என்னுடைய ப்ராவிலுள்ள ரப்பர் பகுதியில் இணைக்கப்பட்டிருந்ததையும் நான் கவனித்தேன்.”

சந்தேகப்படப் படுகின்றவர்களின் நடவடிக்கைகளை எலக்ரானிக் கருவி மூலம் எவ்வாறு கண்காணிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

ஒற்றர் வேலை பார்த்தலில் கேமராக்கள் வகிக்கின்ற பங்கு மகத்தானது. கேரி பவர்ஸ் சோவியத் யூனியனின் மீது பறந்த போது, அவனுடைய நோக்கம் அங்கிருந்த ஏவுகணை தளங்களைப் புகைப்படம் எடுப்பதாகும். மிக உயரத்தில் விமானத்தில் பறந்து அந்த வேலையினைச் செய்ய அவன் முயற்சித்தான். விண்வெளிக்கலங்கள் நடைமுறைக்கு வந்துவிட்ட பிறகு அவற்றில் பொருத்தப்பட்டுள்ள கேமராக்கள் தேவையான புகைப்படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன. பூமியின் எந்தப் பகுதியை மட்டும் புகைப்படம் எடுக்க வேண்டுமோ அந்தப் பகுதியை மட்டும் புகைப்படம் எடுக்கும்படியாக கம்பியூட்டர்கள் மூலம் விண்வெளிக் கலங்களுக்கு உத்தரவு கொடுக்கமுடியும். விண்வெளிக் கலங்கள் பருவ நிலைகளை கணிப்பதற்கும் விண்வெளி ஆராய்ச்சிகளை செய்வதற்கும் பயன்படுவதோடு உளவு வேலை பார்க்கும் சாதனங்களாகவும் இப்போது பயன்படுகின்றன.

கியூபாவில் சோவியத் ஏவுகணைத் தளங்கள் அமைக்கப்படுவதை அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடி அறிந்து கொள்வதற்கு விண்வெளிக்கோள்கள் எடுத்தனுப்பிய புகைப்படங்களே காரணமாக இருந்தன. உடனே அமெரிக்கர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்கி அமெரிக்கக் கண்டத்தில் ஏவுகணைப் போர் நடப்பதைத் தடுப்பது சாத்தியமாயிற்று.

ஒற்றர்கள் பயன்படுத்தும் கேமராக்கள் மிக மிகச் சிறியவை. கைக்கடிகாரத்தில் மறைத்து வைக்கக்கூடிய அளவிலும் சிகரெட் பெட்டிக்குள் ஒளித்து வைக்கக் கூடிய அளவிலும் மிகச் சிறியவை. குறைவான வெளிச்சத்திலும்கூட இவற்றால் புகைப்படம் எடுக்க முடியும். ஓசையே இல்லாமல் சினிமா படம் போலவும் மூவிப் படங்களை இந்தக் கேமராக்களால் எடுக்க முடியும்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# ஆட்டம்



**ஹொலிவுட்** சினிமா உலகில் லின்ட்சே லொஹான் எனும் பெயர் மிகவும் கவர்ச்சிகரமானது. இப்போது இவர் புதிய படமொன்றில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஜோன் எப் கென்னடியின் கொலை இந்தக் திரைப்படத்தின் பின்னணி கதையாகும்.

‘பொபீ’ (Bobby) என இத் திரைப்படத்துக்குப் பெயர் வைத்துள்ளனர். அண்டனி ஹொப்கின்ஸ், டெமீ மூவர்ஸ், சாரென் ஸ்டோன் போன்றவர்களுடன் இத்திரைப்படத்தில் இணையும் வாய்ப்பு கிடைத்ததுள்ளதால், லின்ட்சே இப்போது வானத்துக்கும் பூமிக்கும் இடையில் துள்ளி குதித்து வருகின்றார்.

திரைப்படம் வந்தால் தான் இவரது இந்தக் குதியாட்டம் தெரியவரும்.

# மிருகங்கள் வாழ்க!

**பெண்களுக்கு** மிருகங்கள் மீது இருக்கும் ஆர்வம் ஆண்களின் மீது இல்லையே என்று ஆதங்கப்படுபவர்களும் உண்டு.

உணவுக்காக மிருகங்களைக் கொல்லக் கூடாது என்றும் மருத்துவப் பரசோதனைகளுக்குக் கூட மிருகங்களைப் பயன்படுத்தக் கூடாது என்றும் இந்தப் பெண்கள் உலகநாடுகளில் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

இதில் எல்லாம் இவர்கள் ஆடைகளை எல்லாம் அவிழ்த்துப் போட்டுவிட்டே கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. மிருகங்களுக்கு ஆடைகள் பிடிக்காது என இவர்கள் நினைத்திருக்கவும் கூடும்.

நிர்வாணத்தின் மூலம் கூறினால் ஆண்களின் மனதுகளில் பதியும் என்றும் நினைத்திருக்கலாம்.

எப்படியோ, மிருகங்களின் தயவால் உலகில் பல்வேறு நாடுகளில் இவர்களது நிர்வாணப் போராட்டங்கள் நடந்ததால் பலருக்கு அது விருந்தாகவும் அமைந்துவிட்டது.

இதுவும் அப்படி ஒரு சங்கதி தான்.!



# நடனம்

இபஸ் பிரேஷில் என்றொரு இசை நடன நிகழ்ச்சி அண்மையில் லத்தின் அமெரிக்காவில் நடைபெற்றது.

பல்வேறு இசை மற்றும் நடனக் குழுக்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டன.

அதிலொரு இசை நடனமே இது...

பார்த்தால்... பரவசம்....




**ஜெனிபர்** எனிஸ்டன் ஹொலிவுட் நடிகைகளிடையே மிகவும் பிஸியான நடிகை. இதனால் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இவர் சிகிச்சைப் பெற்று வருவதாக ஓர் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதே நேரம் இவர் தனது முன்னாள் கணவரான பிரெட் பிட்டிடமிருந்து பிரிந்து சென்றதன் பின்னர் தனிமையில் விரக்தியடைந்த நிலையில் மிகவும் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த வருடம் இவர்கள் இருவரும் விவாகரத்து செய்து கொண்டனர். அதன் பின்னர் பிரட்டி, பிரபல நடிகை என்ஜெலினா ஜொலியுடன் சுற்றித் திரிய ஆரம்பித்துவிட்டார். தனது கணவரைப் பிரிந்துள்ள ஜெனிபர் அவர் பற்றிய நினைவுகளை மறக்க முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதாக அவரது நண்பர்கள் வட்டாரம் கூறுகின்றது. பிரிவுத்துயர் காரணமாக இவர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுவதில் உண்மை இருப்பதாக தெரியவருகிறது.



# சுதந்திரம்

**1998ஆம்** வருடம் தான் ரஷ்யா முதன் முதலில் தனது நாட்டுப் பெண்களை அழகுராணிப் போட்டியில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கியது.

இந்த வருடத்தில் மிஸ் ரஷ்யா இண்டர் நெஷனல் எனும் அழகு ராணிப் போட்டி ஒன்று இங்கிலாந்தில் நடைபெற்றது.

ரஷ்ய அரசாங்கத்திடம் அனுமதிப் பெற்று இப்பெண்களை அழைத்துச் சென்றவர் இலங்கை நாட்டவரான செபஸ்டியன் ஏ.சி.பெரேரா என்பவர்.

இப்பெண்களை முதலில் அனுப்பும் போது ரஷ்யா தனது கே.ஜி.பி. இரகசியப் பொலிஸாரையும் அனுப்பி வைத்திருந்தது. இந்தப் போட்டியில் 45 நாடுகள் கலந்து கொண்டன.

அதில் ஒரு காட்சி இது.

சுதந்திரம் கிடைத்த சந்தோஷம் ரஷ்யப் பெண்ணின் உடம்பில் தெரிகிறதல்லவா?

# பதவி ஏற்று 70 நாட்களிலேயே சுடப்பட்டார் ரீகன்

**ஆ**ங்கிலத் திரைப்பட (ஆலிவுட்) உலகில் பிரபல நடிகராக இருந்து அமெரிக்க ஜனாதிபதி ஆனவர் ரொனால்ட் ரீகன். அமெரிக்க அரசியல் வரலாற்றில் நடிகர் ஒருவர் ஜனாதிபதி ஆனது அதுவே முதல் முறை.

70 வயதான ரீகன், 1981ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஜனாதிபதி ஆனார். அவர் பதவி ஏற்ற 70 நாளில் மிகப் பெரியதொரு மரண போராட்டத்தைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.



மாநாடு முடிந்து வெளியே வருகிறார் ரீகன்.

## சுடப்பட்டார்

வாஷிங்டன் நகரில் உள்ள ஒரு ஓட்டலில் 31.03.1981 அன்று தொழிற்சங்க மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு ரீகன் வெளியே வந்தார்.

அவரை நிருபர்கள் சூழ்ந்து கொண்டு பேட்டி கண்டனர். நிருபர்களின் கேள்விகளுக்கு ரீகன் பதில் அளித்துக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் ஒரு மர்ம மனிதன் திடீரென்று ரீகனை நோக்கித் துப்பாக்கியால் சுட்டான். 6 முறை துப்பாக்கிக் குண்டு வெடித்தன. இதில் ஒன்று ஜனாதிபதி ரீகனின் இடது மார்பில் பாய்ந்தது.

ரீகனின் அருகில் நின்று கொண்டிருந்த அதிபரின் பத்திரிகை செயலாளர் ஜேம்ஸ் பிராடி மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் 2 பேரும், பொலிஸ்காரர் ஒருவரும் குண்டு தாக்கி காயம் அடைந்தார்கள்.

## 3 மணி நேரம் ஆபரேஷன்

பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பாக ரீகனை சூழ்ந்து கொண்டு அருகில் நின்ற குண்டு துளைக்க முடியாத காருக்குக் கொண்டு சென்றார்கள். பின்னர் அவரை காருக்குள் வைத்து கதவை அடைத்தார்கள்.


கார் மின்னல் வேகத்தில் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு விரைந்தது. ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை அருகில் உள்ள வாஷிங்டன் பல்கலைக்கழக ஆஸ்பத்திரிக்கு ரீகனைக் கொண்டு சென்றார்கள்.

அங்கு அவருக்கு ஆபரேஷன் நடந்தது. மார்பில் குண்டு பாய்ந்து இருந்ததால் அதை அகற்ற 6 அங்குல பகுதியில் ஆபரேஷன் செய்தார்கள். ஏறத்தாழ 3 மணி நேரம் சிகிச்சை நீடித்தது. இடதுபுற நுரையீரலில் (சுவாசப்பை) இருந்து குண்டு அகற்றப்பட்டது.

2 லீட்டர் இரத்தம் அவருக்குச் செலுத்தப்பட்டது.

## உடல் நிலை முன்னேற்றம்

ஆபரேஷன் முடிந்த சிறிது நேரத்தில் ரீகனுக்கு நினைவு திரும்பியது. ரீகன் உடல்நிலை திருப்திகரமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.



ரொனால்ட் ரீகன்

ரீகனுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் டென்னிஸ் ஓரியா கூறியதாவது :-

ரீகன் உடல்நிலை உறுதியாக இருக்கிறது. கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆஸ்பத்திரியில் 2 வார காலம் தங்கி சிகிச்சை பெறுவார். அதன் பிறகு 3 மாதங்கள் வரை ஓய்வு எடுக்கவேண்டும். இவ்வாறு டாக்டர் டென்னிஸ் ஓரியா தெரிவித்தார்.


இந்தக் கொலை முயற்சியில் ரீகன் அதிர்ஷ்டவசமாகவே உயிர் தப்பினார். குண்டு 4 அங்குலம் தள்ளிப் பாய்ந்து இருந்தால் ரீகனின் இதயத்தைத் தாக்கி இருக்கும். உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தி இருக்கும்.

## வேடிக்கைப் பேச்சு

ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்ற போதும் ரீகன் சுய நினைவுடன் நன்றாக இருந்தார். மனைவி நான்ஸி மற்றும் உதவியாளர்களுடன் சிரித்துப் பேசிக்கொண்டே ஆஸ்பத்திரிக்குள் நடந்தே சென்றார்.

ரீகன் சுடப்பட்டபோது அவரது 4 மகன்களும் வெளியூரில் இருந்தனர். தகவல் கிடைத்ததும் வாஷிங்டனுக்கு விரைந்து வந்து ரீகனை (தந்தை) சந்தித்தார்கள். அவர்களிடம் ரீகன் பேசும்போது, துப்பாக்கி குண்டு எனது இடது மார்பை துளை போட்டதுடன் அன்று நான் போட்டிருந்த புதிய சட்டையையும், கோட்டையும் நாசமாக்கி விட்டது என்று குறிப்பிட்டார்.

துணை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வாஷிங்டன் விரைந்து வந்து ரீகனை சந்தித்தார். ஆஸ்பத்திரியில் இருந்தபடியே ரீகன் தனது அலுவல்களைச் செய்தார். அரசாங்கச் சட்டம் ஒன்றில் கையெழுத்துப் போட்டார். உதவியாளர் உள்பட 4 பேர் காயம் அடைந்ததைக் கேள்விப்பட்டு ரீகன் கண் கலங்கினார்.



சுடப்பட்ட ரீகனை பொலிஸார் சூழ்ந்து கொள்கிறார்கள். (பின்னால், மர்ம மனிதனைப் பொலிஸார் பிடித்துக் கொண்டதையும் படத்தில் காணலாம்.)

## மர்ம வாலிபன் சிக்கினான்

ரீகனை 10 அடி தூரத்தில் நின்று மர்ம வாலிபன் சுட்டான். உடனே இரகசிய பொலிஸார் பாய்ந்து சென்று அவனை மடக்கிப் பிடித்து கைது செய்தார்கள்.

அந்த வாலிபன் பெயர் ஜான் வார்நோக் கிங்லி (வயது 25). அவன் மீது கொலை முயற்சி வழக்குப்பதிவு செய்து வாஷிங்டன் மாவட்ட கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். அவனிடம் நீதிபதி 4 நிமிடம் விசாரணை நடத்தினார். நீதிபதி கேட்ட கேள்விகளுக்கு அவன் ஆம் என்று பதில் சொல்லி சாதாரணமாகவே காணப்பட்டான். கிங்லி மற்றும் கோர்ட்டில் அரசு தரப்பில் வக்கீல் கூறியதாவது :-

## நாடோடி

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 9ஆம் திகதி நாஷ்வில் நகரில் கர்ட்டர் (அப்போதைய ஜனாதிபதி) தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிக்கொண்டு இருந்தார். அந்த இடத்துக்கு அருகே ஜான் கைது செய்யப்பட்டான். அவனிடம் இருந்து 3 கைத்துப்பாக்கிகளைப் பொலிஸார் கைப்பற்றினார்கள்.

கல்லூரி படிப்பைத் தொடராமல் நிறுத்தியபின் கிங்லி நாடோடி போல கடந்த 9 மாதங்களாகப் பல்வேறு ஊர்களில் சுற்றித் திரிந்தான். துப்பாக்கிகளைக் கண்டால் வாங்கி வைத்துக் கொள்கிறான். இவ்வாறு அரசாங்க வக்கீல் தெரிவித்தார்.

(தொடரும்)

# 2ஆம் உலகப் போர்

09

**அ**வர் கடைசி காலத்தில் இப்படி ஹிட்லருக்கு எதிராகத் திரும்பினாலும், முதலில் ஹிட்லருக்குப் பக்கபலமாக இருந்தவர். ஆகவே ஹிட்லரின் மனதில் இரக்கம் ஏற்பட்டது. "அவரை தூக்கில் போட வேண்டாம்" என்றார். கருணை தேய்ந்த குரலில் ரோமெல்



ஹிட்லர்

அதிர்ஷ்டசாலி, அவரை விடுதலை செய்ய உத்தரவிடப் போகிறார்ஹிட்லர் என்று எல்லோரும் நினைத்தனர்.

"அவருடைய பழைய சேவையை நினைத்துப் பார்த்து கருணை காட்டுகிறேன். அவரைச் சுட்டுக் கொல்ல வேண்டாம்; தூக்கிலிடவேண்டாம். விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்ள அனுமதியுங்கள்!" என்று கூறினார், ஹிட்லர். அதன்படி அவர் விஷயம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

அவரை இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்ய உத்தரவிட்டார் ஹிட்லர். ஹிட்லர் தோல்விப் பாதையில் சென்று கொண்டிருந்த அதே நேரத்தில் ஜப்பானும் தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்தது. உலப்போர் இன்னும் சில நாட்களில் முடிந்துவிடும் என்ற நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் திடீர் மரணம் அடைந்தார். நியூயோர்க் நகரில் 1882 ஜனவரி 30 ஆம் திகதி பிறந்தவர் ரூஸ்வெல்ட். இவருடைய தந்தை பெரிய பணக்காரர். உயர் கல்வி பயின்றபின், சட்டம் பயின்று வக்கீல் ஆனார். அப்போது அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது. அமெரிக்க மேலவை உறுப்பினரானார். அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த உட்ரோ வில்சன் அவரைக் கடற்படை உயர் அதிகாரியாக நியமித்தார்.


23ஆவது வயதில் திருமணம் நடந்தது. மனைவி பெயர் எவியனார். தனது 39 வயதில் ரூஸ்வெல்ட் ஒருநாள் மாலை குளிர்ந்த நீரில் குளித்தார். படுக்கைக்குச் சென்ற போது, அவருடைய கால்கள் மரத்துப் போய்விட்டதை உணர்ந்தார். டாக்டர்கள் வந்து பரிசோதனை செய்தனர். அவர் பக்கவாத நோயினால் தாக்கப்பட்டிருக்கிறார் என்பதை டாக்டர்கள் கண்டு பிடித்தனர். அவருடைய நெஞ்சில் இருந்து கால் வரை செயல் இழந்துவிட்டது. பயங்கர நோயினால் பாதிக்கப்பட்ட ரூஸ்வெல்ட், மனம் தளர்ந்துவிடவில்லை. டாக்டர்களின் யோசனைப்படி, பல பயிற்சிகளைச் செய்தார். ஊன்று கோல் உதவியுடன் நடக்கும் அளவுக்கு குணம் அடைந்தார். அவர் ஓட்டுவதற்கு ஏற்ற வகையில் ஒரு கார் தயாரிக்கப்பட்டது. இப்படி உடல் ஊனமுற்றபோதிலும், அவருடைய மதிநுட்பத்தால் அரசியலில் புகழ் பெற்றார்.

கவர்னராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது பல சிறந்த திட்டங்களை அமுல் நடத்தினார். மக்கள் மத்தியிலும் அரசியலிலும் அவர் செல்வாக்கு உயர்ந்தது. 1933இல், ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். ஒரு கோடியே 70 லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதுமட்டுமல்ல; தொடர்ந்து நான்கு முறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வரலாற்றுப் புகழ் பெற்றார். யுத்தத்தை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த ரூஸ்வெல்ட் 1945 ஏப்ரல் 12ஆம் திகதி மூளையில் ரத்தக்குழாய் வெடித்து மரணம் அடைந்தார்.

துணை ஜனாதிபதியாக இருந்த ட்ரூமன், ஜனாதிபதியாகப் பெறுப்பு ஏற்றார், ட்ரூமன். மிகுந்த திறமைசாலி, அரசியல் வியூகங்கள் வகுப்பதில் வல்லவர். யுத்தத்தில் ரூஸ்வெல்ட்டுக்கு முக்கிய ஆலோசனைகள் கூறி வந்தவர் அவர்தான். ரூஸ்வெல்ட் மறைவினால், போரில் அமெரிக்காவின் முன்னேற்றம் தடைப்படும் என்று பலர் எண்ணினார்கள். ஆனால் போரையே முடிவுக்குக் கொண்டுவரும் சக்தி படைத்தவதராக ட்ரூமன் விளங்கினார். "இரண்டாம் உலகப் போரில் மாவீரர்" என்ற புகழ் ரூஸ்வெல்ட்டுக்குப் பதிலாக ட்ரூமனுக்குத்தான் கிடைத்தது.

(தொடரும்)





# ஆத்திசூடி

## நெய்ய உரையேல்


நீ பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உபயோகியாதே.

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# இரும்புப் பெட்டி

நாடு காக்கும் அரசன் தனையந்த
நாட்டு ளோர் அரசென்றறி வார் எனில்,
பாடு தண்டைக் குழந்தை தனக்கிதம்
பண்ணும் அப்பன் இவனென் றறிந்திடும்

- சுப்பிரமணிய பாரதியார்



முன்னொரு காலத்தில் ஜான்வி என்ற நாட்டில் அதீதன் என்ற செல்வன் ஒருவன் இருந்தான்.

அவனுக்கு ஒரே மகன். ஆனால், அவனோ வஞ்சகனும், ஏமாற்றுக்காரனுமான திலீபன் என்பவனை நல்லவன் என்று நம்பினான். அவனைத் தன்னுடைய நெருங்கிய நண்பனாக வைத்துக் கொண்டான். திலீபன் பலமுறை தன்னை ஏமாற்றியதையும் அறியாமல் இருந்தான் அவன். அதீதன் தன் மகனிடம், 'திலீபன் நல்லவன் அல்ல; அவன் நட்பை விட்டு விடு' என்று அறிவுரை சொன்னான்.

'தந்தையே! என்னைப் பொறுத்தவரையில் திலீபன் நல்லவனாகவும், நேர்மையானவனாகவும் இருக்கிறான். அவன் நட்பை என்னால் விட முடியாது. மறுத்துப் பேசுவதற்கு என்னை மன்னித்து விடுங்கள்' என்றான்.

நாட்கள் சென்றன...

மகனை அழைத்த தகப்பனார், "நாம் இருவரும் வணிகம் செய்வதற்காகப் பக்கத்து நாட்டிற்குச் செல்ல வேண்டியுள்ளது. திரும்பி வர இரண்டு மாதம் ஆகும். நம்மிடம் உள்ள விலை உயர்ந்த பொருட்களை இந்தப் பெட்டிக்குள்

**பாப்பா முரசு சிறுகதை**

வைத்துப் பூட்டி உள்ளேன். சாவி என்னிடம் உள்ளது. இதை யாரிடம் நம்பிக்கையாகத் தந்துவிட்டுச் செல்வது? நீயே சொல்," என்று கேட்டான். உடனே அவன், "என் நண்பன் திலீபனிடம் தரலாம். அவன் நேர்மையானவன். பாதுகாப்பாகத் திருப்பித் தருவான்" என்றான்.

"சரி! உன் விருப்பப்படியே செய்," என்று பெட்டியை மகனிடத்தில் தந்தான் அதீதன். மிகவும் கனமாக இருந்த அந்தப் பெட்டியைத் தன் நண்பனிடம் தந்துவிட்டு வீடு திரும்பினான். தந்தையும் மகனும் திட்டமிட்டபடி பக்கத்து நாட்டிற்குச் சென்றனர். வணிகம் நல்ல முறையில் நடந்ததால் ஏராளமான லாபத்துடன் ஊர் திரும்பினர்.

மகனைப் பார்த்து, "நான் கொடுத்த பெட்டியை உன் நண்பனிடமிருந்து வாங்கி வா" என்றான் வணிகன்.

பெட்டியுடன் திரும்பிய மகன், "தந்தையே! வெறும் கல்லும் மண்ணாங் கட்டியும்தான் இந்தப் பெட்டியில் இருந்திருக்கிறது. என் நண்பனை அவமானப்படுத்த வேண்டும் என்றே இப்படிச் செய்திருக்கிறீர்கள்" என்று கோபத்துடன் கத்தினான்.

"மகனே! பொறுமையாகக் கேள்" பூட்டப்பட்ட பெட்டியையே உன் நண்பனிடம் தந்தேன். சாவி என்னிடம் உள்ளது. உன் நண்பன் நேர்மையானவனாக இருந்தால் பெட்டியைத் திறந்து பார்த்து இருப்பானா? இப்படிப்பட்டவனை நம்பி விலை உயர்ந்த பொருட்களைக் கொடுத்திருந்தால் என்ன ஆகும்? நீயே சொல்" என்று கேட்டார் தகப்பனார். உண்மையை உணர்ந்த மகன், "தந்தையே! என்னை மன்னித்து விடுங்கள். இனி உங்கள் அறிவே எனக்கு வழி காட்டட்டும். உங்கள் சொற்படியே நடப்பேன்" என்று சொன்னான்.

# அம்பிக் குஞ்சைப் பாருங்கோ



அம்மா இங்கே வாருங்கோ
அம்பிக் குஞ்சைப் பாருங்கோ
குஞ்சுக் காலால் உதைக்கிறான்
கொஞ்சி விட்டேன் பாருங்கோ.

அச்சாச் சிலேற்றுப் பாருங்கோ
அழகாய் ஆனா எழுதினேன்
தம்பி கொஞ்சிச் சிரிக்கிறான்
தாயே என்னை தூக்குங்கோ.

பாப்பா பாட்டுப் படிக்கிறேன்
பக்கம் இருந்து கேளுங்கோ
தூக்கம் கண்ணுள் வருகுது
தூக்கிச் சோறு தாருங்கோ.

# அதிசய உலகம்

## காட்டுத் தீ போல் தோன்றும் மலர்கள்



**விந்திய** மலைச்சாரலில் 'குட்டு முருக்கு' என்ற மரங்கள் காணப்படுகின்றன. இவை வசந்த காலத்தில் பிரகாசமான ஆரஞ்சு நிறத்தில் பூக்கின்றன. அடர்ந்த மரங்களுக்கு இடையில் ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான பூக்களைக் காணும்போது, திடீரென ஏதோ தீப்பிடித்து எரிவது போன்ற பிரமையை ஏற்படுத்துகின்றன. இராம பிரான் கூட இந்தப் பூக்கள் கூட்டத்தைக் கண்டு காட்டுத் தீயோ என பிரமித்துப் போனாராம், என்று இராமாயணத்தில் குறிப்பிடப்படுகிறது. ஆகவே இந்தப் பூக்களுக்கு காட்டுத்தீப் பூக்கள் என்ற பெயரும் உண்டு. இந்த மலர்களைப் பற்றி வேதத்தில் கூடக் குறிப்பிடப்பட்டுள்ளது.


## மிகப் பெரிய குடியிருப்பிடம்



**1859ஆம்** ஆண்டு ராவ் ஜோதா என்பவரால் உருவாக்கப்பட்ட ஜோத்பூர் 'நீல நகரம்' என்று அழைக்கப்படுகிறது.

வெளியில் படும் சூரிய வெப்பத்தைப் பிரதிபலித்து வீட்டின் உட்புறம் குளிர்ச்சியாக இருப்பதற்காக, இங்குள்ள பெரும்பாலான வீடுகள் நீலநிறத்தில் வண்ணம் பூசப்பட்டுள்ளதால், நீல நகரம் என்று பெயர் வந்தது. இந்த நகரத்தில் உள்ள 'உமெய்த்பவன்' எனும் கட்டடம் உலகிலேயே மிகப் பெரிய குடியிருப்பிடமாகக் கருதப்படுகிறது. இந்தக் கட்டடம் 26 ஏக்கர் நிலப்பரப்பில் 15 தோட்டங்களும் 347 விசாலமான அறைகளும் கொண்டது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 04.04.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 638**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 636

**பரிசுக்குரியவர்:**
எம்.ஏ.ஏ. நில்ஷாட்,
93/15, பெலியத்த வீதி, டிக்வெல்ல.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். லூர்த்மேரி, செல்லப்பர் தோட்டம், பாண்டிருப்பு - 01, கல்முனை. | எம்.ஏ.எஸ். கதீஜா, கொடபிடிய, அகுறஸ்ஸ. |
| ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | யோகராசா சிவரஞ்சினி, சரசாலை தெற்கு சாவகச்சேரி. |
| எஸ். நவீன், தரம் 2, யோசுவாஸ் நகர், தோட்ட வெளி, மன்னார். | சே. குகதாசன், ஆலையடி வீதி, வந்தாறுமூலை மேற்கு, செங்கலடி. |
| வை. பிர்ளா முஜாஹித், மக்குளூற்று, வெள்ளைமணல். | த. சிவதர்சினி, தரம் 7, 114, நாவலர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம். |
| திவாணி நவக்குமார், தரம் 3, 92 ஏ, வட்டாரந்தன்னை பெசேஜ், கண்டி. | டிவின்சன் டேவிட் ரவிக்குமார், கிங்ஸ்ரன் சர்வதேச கலாசாலை, கொழும்பு - 15. |

# உங்கள் பொது அறிவு எப்படி?

## உலக விவகாரங்களில் பிரசித்தி அடைந்தோர்

01. ஐருகெலஸ்கி - போலந்தின் ஜனாதிபதி.
02. சமோரா எம்.மச்செல் - விமான விபத்தில் உயிரிழந்த மொசாம்பிக் நாட்டின் ஜனாதிபதி.
03. ஜோக்கிம் கிகாகுனா - புதிய மொசாம்பிக் ஜனாதிபதி.
04. வண.ஜெசி யாக்கன் - அமெரிக்க கறுப்பின மனித உரிமைத் தலைவர்.
05. பொபி சாண்டஸ் - ஐரிஸ் புரட்சித் தலைவர். சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தவர்.
06. நெல்சன் மண்டேலா - தென்னாபிரிக்க மக்களின் உரிமைக்காகப் போராடியவர்.
07. ஒலோப்பாமே - வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சுவீடன் நாட்டின் பிரதமர்.
08. வோல்கொயிங்கா - 1986க்குரிய நோபல் சமாதானப் பரிசைப் பெற்றவர்.
09. ஐஸ்வாய லக்சுமிதேவி - நேபாள அரசி.
10. றிலிவாயறா லக்மன் - ஒபெக் நிறுவனத்தின் தலைவர்.





# குத்துச் சாதனை




**இங்கிலாந்தைச்** சேர்ந்த ஒருவர் உடலைத் துளையிட்டு மோதிரங்கள் 1015 ஐ மாட்டிக் கொண்டு ஏற்கனவே தன்னால் வைக்கப்பட்டிருந்த உலக சாதனையை முறியடித்துள்ளார். இவர் முதலில் திட்டமிட்டது 3000 மோதிரங்களைத் தனது உடலில் குத்திக் கொண்டு சாதனைபடைக்கவே. ஆனால், தான் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்றை நினைத்தது போல் நடந்து விட்டது. ஏனெனில் 1015 மோதிரங்களைக் குத்தியவுடனேயே இவர் மயக்கமாகி சரிந்துவிட்டார். ஆனாலும் ஏற்கனவே தன்னால் வைக்கப்பட்டிருந்த சாதனையை முறியடித்தார்.

# புலியும் பூனையும்



**ஷபினா** என்ற சின்னஞ்சிறு புலிக் குட்டியை அதன் தாய் விட்டுச் சென்ற நாளிலிருந்து பாலூட்டி அன்பு காட்டி வளர்த்து வருகிறது ஆர்ததி என்ற ஓர் பூனை. ஆனாலும் இப்புலிக்குட்டி வளர்ந்து தனது சுயரூபத்தைப் பெற்றதும் 'தன்னை வளர்த்த தாயின்' ஞாபகம் எந்தளவில் ஞாபகத்தில் இருக்குமோ தெரியவில்லை. பூனையின் விதி அவ்வாறு இருந்தால் யாரால் தடுக்க முடியும்.

# பனிப் போர்




**போர்க்** களத்தில் எதிரியுடன் போரிட்டு வெல்வது எப்படி இருந்தாலும் உடலைப் புல்லரிக்கச் செய்யும். ஆனால், கடுங் குளிருக்கு முகம் கொடுக்கப் பழகிக் கொள்வது பெரும் யுத்தமாகும். இது சீனாவின் க்சிங்ஜியெங் பிரதேசத்தில் அமைந்துள்ள டியென்ஷன் பயிற்சி முகாமில் இராணுவ வீரர்கள் கடுமையான போர் பயிற்சியை மேற்கொள்ளும் காட்சியாகும்.

# 24 கரட் கேக்



**பிறந்த** நாள் விழாவைக் கொண்டாடுவதற்கு கேக் வெட்டுவது சாதாண விடயமாகும். ஆனால், அவ்வாறான சாதாரண கேக் அல்ல இது. இப்புதுமையான கேக்கை அவுஸ்திரேலிய இசை மேதையான வுல்:ப் கென்ங் அமடியஸ் மோசாட் என்ற பிரபல இசைக் கலைஞனின் 250 ஆவது பிறந்த நாளுக்காகத் தயாரித்துள்ளனர் டோக்கியோவின் கின்ஷா தனாகா என்ற தங்க உற்பத்தியாளர்கள். இக்கேக்கை வடிவமைக்க 21 1/2 கோடி பெறுமதியான தங்க நாணயங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

# தோழா தோழா



**இந்தியாவின்** சென்னை நகரத்தில் சர்க்கஸ் குழுவின் அங்கத்தவர்களாக இருக்கும் ராமு என்ற குரங்கும் பாலு என்ற நாயும் தோழமையுடன் அன்பைப் பரிமாறிக் கொண்ட காட்சியே இது. எங்களைப் பார்த்தாவது இந்த மனித ஜென்மங்கள் திருந்தாதா என்று அவை மனதுக்குள் எண்ணிக் கொண்டனவோ என்னவோ?

# ஓரம்போ ஓரம்போ

**மொஸ்கோ** நகரில் வருடா வருடம் சம்பிரதாயப் பூர்வமாக பனிச்சறுக்கு விளையாட்டு நடைபெறுவது வழக்கம். இதில் பெரும் தொகையான மக்கள் ஆர்வமாகக் கலந்து கொள்கிறார்கள். இப்போட்டியில் கலந்துகொண்ட 20,000 போட்டியாளர்கள் ஒருவரது உடலில் ஒருவர் மோதி முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டதைக் கமராக் கண்கள் இவ்வாறு பதிவு செய்துள்ளது.






# திருமதியாகும் ரக்ஷிதா

சிம்புவுடன் தம், விஜய்யுடன் மதுர ஆகிய படங்களில் நடித்துள்ள, பிரபல கன்னட நடிகை ரக்ஷிதாவுக்கும், கன்னட இயக்குநர் பிரேமுக்கும் திருமண நிச்சயதார்த்தம் முடிந்துள்ளது.

பெங்களூரைச் சேர்ந்த ரக்ஷிதா, 'தம்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர். அதில் அரக்க பரக்க கவர்ச்சி காட்டினார். அந்தப் படத்திற்குப் பின் இங்கு சரிபட்டு வராததால் சொந்த ஊரான கர்நாடகத்துக்கே போனார்.

அங்கு கன்னடப் படங்களில் தொடர்ந்து நடித்தார். அவ்வப்போது தெலுங்கிலும் புகுந்து வெளியே வந்தார். நீண்ட இடைவெளிக்குப் பின் விஜய்யுடன் மதுர படத்தில் நடித்தார். அதில், மதுரை திருமலை நாயக்கர் மகால் தூண் மாதிரி பெருத்திருந்த ரக்ஷிதா கவர்ச்சியை அள்ளிக் கொட்டினார்.

அதில் பம்பரக் கண்ணு...பச்ச மிளகாய் என்று ஆட்டமாய் ஆடினார். ஆனால், அந்தப் படமும் தமிழில் காலூன்ற உதவவில்லை. இதையடுத்து மீண்டும் கன்னடம், தெலுங்கு எனப் புகுந்து விளையாடிய ரக்ஷிதா, நடித்த கலாசிபாள்யா, மண்டியா போன்ற கன்னடப் படங்கள் அதிரடி வெற்றி பெற்றன.

இந்நிலையில் ராஜ்குமாரின் மகன் சிவராஜ் நடிக்க, ஜோகி என்ற படத்தை இயக்கினார் பிரேம். வசூலில் கன்னடத்தில் புதிய சாதனை படைத்த படம் இது. இதனால் பிரேம் இப்போது முன்னணி இயக்குநராகிவிட்டார்.

இந்நிலையில் ரக்ஷிதாவுக்கும் பிரேமுக்கும் காதல் மலர்ந்தது. இவர்களது காதலுக்கு இரு வீட்டாரும் ஒப்புதல் அளித்துவிட்டனர்.

இதைத் தொடர்ந்து பெங்களூர் ஜெயநகரில் உள்ள ரக்ஷிதாவின் வீட்டில் நிச்சயதார்த்தம் நடந்தது.

நவம்பர் மாதத்திற்குப் பிறகு திருமணம் நடைபெறுமாம். அதற்குள் தனது படங்களை முடித்துவிட்டு சினிமாவுக்கு கும்பி போட ரக்ஷிதா முடிவு செய்துள்ளார்.

ஸ்வேதா என்ற இயற்பெயர் கொண்ட இவர், நடிகர் சூர்யாவின் மிகப் பெரிய பேன். "என்னமா இருக்காரு ஆளு - என்னமா நடிக்கிறாரு" என்று புகழ்ந்து வரும் ரக்ஷிதாவை மாதவனுடனும் தனுஷ் உடனும் இரு தமிழ்ப் படங்களில் நடிக்க பேச்சு நடந்தது.

ஆனால், இப்போது திருமணம் ஆகப் போவதால் அந்தப் ப்ராஜெக்ட்களில் இருந்து ரக்ஷ் விலகிக் கொண்டுவிடுவார் என்கிறார்கள்.



ரமேஷ்- மும்தாஜ் ஜெரி

# ஜோவின் 'மொழி'!

பிரகாஷ்ராஜின் சொந்தப் படத்தில் நடிக்கப் போகிறார் ஜோதிகா. அவருக்கு ஜோடியாக நடிக்கவிருப்பவர் பிருத்விராஜ்.

அவ்வப்போது சொந்தப் படம், அடிக்கடி வெளிப்படம் என லட்சியப் பாதையில் போய்க் கொண்டிருக்கும் பிரகாஷ்ராஜின் தயாரிப்பில் சமீபத்தில் வெளியாகி வெற்றி பெற்ற படம் 'கண்ட நாள் முதல்'.

லைலாவின் அட்டகாசமான நடிப்பில் உருவான இப்படத்தில் பிரசன்னா அவருக்கு ஜோடியாக நடித்திருந்தார்.



சுபா பூஞ்தா
ஒரு பொண்ணு ஒரு பையன்

கண்ட நாள் முதல் கொடுத்த வெற்றியால் சந்தோஷமாகிப் போன பிரகாஷ்ராஜ் அடுத்த படத்தைத் தொடங்கியுள்ளார்.

பாலசந்தரை வைத்து 'பொய்' என்ற படத்தைத் தயாரித்து வரும் பிரகாஷ், இப்போது தனது அடுத்த புதுப் படத்துக்கு 'மொழி' என்று அழகாகப் பெயரிட்டுள்ளார்.

இதில் ஜோதிகாதான் ஹீரோயின். ஹீரோ பிரசன்னா அல்ல, பிருத்விராஜ். மலையாள இளம் ஹீரோவான பிருத்விராஜ் மெல்ல மெல்ல தமிழில் காலூன்றி வருகிறார்.

மிக அழகான காதல் கதையாம் 'மொழி'. ஜோதிகாவிடம், பிரகாஷ்ராஜ் கதையைக் கூறியவுடன் உடனே நடிக்க சம்மதித்து விட்டாராம் ஜோ. இத்தனை அழகான கதையில் நடிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று சந்தோஷப்பட்டாராம்.

பிருத்விராஜுக்கு இது தமிழில் 3ஆவது படம். முதல் படம் கனாகண்டேன். இரண்டாவது படமான பாரிஜாதம் விரைவில் வரப் போகிறது. மொழிக்கு முன்னதாக அவர் புக் ஆன படம் சத்தம் போடாதே. அதில் அவருக்கு ஜோடியாக நடிப்பவர் பத்மப்பிரியா.

அதை வசந்த் இயக்கவுள்ளார். அது ஒரு த்ரில்லர் கதையாம். வழக்கமான தனது காதல் கதை பாதையிலிருந்து சற்றே விலகி, த்ரில்லரைப் படமாக்குகிறார் வசந்த்.

கல்யாணத்திற்குக் கொஞ்சம் டைம் ஆகலாம் என்று சூர்யா தரப்பில் கூறப்பட்டுள்ளதால், இப்போது அடுத்தடுத்து புதுப் படங்களை ஒப்புக்கொள்ள ஆரம்பித்திருக்கிறாராம் ஜோ.

# வாளை மீனு மாளவிகா

'சித்திரம்' பேசுதடி படத்தில் 'வாளை மீனுக்கும் வெலங்கு மீனுக்கும் கல்யாணம்' என்ற கானா பாட்டுக்கு செம குத்து குத்திய மாளவிகாவுக்கு ஏகப்பட்ட பட வாய்ப்புகள் வந்து குவிய ஆரம்பித்துள்ளன.

அத்தனையும் அட்டகாச குத்து என்பதால் என்ன செய்வதென்று தெரியாமல் சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போயுள்ளார் மாளவிகா.

சென்னையின் பிரபலமான கானா பாட்டுக்காரர் 'கானா' லோகநாதன். ஏற்கனவே சில படங்களில் மீன்களை அடிப்படையாக வைத்து கானாப் பாட்டுக் களை எழுதிப் பாடியிருந்தாலும், சித்திரம் பேசுதடியில் பாடிக் கொண்டே நடித்தும் அசத்தியிருக்கிறார் லோகநாதன்.

கறுப்பு உருவம், கண்ணை அடிக்கும் மஞ்சள் ஜிகினா சட்டை, பட்டு வேட்டி, இரவிலும் ஒரு கூலிங் கிளாஸ், சலூன் கடைகளில் மாடலுக்கு வைத்திருப்பார்களே, அது மாதிரியான அந்தக் கால டிஸ்கோ ஹேர் ஸ்டைல், கையில் ஒரு பிரேஸ்லெட்.

வெள்ளை செருப்பு சகிதம் உடம்பை ஸ்டிப்பாக வைத்துக்கொண்டு, ஆற்காடு வீராசாமி மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு, இரண்டு மணிக்கட்டுகளை மட்டும் ஆட்டி ஆட்டி, டி.எம்.எஸ்., மலேசியா வாசுதேவன் குரலைக் கலந்துக் குல்பி ஐஸ் குரலில் இவர்கள் பாடி நடித்த 'வாளை மீனுக்கும் வெலங்கு மீனுக்கும் கல்யாணம்' பாடல் தான் இப்போது எல்லா டி.வி. க்களிலும் டாப் டென்னில் முதலிடத்தில் நங்கூரம் பாய்ச்சி நிற்கிறது.



அஸின்
காட் பாதர்

சி னி மா

கூடவே பாடலில் இவருக்கு மைக் பிடிக்க ஒரு 'அக்குணி'. லோகநாதனை விட அதிக ஸ்டிப்பாக மைக்கை முறைத்தபடியே நிற்க, களை கட்டியது பாட்டு.

இந்த இருவரும் பாடலுக்கு அழகு சேர்க்க, காட்சிக்கு அழகு சேர்த்தார் மாளவிகா. மஞ்சள் சேலையை ஏத்திக் கட்டி, அங்கம் எல்லாம் சேத்துக் காட்டி, குதித்துக் குதித்து மெட்டுக்கு ஏத்தபடி வெட்டி, வெட்டி குத்தாட்டம் போட்டார் மாளவிகா.

பாடலை படமாக்கிய விதமும் ரொம்பப் புதுமையாக இருக்க, செம பேமஸாகிவிட்டது வாளை மீனுக்கும், வெலங்கு மீனுக்கும்...பாட்டு. லோகநாதன் பாடும் தோரணையைப் பார்ப்பதா? சைடில் குத்தி எடுக்கும் மாளவிகாவைப் பார்ப்பதா? என்று பாடலைப் பார்க்கும் அனைவரையும் சந்தோஷமாய் குழப்பியது பாடல்.

தொலைக்காட்சி சேனலை திருப்பினாலும் வாளை மீன் பாட்டுதான்.

இந்த ஒரே பாட்டின் மூலம் மறுஜென்மம் எடுத்துவிட்டார் மாளவிகா.

ஹீரோயினாக ஒரு காலத்தில் கோலிவுட்டை வலம் வந்த மாளவிகா திடீரென இந்திக்குப் போனார். அங்கு சி யூ அட் 9 என்ற படத்தில் பலான காட்சிகளில் பயங்கரமாக நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

அதே வேகத்தில் சித்திரம் பேசுதடியில் வாளை மீன் பாட்டுக்கு புக் ஆனார். இந்தப் பாட்டில் மாளவிகாவின் டான்ஸும், வெட்டும் இரசிகர்களைக் கட்டிப்போட்டுவிட்டது.

பாடலுக்கேத்த மாதிரி மீன் போல துள்ளி விளையாடினார் மாளவிகா.

மீன் பாட்டின் வெற்றியால் ஏகப்பட்ட வாய்ப்புகள் மாளவிகாவுக்கு வந்தவண்ணம் உள்ளனவாம். எல்லாம் குத்துப் பாட்டுக்களாக இருப்பதால் இதை எப்படி டீல் செய்வது என்று குழம்பிப் போயுள்ளாராம் அம்மணி.

பேசாமல், குத்தியே கோலிவூட்டில் காலத்தைக் கடத்தி விடலாமா என்று பலமாக யோசித்து வருகிறாராம் மாளவிகா.

இந்த யோசனைக்கு மத்தியில் 'வெடக்கோழி' என்ற படத்தில் ஹீரோ விமலுடன் சேர்ந்து ஒரு குத்துப் பாட்டில் குத்திக் குதறியுள்ளார். இதில் வெடக்கோழியாக (ஹீரோயினாக) நடிப்பது மும்தாஜ்.



பார்த்திபன் - நமீதா
பச்சக் குதிர



ஜீவா - நயன்தாரா




# ஜில்... காதலில் மீனாள்

**தவமாய்** தவமிருந்து படத்தில் வாயாடி மருமகளாக நடித்த மீனாளுக்கு அடுத்ததாக ஜோதிகா - சூர்யாவுடன் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்துவிட்டது.

திருப்பூர் பக்கம் டெக்ஸ்டைல் பிஸினசில் கொடி கட்டிப் பறக்கும் குடும்பம் மீனாளுடையது. வசதிக்குக் குறைவில்லாத குடும்பம். ஆனால், மீனாளுக்கோ சினிமா பைத்தியம் பிடித்துவிட, அவரை அதிலிருந்து மீட்க வீட்டில் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார்களாம்.

ஆனால், ஒரே ஒரு படத்திலாவது நடிச்சுட்டுத் தான் கல்யாணம் பண்ணுவேன் என்று மீனாள் அடம்பிடிக்கவே, அவருக்கு சென்னையில் சினிமா புள்ளிகள் மூலம் வாய்ப்புத் தேடினார்கள். அப்படி வந்ததுதான் சேரனின் தவமாய் தவமிருந்து பட வாய்ப்பு.



சந்தீப் - சுபா பூஞ்ஜா
ஒரு பொண்ணு ஒரு பையன்

அதில் நன்றாகவே நடித்து நல்ல பெயர் வாங்கினார் மீனாள். இதைத் தொடர்ந்தும் பட வாய்ப்புகளை எதிர்பார்த்தவருக்கு உடனே ஏதும் வரவில்லை. இதனால் கல்யாணமா...தொடர்ந்து சினிமாவா என்ற 'டைலமாவில்' இருந்தார்.

இந்நிலையில் தான் ஜோதிகாவிடம் இருந்து நள்ளிரவில் போன் வந்திருக்கிறது மீனாளுக்கு. நானும் சூர்யாவும் நடிக்கிற ஜில்லுனு ஒரு காதல் படத்தில் நடிக்கிறீங்களா என்று கேட்டிருக்கிறார்.

சூர்யா படத்துலயா...என்று வாய் பிளந்த மீனாள், நான் ரெடி என்று உடனே ஒப்புக் கொண்டாராம். இந்தப் படத்தில் ஜோதிகாவின் தோழியாக நடிக்கிறார். முதலில் இந்த ரோலில் நடிக்க ஆட்டோகிராப் மல்லிகாவைத் தான் கேட்டார்களாம்.

அவர் அஜீத்தின் 'பரமசிவனில்' பிஸி என்பதால் மீனாளை முடிவு செய்தார்களாம் ஜோதிகாவும் சூர்யாவும். இந்தப் படத்தைத் தயாரிப்பது சூர்யாவின் உறவுக்காரர் என்பதுதான் தெரியுமே.



மீனாளுக்கு தமிழ், தெலுங்கு, இந்தி தவிர சௌராஷ்டிர மொழியும் தெரியுமாம். மீனாளின் சொந்த ஊர் மதுரையாம். இவரது குடும்பத்தினர் தொழில் செய்வதுதான் திருப்பூரிலாம். மீனாளும் சும்மா இல்லை, டெக்ஸ்டைல் என்ஜினியரிங் படித்திருக்கிறார்.

இந்நிலையில் சினிமாவோடு அப்படியே தன் குடும்பத்து டெக்ஸ்டைல் பிஸினஸை சென்னையிலும் விரிவாக்கத் திட்டமிட்டுள்ள மீனாள். தானே அதை முன்னின்று நடத்தவும் போகிறாராம்.

பரவாயில்லையே...நல்ல தெறம இருக்கே.

## பூஜா - பறந்து... பறந்து...!

**பூஜா** படு பிஸியான லேடியாகி விட்டார். வேகமாகப் போய்க் கொண்டிருந்த பூஜாவின் கேரியர் வேகத்திற்கு பிரேக் போடுவது போல பெங்களூர் விபத்து நடந்து விட்டது. அதிலிருந்து மீண்ட அவர் மீண்டும் நடிக்க வந்து விட்டார்.

விபத்துக்கு முன்பு நடித்துக் கொடுத்து சமீபத்தில் வெளியான தம்பி படம் சூப்பர் ஹிட் ஆகி விட்டதால், ரொம்பச் சந்தோஷமாக உள்ளார் பூஜா. தான் நடித்த படம் நீண்ட நாளைக்குப் பிறகு முதலிடத்தில் இருப்பதில் அவருக்குப் பூரண திருப்தி. விபத்து கொடுத்த காயத்துக்கு இதமாக தம்பியின் வெற்றி அமைந்துள்ளதாம். தம்பி படத்தில் தனக்கு நல்ல ரோல் கொடுத்ததற்காக இயக்குநர் சீமானை அவரது அலுவலகத்திற்குப் போய் வாய் நிறையப் பாராட்டி கையைப் பிடித்து தேங்ஸ் சொன்னாராம்.

இப்போது அதே சந்தோஷத்தோடு தகப்பன்சாமி, பொறி உள்ளிட்ட படங்களில் வேகமாக நடித்து வருகிறார். பட்டியல் படம் ரிலீஸ் ஆகி அவரது சந்தோஷத்தை இரட்டிப்பாக்கியுள்ளதாம்.

பூஜாவுக்கு இன்னொரு சந்தோஷமாக சிங்களத்தில் அவர் நடித்த இரண்டு படங்களும் சுமாராக ஓடி வெற்றி பெற்றுள்ளனவாம். (இவரது தந்தை சிங்களவர், தாயார் கன்னடம்) இதனால் சில புது சிங்களப் படங்கள் வந்ததாம்.

ஆனால் தமிழில் மீண்டும் தனது பக்கம் காற்று வீசுவதைக் கருத்தில் கொண்டு அப்புறம் பார்க்கலாம் என இலங்கைக்காரர்களை வெயிட்டிங் லிஸ்ட்டில் வைத்துள்ளாராம்.

பூஜாவோட அப்பாவும், அம்மாவும் இப்போது வசிப்பது கொழும்பில்தான். அம்மணி மட்டும் தனது தம்பியுடன் பெங்களூரில் வசித்து வருகிறார்.

இதனால் ஷூட்டிங்குக்காக சென்னைக்கும், அப்பன், ஆயியைப் பார்க்க கொழும்புக்குமாகப் பறந்து பறந்து ஓடுகிறார் பூஜா. இதனால் தேவையில்லாத வெட்டி அலைச்சல் ஏற்படுவதால் எல்லாப் பேரையும் ஒரே இடத்தில் 'அடைத்துப் போட முடியுமா' என யோசித்து வருகிறாராம்.

எனவே பூஜாவின் குடும்பத்தினர் பெங்களூருக்கோ அல்லது சென்னைக்கோ குடியேறவுள்ளார்களாம்.

தனக்கு வரும் படங்களில் கதையை விட ஹீரோ யார் என்றுதான் கேட்கிறார் பூஜா. கதாநாயகன் இளையவர் என்றால் உடனே கால்ஷீட் தந்துவிடுகிறார். பெரிசுகள் என்றால் ஒதுங்கிவிடுகிறார்.



## சேர்த்து வைத்த 'மெர்க்குரிபூக்கள்!'

**மீரா** ஜாஸ்மீன் - ஸ்ரீகாந்த் நடித்த 'மெர்க்குரிப் பூக்கள்' படத்தைப் பார்த்து இரண்டரை ஆண்டுகளாகப் பிரிந்திருந்த தம்பதியினர் மீண்டும் வாழ்க்கையில் இணைந்துள்ளனர்.

சென்னை அசோக் நகரைச் சேர்ந்த முருகனுக்கும் அவரது மனைவி சரஸ்வதிக்கும் இடையே இரண்டரை ஆண்டுகளுக்கு முன் குடும்பத் தகராறு ஏற்பட்டது. இதையடுத்து இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தை நின்று போனது.

அத்தோடு முருகனை விட்டுப் பிரிந்தும் போய்விட்டார் சரஸ்வதி. இவர்களுக்கு ஒரு குழந்தையும் உண்டு. பிரிந்து போன இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தையே இல்லாமல் போய்விட்டது. இவர்களைச் சேர்க்க முயன்ற உறவினர்களும் தோற்றுப் போய்விட, காலமும் மிக வேகமாகக் கரைந்து ஓடிவிட்டது.

இந்நிலையில் சமீபத்தில் மெர்க்குரிப் பூக்கள் படத்தைப் பார்த்தார் முருகன். படத்தில் நடக்கும் சம்பவங்கள் தனது வாழ்வை நினைவூட்ட தியேட்டரிலேயே கண் கலங்கியிருக்கிறார்.

அதில் ஹீரோ ஸ்ரீகாந்த் நடந்து கொண்டதைப் போல விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் என்ன என்ற எண்ணம் வர, படம் முடிந்தவுடன் நேராக சரஸ்வதியின் வீட்டுக்குப் போயுள்ளார் முருகன்.



சந்தோஷ் - அர்ச்சனா
ஒரு காதல் செய்வீர்

கணவரைக் கண்ட சரஸ்வதி மகிழ்ச்சியில் திக்குமுக்காட, தனது ஈகோவை உடைத்தெறிந்துவிட்டு மனைவியிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார் முருகன். இதைச் சற்றும் எதிர்பாராத சரஸ்வதியும் பதிலுக்கு வருத்தம் தெரிவிக்க, இரண்டரை வருடங்களாக இவர்களுக்கிடையில் விழுந்திருந்த வெடிப்பு சட்டென மறைந்துவிட்டது.

இதையடுத்து கணவருடன் வீட்டுக்குக் கிளம்பிச் சென்ற தங்களது மகளைப் பார்த்து ஆனந்தமாய் அழுதுள்ளது சரஸ்வதியின் குடும்பம்.

திடீரென்று எப்படி இதெல்லாம் என்று சரஸ்வதி கேட்க, மெர்க்குரிப் பூக்கள் படம் பார்த்தேன். என் தப்பை உணர்ந்தேன் என்றிருக்கிறார் முருகன்.

இப்படி ஒரு ஜோடி, தங்கள் படத்தைப் பார்த்து இணைந்ததை அறிந்த மெர்க்குரிப் பூக்கள் யூனிட் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளது.

உடனடியாக முருகனையும் சரஸ்வதியையும் வரவழைத்து பெரிய ட்ரீட் கொடுத்து அசத்திவிட்டார் ஸ்ரீகாந்த்.

இந்தப் படம் ஓடும் சென்னை காசி தியேட்டருக்கு தம்பதியை வரவழைத்தார் தயாரிப்பாளர் வெங்கட்ராம ரெட்டி. தனது மனைவியோடு வந்திருந்த ரெட்டி, இடைவேளையின்போது முருகன் - சரஸ்வதி தம்பதியை மேடையேற்றி கௌரவப்படுத்தினார்.

அப்போது முருகனுக்கு 2 பவுண் தங்கச் சங்கிலியை ஸ்ரீகாந்த் அணிவிக்க, அதை உடனே எடுத்து தனது மனைவி சரஸ்வதியின் கழுத்தில் போட்டார் முருகன். படம் பார்க்க வந்தவர்கள் வாழ்த்திலும் கரகோஷத்திலும் உணர்ச்சி வசப்பட்டு அழுதே விட்டார் சரஸ்வதி.

படத்தை இயக்கிய ஸ்டான்லியின் முகத்தில் ஒரே சந்தோஷக் களை. நம்ம படத்தைப் பார்த்து பிரிந்த தம்பதி ஒன்று சேர்ந்தது எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா என்று தனது மகிழ்ச்சியை நமக்கும் பாஸ் செய்தார்.

ஜோடி, சேர்ந்தது ஒரு பக்கம் இருக்கட்டும். இதை வைத்து படத்துக்கு இலவசமாக நல்ல விளம்பரத்தை சம்பாதிச்சிட்டீங்களே, ஸ்டான்லி...சார்.



ஆர்யா - பரத்
பட்டியல்



# தேன் கிண்ணம்

## ஏக்கங்கள்

செருப்புகளற்ற வெற்றுப் பாதங்களுடன்
நானும் ஒரு பட்டமாகி
பறந்து திரிகிறேன்
எதிரே வந்து மோதி விளையாடும்
இளங்காற்றில் மெய்சிலிர்த்து
இன்னும் இன்னும் ஓடிப்பார்க்கிறேன்
பச்சை புட்தரையில் படுத்தப்படி
மேகங்களை துணைக்கழைக்கிறேன்
ஆற்றங்கரை கொய்யாமர கடைசி
கொப்பில்
உயர்ந்தும் தாழ்ந்தும் துள்ளி
ஆடுகிறேன்
அம்மாவிற்கு மறைத்து
எடுத்துவந்த ரொட்டி துண்டுகளை
பறவைகளுடன் பகிர்ந்து உண்கிறேன்
இத்தனை இன்பங்களையும் மாடியில்
இருந்து
ஏக்கத்துடன் பார்க்கிறான் - என்னை
ஏழையென்றொதுக்கிய பணக்கார
நண்பன்.
நானும் பார்க்கிறேன்
ஏனக்கு கிடைக்காமல் போன
அவனது புதுச்சட்டையை.

*–பிரமிளா செல்வராஜா, ஹாலி – எல.*

## என் மழைக்கால மேகம்

அது ஒரு காலம்
பெண்ணே
பூக்கள் கதையெழுதும்
வசந்தகாலம்.

அது முதல் முத்தத்தை
விட
சுகமானது
பிறவாத
கவிதைகளைவிட
இனிமையானது.

காதல் நீ
பன்னீர் வரங்கள்
சொரிகிறாய்
என் வெள்ளைக்
காகிதத்துக்கு
நிறங்கள் தருகிறாய்.

அது ஒரு காலம்
பெண்ணே...
பூக்கள் கதையெழுதும்
வசந்த காலம்.

மேல் திசையில்
தேயிலையின்
மலைச்சரிவு
கீழ்த்திசையில்
யூகலிப்டஸ்
மரச்சோலை

பூக்களின் ஓசையைப்
புரிந்து கொள்ளலாம்
பெண்ணின்
மௌனத்தை...?

உன் ஈர இதழ்களின்
மௌனத்தைக்
கலைத்து விட மனது
வார்த்தைகளைத்
தேடியது.

கல்யாணி இராகத்தில்
இழைக்கிறேன்
என் கானம்
நீ ஆவாயா?

கவிதை வளைந்தது
கேள்விக்குறியாக
நல்ல கவிதை
என்றாய்.

'விமர்சிப்பதற்கு இது
கவிதையல்ல விடை
தேடும் வினா - உன்
ராகம் தேடும் பல்லவி'
என்றேன்
நீ பேசவில்லை.

உன் சிவந்த
இதழ்களில் பூக்களை
அடுக்கிக் காட்டினால்
பூக்கள் சுந்தரப் பூக்கள்!

அப்போது
என் வானில்
மழைக்கால மேகங்கள்
அழத்துவங்கின
என் மண்ணில்
மல்லிகைத்
தோட்டங்கள்
எழத்துவங்கின.

அது ஒரு காலம்
பெண்ணே
பூக்கள் கதையெழுதும்
வசந்தகாலம்!

*–ஜாபீர் முகம்மட், அட்டாளைச்சேனை.*

## முதல் காதலே...



இதயத்தில் உன்னைப் பூட்டி
நரம்புகளால் தைத்தும்
உன்னால் இனந்
தெரியாதவனாகவே
இருக்கிறேன்....

தொலைவில் நீ இருக்க
விரைந்து வந்து பார்த்தும்
எதையும் அறியாதவளாக
என்னைப் புறந்தள்ளுகிறாய்...

முதன் முதலாக
உன்னில் அர்ப்பணித்த
எனது காதல் அனுபவம்
அழகுகுன்றி அசிங்கமாகிறது.

எத்தனை முறையோ
பேச எத்தனித்தேன் - முடியவில்லை
எனது ஏமாற்றம்
என்னைக் கேலி செய்கிறது...

எதுவரை காத்திருக்க முடியுமோ
அதுவரை உனக்காக...

*–அ.முகிலன், நெடுந்தீவு.*

## உன் உறவுகளுடன்

எண்ணிப் பார்க்கிறேன் - நான்
காதல் செய்தது சரியா...?
பிழையா...?
என்று.

உன் உறவுகள் - என்
மீது கொண்ட நம்பிக்கையை
காதல் கொண்டா உடைப்பது.


என்னால் - உன்
உறவுக்கும் உனக்கும்
கலங்கம் வேண்டாம்.

அந்த கூட்டு குடும்பத்தில்
நானும் வாழ ஆசைப்பட்டேன்
அந்த ஆசை எனக்குள்
நிராசையாக
போகட்டும்...

கடைசிவரை அந்த உறவுகளுக்கு
நம்பிக்கையுடன் வாழ்ந்தால்
அதுவே போதும் எனக்கு...
உன் உறவுகள் - என்
மீது கொண்ட நம்பிக்கைகளை
காதல் கொண்டு உடைக்காதே...

*–பி.சசி, நானாட்டான்.*

## சிலுவை சுமக்கும் சிறகுகள்



நம்
காதல் பந்தயத்தில்
நீ பெற்றதை விட
நான் இழந்தது அதிகம்.

பட்டாம் பூச்சிக்
குழந்தையாய்...
பறந்த போது
தெரியாது - என்
இளமைக்கு
இவ்வளவு பெரிய
சிலுவைகள்
காத்திருப்பது பற்றி.

பின்னால்
வந்தவர்களெல்லாம்
முன்னேறி
முறைக்கிறார்கள்
வாழ்க்கைப்படி
எனக்கு மட்டும்
வழுக்கிக் கொண்டே
இருக்கிறது.

வாழ்தலின் மீதான
பிடிப்புகள் இன்றியும்
பிடிவாதமாய் வாழ்கிறேன்
உள்ளதைக் கொண்டு
மாத்திரமல்ல
இல்லாததைக் கொண்டும்
திருப்தியடைய
முடிவதால்...!

*–சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.*

## தை பிறந்தால்

"தங்கமணி திருநாட்டில்
தமிழினத்துக்கா தலைகுனிவு
சங்கம் வைத்து தமிழ்
வளர்த்த
சந்ததிக்கா இந்தநிலை"...

"எண்ணங்கள் நாமெல்லோரும்
இந் நாட்டு மன்னனென்று
கன்னக் கோல் சாத்தியே
தமிழன்
கருத்திழந்தது இன்னும்
போதாதா"...

"காக்கையும் குயிலும்
கறுப்பில்தானும் ஒற்றுமையே
கடமைகொண்ட தமிழன்
கடுகளவும் ஒற்றுமையுண்டா"...

"தாலியறுத்த சிலரும்
தாரமிழந்த பலரும்
மீதியிருக்கும் அனைவரும்
மேலுமழிதல் முறையோ"...

*–பொலிகை மறவன், திருகோணமலை.*

## இது தானா இல்லறம்

மாலையில் செல்வதற்கே
காலையில் கரை காண்கின்றாய்
நீ செல்லும் போதெல்லாம்
நான் தனிமைப்படுவதை
எண்ணிப் பார்க்க
உன்னால் முடிவதில்லை
படகில் வலையை மட்டுமல்ல
படபடக்கும் என்
உள்ளத்தையும் ஏற்றுவதை
உணராதவன் நீ
நிலவின் ஒளிக் கீற்றும் - உன்
நினைவும் நானும்
இச்சிறு குடிசையுள்
அச்சமும் என் மன
வேதனையும்
இச்சையும்
நீ அறிவதில்லை
இது தானா இல்லறம்
இன்ப வாழ்க்கை
ஏன் நீ உணர்வதில்லை
நான் என்ன
ஆறிய கஞ்சாக
மாறியும் போனேனா?

*–செல்வி நோபா ஸமா, மருதமுனை.*

## தீவிரவாதம்

இந்தப் பாதையில்
போனவர்கள்

பிணங்களின்
வாடை பிடிக்காமல்
மூக்கை அடைத்தே
போனார்கள்.
பிணத்தைச் சுற்றிய
அழுகுரல் கேட்டு
சில பேர்
அனுதாபப்பட்டார்கள்.

அழுகை தீர்ந்துபோய்
முனகும் சப்தம்
சிலருக்குதான் பிடித்தது.

இதுவெல்லாம்
வாடிக்கையென்று
ஒரு சிலர்
வேடிக்கைப் பார்த்தார்கள்.

நானோ
மற்றுமொரு தடவை
அந்தப் பிணத்தைப்
போலவே
கொலை
செய்யப்படுகிறேன்.

*–மு.கீர்த்தியன், லபுக்கலை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள் அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:*

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

## தீயாக நீ

நாடக மேடையில்
அச்சம் தரும்
அய்யனார் வேடத்தில்
அரிவாளுடன் அடும்
உன் வேஷம்
எப்போதும்
புன்னகைத் தவழும்
உன் முகத்துடன்
ஒட்டாமலேயே
அழிந்து போகிறது
என்
விழித்திரைகளில்.

மழையில் ஒளிரும்
சிற்பங்கள் தூறலில்
அழியும்
ஓவியங்களுக்காய்
வருந்துவதில்லை.
உன்னைப் போலவே.

கழிப்பறைக்கும்
கட்டிலுக்கும்
நடுவில் என் பயணம்.

சன்னல் கம்பிகளில்
தொங்கு தோட்டமாய்
என் வானம்.

எப்போதாவது
நலம் விசாரிக்கும்
உறவுகள்

எப்போதும்
எனக்காக
காத்திருக்கும்
மாத்திரைகள்

செத்துப் போன
கனவுகளுடன்
பாடை ஏறாமல்
படுத்திருக்கிறது.
மூத்திரவாடையால்
என்னுடல்
தீயாக
நீ மட்டுமே
என்னைத்
தீண்ட வேண்டும்
என்பதால்.

*புதியமாதவி*

## ஒரு பாசத்தின் பாடல்

அவன்
ஏமாற்றப்படும்
பொழுதுகளில்
விம்மி
அழுதுவிடுகிறான்
காத்திருப்புக்களுக்கு
தோல்வி காணும்
குணங்களில்
நிலை
மாறியிருக்கிறான்
அவனுடைய
சுருதி கலைந்த
சங்கீதங்கள்
இனிமையை
தந்தனவல்ல
இருந்தும்
பாடிக்
கொண்டிருக்கிறான்
தனது தனிமைக்காக
அவனுள் ஊடுருவிய
கத்திகள்
கூர்மையாகின
சுவாசங்கள்
இன்னும்
பிடுங்கப்படவில்லை
மரணித்தும்
போகலாம்
அவன்
பாடிக்கொண்டே
இருந்தான்.
சமூகத் திரையை
கிழித்து
அப்போது தான்
எட்டிப் பார்த்தார்கள்
அவ்ன் குற்றுயிராய்...
இல்லை
இறுதி மூச்சாய்
அந்திச் சூரியனாய்
உறங்கப் போகிறான்
எனினும்
பாடிக் கொண்டுதான்
இருந்தான்
ஒரு பாசத்தின்
பாடலை
தன் தேசத்தின்
பாடலை.

*சாம்.*

## எனது கனவில் சிரித்தவர்கள்

காலமுள் கிழித்த
காயத்திலிருந்து வடிகிற
குருதியை வழித்து
கோபத்துடன்
மேகங்களில் வீசியெறிகிறது
செவ்வந்திச் சூரியன்.
சாலையோரத்தில்
உதிர்சருகு
தன்னை மிதித்த
கால்களை
முறிப்பதாய் பேசியபடியே
முறிகிறது துகள்களாய்.
'தெரியாதே மிதித்தேன்'
எனச் சத்தியமிட முடியாத
ஒரு
நேர இடைவெளிக்குள்
என்னை
கொட்டி விட்டுச் சுருள்கிறது
சிறு எறும்பு
இவ்வாறாக இவைகள்
வாழ்ந்துவருகிற நான்
சகோதரனுக்கோ
துணைவருக்கோ
கொடுப்பினையில்லாதபடிக்கு
வீதிக்கிறங்கிய
பொழுதொன்றில்
என்னுடலில் இச்சையுற்ற
ஒற்றை வார்த்தையை
உமிழ்ந்தாய் என்மீது
காறித் துப்பிய
உமிழ்நீராய்.
அந்த எச்சில்
பிறகாதுகள்
ஏதாவதொன்றில்
விழுந்திருக்குமோவென
அலைகிற என் கண்களை
மேலும் தாழ்த்தி நடந்தேன்
உடல் நடுங்கிப் பதற.
என் அதிர்ஷ்ட வேளை
எவரும்
கேட்டிருக்கவில்லை.
எவரும் கேலிக்கவில்லை
எனினும்...
இரவானது
அமைதியுற்றதன் பிறகு
என் கனவில் வச்து
என்னைப் பார்த்துச்
சிரித்தன.
செவ்வந்திச் சூரியனும்
ஒரு சருகும்
சின்னதோர் எறும்பும்
தாங்க முடியவில்லை.

*சாரங்கா தயாநந்தன்*



எரிமலைகள் தொடர்பில் ஆராய்ச்சிகள் அதிகரித்துக் கொண்டு வரும் இந்நிலையில், எரிமலைகளால் ஏற்படுத்தப்பட்ட சாதனைகளும் இன்றும் பதியப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. அந்த வகையில் அதி வேகமாக எரிமலை குழம்பு வீச்சு கொங்கோ நாட்டில் தான் ஏற்பட்டதாம். இதன்போது எரிமலை குழம்புகள் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் வீசப்பட்டனவாம். இதில் சுமார் 2000 மக்கள் கொல்லப்பட்டனர் என்பதும் ஒரு தகவல்.



ஹவாய்த் தீவில் கடலுக்கடியில் எரிமலைகள் இருப்பது அதிசம் தான் அந்த வகையில் ஹவாய்த் தீவில் ஒரு சுரங்கக் குகையினுள் எரிமலை ஒன்று இருக்கிறதாம். அதிக நீளமான இச்சுரங்கத்தின் உள்ளே ஏதோ ஒரு பொருள் மின்னுவதைக் கண்ட அவ்வூர் குடிமகன் ஒருவன் தற்றெயலாக உள்ளே சென்ற போதே இவ் எரிமலை யைக் கண்டுபிடித்தானாம். 59.3 கி.மீ. நீளமான இக்குகைக்குள் இருக்கும் எரிமலை. 1,099 மீற்றர் விட்டமுடையதாம். எரிமலைக் குழம்புகளை மிகவும் துல்லியமாக இக்குகையில் இருந்து கொண்டு அவதானிக்கலாமாம்.




எரிமலைக் குழம்பு என்றாலே அதி கூடிய வெப்பநிலையில் உருகி இருக்கும் கனிமங்களையும் மண்ணையும் கொண்ட ஒரு வகை திண்ம திரவத்தை அழைப்பது வழமை. அதிலும் ஒரு சாதனை உண்டு. என்னவென்றால் வழமையில் குழம்பு 1100 - 1200 பாகை செல்கியஸ் வரை வெப்பநிலையில் இருக்கும். தன்சானியாவில் இருந்த குழம்பு ஒன்று வெறும் 500 - 600 பாகை செல்சியஸில் தான் இருந்ததாம். இது ஒரு உலக சாதனையாகவும் கருதப்படுகிறது.




# கர்ப்பிணிப் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்!

**தாய்மை** என்பது ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் அவர்களின் பூரணத்துவத்தை அடைவது என்றால் மிகையில்லை. பொதுவாக திருமணம் முடியும் வரை பெண்கள் மிகப்பெரிய எதிர்பார்ப்புகளோடும், வாழ்க்கை பற்றிய கனவுகளோடும் இருந்தாலும் திருமணத்திற்குப் பின் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதே அவர்களின் மறுபிறவி என்கிறோம்.



ஆகவே தான் தாய்மையை, மனித இனத்தின் ஆதாரமான குழந்தைகளை வயிற்றில் சுமந்து பெற்றெடுக்கும் அன்னையரை அனைவரும் போற்றிப் புகழ்கிறோம். குழந்தையை வயிற்றில் கருவாக சுமந்த முதல் மாதத்தில் இருந்து புதிய உயிரை பெற்றெடுப்பது வரை எவ்வித சிக்கலும் இன்றி கர்ப்பிணிப் பெண்கள் சிறப்பான உணவு முறைகளையும், எளியவகையிலான உடற்பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதேநேரத்தில் மருத்துவர்களின் ஆலோசனைகளையும் தவறாமல் உரிய முறையில் கடைப்பிடித்தல் அவசியம்.

கர்ப்பிணிப் பெண்களுக்கான சில குறிப்பிடத்தக்க சில டிப்ஸ் இதோ :

கர்ப்பம் என்பதை மருத்துவரிடம் உறுதிப்படுத்திய பின்னர், ஒவ்வொரு மாதமும் மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும்.

அன்றாடம் குறைந்த அளவு உணவுகளைச் சில மணி நேர இடைவெளி விட்டு அடிக்கடி சாப்பிடவும். 4 மணி நேரத்திற்கு அதிகமான இடைவெளி இருத்தல் கூடாது.

ஒவ்வொரு முறை படுக்கையிலிருந்து எழும்போதும் கவனமாக பொறுமையுடன் எழுந்திருத்தல் வேண்டும்.

தூங்கும்போதும் கூட உங்களுடன் பிஸ்கட் பாக்கெட்டுகளை வைத்திருக்கவும். தூங்கி எழுந்தவுடன் சாப்பிடுவதற்கு ஏதுவாகும்.

ஒரே நேரத்தில் அதிக அளவிலான சாப்பாட்டை எடுத்துக் கொள்வதைத் தவிர்க்கவும்.

நீங்கள் ஓய்வு வேண்டும் என்று நினைக்கும் போதெல்லாம் போதிய அளவு ஓய்வை எடுத்துக் கொள்ளுங்கள்.

சாப்பிடும் உணவை நுகர்ந்தபின் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். அது உங்களுக்கு உணவின் மீது அதிருப்தியை ஏற்படுத்தலாம்.

தேவைப்பட்டால் எலுமிச்சம் பழம் ஒன்றை கையில் வைத்துக் கொண்டு நுகர்ந்து கொள்ளவும். இது வாந்தியைத் தவிர்க்க ஏதுவாகும்.

இடுப்பை இறுக்காதவகையிலான தொழதொழப்பான (லூஸ்) ஆடைகளை அணிந்து கொள்ளப்பழகுங்கள்.

தேவைப்பட்டால் முழங்கால்களுக்கு இடையே தலையணை ஒன்றை வைத்துக் கொள்ளுங்கள். இப்படிச் செய்வதால் உங்களின் இடுப்பு மற்றும் முழங்கால்களில் ஏற்படும் அழற்சி சற்றே மட்டுப்படும்.

மாலை நேரத்திற்குப் பின்னர் திரவ உணவு வகைகளை அதிகமாக எடுப்பதைத் தவிர்க்கவும். பகலில் அல்ல. அதேபோல் இரவில் காபி அருந்துவதையும் தவிர்த்தல் நலம்.

பால் அல்லது மூலிகை கலந்த தேநீர் அருந்தவும்.

முடிந்தால் சாப்பிட்டபின் சூயிங்கம் அல்லது மிட்டாய் போன்றவற்றைச் சிறிது நேரம் மெல்லுங்கள்.

பயணத்தின் போது நீண்டநேரம் உட்கார்ந்திருப்பதைத் தவிருங்கள். குறைந்தது ஒருமணி நேரத்திற்கு ஒருமுறையோ அல்லது இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறையோ நடந்து உலாவுங்கள். பெரும்பாலும் பயணத்தின் போது அவ்வப்போது கழிவறைக்குச் சென்று சிறுநீர் கழிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.



சற்றே எண்ணெய் குறைவான ஸ்நாக்ஸ் வகைகளைப் பயணத்தின் போது எடுத்துச் செல்லுங்கள். ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை கேரட், ஆப்பிள் அல்லது சாண்ட்விச் போன்றவற்றில் ஏதாவதொன்றைச் சாப்பிடவும்.

அடிக்கடி தண்ணீர் அருந்துங்கள். உடலில் உள்ள தண்ணீர் வெயில், உடல் உஷ்ணம் காரணமாக அவ்வப்போது நீர்த்துப் போகும் என்பதால், தேவையான அளவு தண்ணீரைக் குடிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

கர்ப்பமாக இருக்கும்போது முதுகுவலி எற்பட்டால், உடனடியாக வெந்நீர் பேக் கொண்டு வலி உள்ள இடத்தில் ஒத்தடம் கொடுங்கள். உங்களின் முதுகுத்தண்டானது சுவரில் ஒட்டியிருக்கும்படி நின்றுகொண்டு சிறிதுநேரத்திற்கு அதே நிலையிலேயே இருங்கள். இதனால் முதுகுவலி நீங்கலாம்.

படுத்திருக்கும் போது உங்களின் கால்கள் உயர்வாக இருக்குமாறு தலையணைகளை வைத்துக் கொண்டு தூங்கலாம்.

நிறைமாதத்தில் குழந்தை பிறப்பதற்கான வலி ஏற்படும் போது, முடிந்தால் சற்றே நடக்கலாம். இதன்மூலம் குழந்தை பிறப்பது சற்றே எளிதாகும்.

கர்ப்ப வலி இருக்கும் போது சாப்பிடுதல் அல்லது திரவங்களைக் குடிப்பதால் குழந்தை பிறப்பது விரைந்து பலனைத் தரும்.

இதுபோன்ற தகவல்கள் என்பது பொதுவானவையே. இவற்றையெல்லாம் விட உரிய மருத்துவர்கள் மற்றும் வீட்டில் உள்ள தாதியர் அல்லது அனுபவம் மிக்கவர்களின் அறிவுரைப்படி செயல்படுங்கள்.

வளமான குழந்தையைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.

# கருப்புத்தான் எனக்குப் புடிச்ச கலரு

**கருமை** நிறம் என்பது பல்வேறு தரப்பினரிடையே விரும்பத்தகாத கலராக இருந்து வருகிறது. திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்குக் கருப்பு சேலைகளையோ அல்லது இதர ஆடை வகைகளையோ வாங்குவதைத் தவிர்க்கிறார்கள்.

திருமணம் முடிந்து தங்கள் பெண் புகுந்த வீட்டிற்குச் செல்லும் போது விதவிதமான கலர்களிலான புடவை, சுடிதார் போன்றவற்றை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் கருப்பு நிறத்தை மட்டும் தவிர்க்கிறார்கள்.



கருப்பு என்றாலே துக்கம் என்ற ரீதியிலான சென்டிமென்ட் தான் இதற்குக் காரணம்.

ஆனால் நவீன காலத்தில் இந்த நிலைமை ஓரளவு மாறிக் கொண்டிருக்கிறது எனலாம். அதற்காக கருப்பு நிறத்திலான ஆடைகளுக்கு என்றுமே உள்ள மவுசு ஒருபோதும் குறைந்ததில்லை. இனிமேலும் குறையாது. கருப்பு நிற உடைகளை விரும்பி வாங்கி அணிவோரும் ஏராளமாக உள்ளனர்.

கிளாசிக் மற்றும் பாரம்பரிய உடைகளானாலும், சாதாரண கேஷுவல் அல்லது மிக எளிமையான உடைகள் என எதுவானாலும் கருப்பு வண்ணத்திலான உடைகளுக்கென்று தனியாக இருக்கும் பேஷன் சிறப்பு என்றென்றைக்கும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் எண்ணற்ற டிசைன்களிலான கருப்பு நிற உடைகளை அணிந்து பிரபல மாடல்கள் பங்கேற்றனர். கருப்பு கலரிலான உடைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இக்கண்காட்சி அமைந்திருந்தது. கருப்பு நிற உடைகளை அணிந்து மாடல்கள் கேட் வாக் வந்தபோது தனியான பளிச் காணப்பட்டது.

கருப்பு நிற ஆடைகளில் செய்யப்படும் டிசைன்கள் மற்றும் எம்ப்ராய்டரிங் போன்ற வேலைப்பாடுகளால் அந்த உடைகள் கூடுதல் அழகைத் தருகின்றன எனலாம்.

கருப்பு நிற குர்திஸ், டிசைன் செய்யப்பட்ட மேலாடைகள் (டாப்ஸ்), ஸ்கோர்ட் போன்றவை அவற்றை அணிந்து வருவோரின் அழகுக்கு கூடுதல் சிறப்பைச் சேர்க்கும்.

ஸ்கோர்ட்டைப் பொருத்தமட்டில் பல்வேறு தரப்பினரின் உடல்வாகுக்கு ஏற்றவகையில் கருப்புடன் புதிய நிறங்களும் சேர்க்கப்பட்டு டிசைன் செய்யப்படும்போது கருப்பு கலரை விரும்பாதவர்கள் கூட பொறாமைப்படும் அள வுக்கு இருக்கும் என்பது திண்ணம்.



• பொதுவாக ஒவ்வொரு நிறத்திற்கும் ஒரு பண்பு இருப்பதாக அறியப்படுகிறது. அந்த வகையில் கருப்பு என்றாலே வலிமை, உறுதி என்று பொருள் படுகிறது. கருப்பு கலர் என்பது சில நேரங்களில் தெய்வீக கலராகவும் கருதப்படுகிறது. கருப்பு நிறத்திலான உடைகளை விரும்பி அணிவோர் தாங்கள் நினைத்ததைச் சாதிப்பவர்களாக இருக்கிறார்கள். இதன்மூலம் கருப்பு கலரை நேசிப்போர் மக்களாலும் நேசிக்கப்படுகிறார்கள். அவர்கள் சாதனையாளர்களாகவும் திகழ்கிறார்கள் என்பதற்கு பல்வேறு உதாரணங்கள் கூறப்படுகின்றன.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**16**

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 16**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:**

**04.04.2006**

**பரிசுப் போட்டி இல - 14 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எஸ்.எம். நுஸைபா,**
118 T, நூறானியா மாவத்தை, புதிய காத்தான்குடி -06.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* **-ஷோபா-**

## கொய்யா ஆரஞ்சு கூலர்

***தேவையான பொருட்கள்***

| | |
|---|---|
| கொய்யாக்காய் | - 3 |
| ஆரஞ்சு பழம் | - 2 |
| சீனி | - தேவைக்கு ஏற்ப. |
| உப்பு | - ஒரு சிட்டிகை |
| மிளகுத்தூள் | - கால் டீஸ்பூன். |
| துளசி இலை | - 10 |

***செய்முறை :-***

பழத்துக்கு முந்திய நிலையில் இருக்கும் நன்கு முற்றிய கொய்யாக் காய்களை கழுவித் துடைத்து, சிறு துண்டுகளாக நறுக்க வேண்டும். ஆரஞ்சு பழத்தைப் பிழிந்து, சாறு எடுத்து வடிகட்ட வேண்டும். மிக்ஸியில் கொய்யா சீனி, உப்பு, மிளகுத் தூள், ஆரஞ்சுத் தூள் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் தேவையான தண்ணீர் சேர்த்து கலந்து மெல்லிய துணியால் வடிகட்டுங்கள். வடிகட்டிய ஜூஸை குளிர வைத்து, பொடியாக நறுக்கிய துளசி இலையைத் தூவிப் பரிமாற வேண்டும்.




*உறவுகள் மேம்பட...*

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும்

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.

அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talks)

எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசூக்காகக் கையாளுங்கள். (Diplomacy) விட்டுக் கொடுங்கள் (Compromise).

சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் (Tolerance).

எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility).

மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy).

புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல்

**அடியென்றால்** அடி, சரியான அடி. மறுபடி நான் எழுந்து நிற்கப் பதின்மூன்று வருடங்கள் ஆயின என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அந்த அடி, வழக்கமான வகையைச் சேர்ந்ததும் அல்ல.

எல்லோரும் கும்பலாகச் சேர்ந்து கொண்டார்கள் அதை எனக்குக் கொடுப்பதற்காக. அது 1931 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் திகதி. காலை எட்டு மணிக்கெல்லாம் - ஒரு வருடமாக நான் இருந்து வந்த பாரிஸ் சிறையிலிருந்து வெளியே அழைத்துச் சென்றார்கள். நான் நன்றாய் ஷேவ் செய்து கொண்டிருந்தேன். நன்றாய் உடை அணிந்திருந்தேன்.

எனக்கு அப்போது வயது இருபத்தைந்து. பார்ப்பதற்கு இருபது மாதிரி இருந்தேன். பொலிஸ்காரர்கள் - என் உயர் ரக உடைகளைப் பார்த்துச் சற்று அயர்ந்துபோன பொலிஸ்காரர்கள் - என்னை மரியாதையோடு நடத்தினார்கள். என் கை விலங்குகளைக் கூட எடுத்து விட்டார்கள்.

வெறிச்சென்ற ஓர் அறையில் - இரண்டு பெஞ்சுகளில் - நானும் ஐந்து பொலிஸ் அதிகாரிகளும் உட்கார்ந்து கொண்டோம். வெளியே வானம் அழுது வடிந்து கொண்டிருந்தது. எங்களுக்கு எதிரிலிருந்த கதவுதான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும் வழியாக இருக்க வேண்டும்.

திட்டமிட்டுக் கொலை செய்ததாக என் மீது தொடரப்பட்ட வழக்கில் இறுதிக் கட்டம்.

என் வக்கீல் உள்ளே வந்தார் என்னைப் பார்க்க. "உனக்கு எதிரான சாட்சிகளுக்கு வலு இல்லை. நிச்சயம் நம்மை விடுதலை பண்ணிவிடுவார்கள்" என்றார். 'நம்மை' என்று அவர் சொன்னது என்னைச் சிரிக்க வைத்தது. கேட்கிறவர்களுக்கு, ஏதோ அவரும் என்னோடு குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்கப் போவது போலவும், நான் குற்றவாளி என்று தீர்ப்பானால் அவரும் என்னோடு கம்பி எண்ணப் போகிறாற் போலவும் தோன்றியிருக்கும்.

ஒரு கோர்ட் சிப்பந்தி கதவைத் திறந்து எங்களை உள்ளே வரும்படி சொன்னான். நான்கு பொலிஸ்காரர்கள் புடைசூழ, ஒரு சார்ஜெண்ட் பக்கவாட்டில் வர, அகன்று திறந்திருந்த இரட்டைக் கதவின் வழியே பிரமாண்டமான நீதிமன்றத்துக்குள் நுழைந்தேன். எங்கே பார்த்தாலும் சிவப்பு வண்ணம். இரத்தச் சிவப்பு ஜமக்காளங்கள், பெரிய ஜன்னல்களுக்குப் போட்டிருந்த திரைச்சீலைகள், இன்னும் இரண்டொரு நிமிடங்களில் என் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிற நீதிபதிகளின் அங்கிகள் கூட - எல்லாமே சிவப்பு.

ஸைரன்ஸ்! நீதிபதிகள் வருகிறார்கள்.

வலப் பக்கமிருந்த கதவின் வழியாக ஆறு பேர் வந்தார்கள், ஒருவர் பின் ஒருவராக. நீதிபதி, பிறகு ஐந்து அரசாங்க வழக்கறிஞர்கள். அனைவரும் தங்கள் பதவிக்கான தொப்பிகளை - விளிம்பில்லாத தொப்பிகளை - அணிந்து கொண்டிருந்தார்கள். தலைமை தாங்கும் நீதிபதி நடு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். இருபுறத்திலும் அவருடைய சகாக்கள் உட்கார்ந்தனர்.

ஆழ்ந்த நிசப்தம் நிலவியது. எல்லோரும் நின்று கொண்டிருந்தார்கள். நானும்தான். நீதிபதி உட்கார்ந்தார். மற்றவர்களும் உட்கார்ந்தார்கள்.

நீதிபதிக்குக் கொழுகொழுவென்று முகம். கன்னங்கள் ரோஜா நிறம். சில்லென்ற கண்கள். எவ்வித உணர்ச்சியும் வெளிப்படுத்தாமல் என்னை நேராகப் பார்த்தார். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவர் நியாயமாகவே நடந்துகொண்டு வந்தார். பொலிசாரும், சாட்சிகளும் சொல்லுகிற விஷயங்களை அப்படியே எடுத்துக்கொள்ளத் தான் தயாராயில்லை என்பதை எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெளிவுபடுத்திவிட்டார்.

இந்த அரசாங்க வக்கீலைக் கண்டால் எல்லா வழக்கறிஞர்களுக்கும் பயம். மரண தண்டனையும் சிறைத் தண்டனையும் அவர் வாங்கிக் கொடுத்த அளவுக்கு வேறு யாரும் வாங்கிக் கொடுத்ததில்லையாம்.

மனித வாசனையே எதுவும் அவரிடம் கிடையாது. சட்டத்துக்கு அவர் பிரதிநிதி. தராசுத் தட்டு அவர் சரியென்று நினைத்திருக்கிற பக்கம் தாழுவதற்காக என்னவெல்லாம் செய்யமுடியுமோ அவ்வளவும் செய்கிறவர். தன் கழுகுக் கண்களைத் தாழ்த்திக் கொண்டு அந்த உயரத்திலிருந்து என்னைத் துளைக்கிற மாதிரிப் பார்த்தார். முதலில் அவர் இருந்த மேடையே உயரமானது. அவரை நான் அண்ணாந்து பார்க்க வேண்டும். அத்தோடு அவர் சொந்த உயரம் வேறு - திமிரான ஆறடி உயரம். அவர் தன் சிவப்பு அங்கியைக் களையவில்லை. தொப்பியை மட்டும் கழற்றித் தன் முன்னே வைத்துக் கொண்டார். பெருத்த தொடை போன்ற கைகளை ஊன்றிக் கொண்டார்.

மணமானவர் என்பதைக் குறிக்கும் மோதிரம் அணிந்திருந்தார் ஒரு விரலில். அதிர்ஷ்டத்துக்காக, குதிரை லாட ஆணியில் செய்த மிகப் பளபளப்பான இரும்பு மோதிரம் சுண்டு விரலில் அணிந்திருந்தார்.

தோரணை, என்னிடம் இவ்வாறு சொல்வது போல் இருந்தது: 'டேய் பொடியா! என்னிடமிருந்து தப்ப முடியுமென்றா நினைக்கிறாய்?

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

சொப்பனம்தான்! என் கைகளைப் பார்த்தால் கழுகு நகங்கள் மாதிரி இல்லாதிருக்கலாம். அவை என் உள்ளுக்குள்ளே இருக்கின்றன. அவை உன்னை நார் நாராய் கிழித்துப் போடப் போகின்றன. ஏன் வழக்கறிஞர்களெல்லாம் என்னைக் கண்டு பயப்படுகிறார்கள் தெரியுமா? ஏன் நீதிபதிகள் என்னை ஒரு கெட்டிக்கார பிராசிக்யூட்டர் என்று எனக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள் தெரியுமா? என் இரையை நான் ஒருபோதும் தப்ப விட்டதில்லை. நீ குற்றவாளியா நிரபராதியா என்பதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. நீ நடத்திய சீரழிந்த வாழ்க்கை, பொலிசார் அமைத்துள்ள சாட்சியங்கள், பொலிசாரின் வாக்குமூலங்கள் - இப்படி உனக்கு எதிராக உள்ள ஒவ்வொன்றையும் உபயோகப்படுத்திக் கொள்ளத்தான் நான் இங்கே இருக்கிறேன். புலன் விசாரணையில் குவித்துவைக்கப்பட்டுள்ள அருவருப்பான கூளங்களையெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு, உன்னைப் பார்த்தாலே குமட்டல் ஏற்படுத்தி உன்னை இந்தச் சமூகத்திலிருந்து ஒழித்துக்கட்டி விடுகிறது என்று ஜூரிகள் தீர்மானிக்கும்படி செய்து விடுவேன்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*


**"பட்டாம்பூச்சி" பற்றி எழுத்தாளர் சுஜாதாவின் அணிந்துரையிலிருந்து ஒரு பகுதி:**

**"இந்தப் புத்தகத்தின் வெற்றிக்குக் காரணம் உலகம் முழுவதும் இம்மாதிரி அராஜகங்களும், துன்ப எல்லைகளைத் தொடும் சம்பவங்களும் நிகழ்வதுதான். உலகில் நம் எல்லோருக்குமே பிடிவாதமாக உயிர்வாழும் ஆசை இருப்பதுதான். ரங்கராஜனின் மொழிபெயர்ப்பின் சரளத்துக்கு முக்கிய காரணம் அவரும் ஓர் படைப்பாளர் என்பதை மீண்டும் அடித்துச் சொல்வேன்.**

**"எவ்வளவு ஜீவனுள்ள கற்பனைகள்! அத்தகைய சூழ்நிலையில் எந்த ஒரு மனிதனும் இரண்டாகப் பிரிந்து விடுவான். அவனுக்குச் சிறகுகள் முளைக்கின்றன. எங்கெல்லாம் விருப்பமோ அங்கெல்லாம் பறக்கிறான். அவனுடைய இல்லம், அவனுடைய தந்தை, தாய், குடும்பம், இளமைப் பிராயம், அவனது வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களையெல்லாம் அவன் காணுகிறான். அவனுடைய வளஞ்செறிந்த உள்ளத்தில் கற்பனைக் கோட்டைகள் எல்லாம் நம்ப முடியாத தெளிவுடன் தோன்றுகின்றன."**



**தா**ய்லாந்து பிரதமர் தக்ஷின் சின்வத்ராவை ராஜினாமா செய்யக் கோரி, பாங்காக்கில் ஆயிரக்கணக்கானோர் பேரணி சென்ற போது பிடிக்கப்பட்ட படம் இது.



**சீ**னாவில் ஜியாங்க மாகாண தலைநகர் நான்ஜியாங்கில் உடல் பருமன் அதிகமுள்ளவர்களுக்காக தனி கிளப் உள்ளது. இங்கு நடத்திய போட்டியில் ஜியாவோ யங் என்ற இந்த 22 வயது பெண் வித்தை காட்டுகிறார். 5.1 அடி உயரமுள்ள இவருடைய எடை 150 கிலோ.



**ஜ**ப்பான் தலைகநர் டோக்கியோவில் பூமி சுற்றுச்சூழல் அமைப்பு சார்பில் நேற்று கண்காட்சி நடந்தது. அதில், 3.5 மீட்டர் நீளமும், 80 கிலோ எடையும் கொண்ட டைனோசர் ரோபோ நடந்து வருகிறது. 'புதிய எரிசக்தி மற்றும் தொழிற்துறை தொழில் மேம்பாட்டு அமைப்பு' இதை உருவாக்கியுள்ளது.



**மு**ம்பையில் 'இந்திய உலக அழகிப் போட்டி 2006' நடந்தது. இதில் இந்திய அழகியாக மும்பையைச் சேர்ந்த ஆர்த்தி தாக்குர் (நடுவில் இருப்பவர்) வெற்றி வாகை சூடினார். இரண்டாவது இடத்தை மும்பையைச் சேர்ந்த லாவன்யா ராஜேசும் (வலது), மூன்றாவது இடத்தை சண்டிகரைச் சேர்ந்த ப்ராணி அகுஜாவும் பிடித்தனர். மகுடம் சூட்டப்பட்டதும் வெற்றிப் புன்னகை பூக்கும் அழகிகள்.

# சுவிற்சர்லாந்தின் சமஷ்டி முறைமை





எனவே, கோட்டங்களுக்கிடையேயான ஒத்துழைப் பினூடாகச், சிகிச்சைக்கான செலவை ஒருங்கிணைப் பதற்குச் செய்யப்பட்ட ஒரு முயற்சி தோல்வியுற்ற போது, இறுதியில், தகுதி, மத்தியமயப்படுத்தப்பட்டது. 26 கோட்டங் களுக்கும் இடையில் ஒத்திசைவான தீர்வு தேவைப்படாத, ஆனால், ஏதோவொரு விதமான பிரதேசத்தீர்வு காணப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில், கோட்டங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு, மேலும் பயனுறுதிவாய்ந்ததாக இருக்கும்.

அரசாங்கங்களுக்கிடையிலான, முறைசாராத் தொடர்புகளைக் கொண்ட, சிக்கார்ந்த வலையமைப்பினால், இப் பல்வேறு நிறுவனங்களும் பூரணப்படுத்தப்படுகின்றன. தமது கொள்கை விருத்தியில், சமஷ்டி அதிகாதிகள், முன்னதாகக் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற யாப்புசார் கடப்பாடு, சமஷ்டிச் சட்டத்தை ஏற்றுக் கொள்வதில் கோட்டங்கள் பங்குபற்றுதல் (அரசுக்களின் சபையினூடாக), சமஷ்டிச் சட்டத்தைச் செயற்படுத்துவதில், கோட்டங்களின் முக்கிய பங்கு போன்றவற்றிலெல்லாம் இடைவிடாத தொடர்பாடல் அத்தியாவசியம். சமஷ்டி அதிகாரிகளும் கோட்ட அதிகாரிகளும் போட்டியினூடாக என்பதை விட, தோழமையினூடாகச் செயற்படுகிறார்கள். ஒத்துழைப்பு என்ற கலாசாரம் முறைமைக்குள் ஊடுருவி, சமஷ்டிப் பொறிமுறையை, நல்ல நிலையில் வைத்திருக்கின்றது.




## முடிவுகள்

சுவிற்சர்லாந்து மாதிரியின் உறுதிப்பாடும் சட்டப் படியான நிலையும், ஜனநாயக நிறுவனங்கள் (நேரடி ஜனநாயகம் உட்பட), ஒத்துழைப்புடன் கூடிய குடியாண்மை, வேறுபாடுகளுக்கு மரியாதை என்பவற்றின் கவனமான கலப்பில் தங்கியுள்ளது. உறுதிப்பாடும் சமாதானமும் சட்டப்படியான நிலையும், வெறுமனே பெரும்பான்மை ஆட்சியினால் எய்தப்பட முடியாததென்றும் வேற்றுமைகள் நிறுவனரீதியில் கணிக்கப்பட வேண்டுமென்றும், ஒரு பலமான நம்பிக்கை உண்டு. சமயச் சுதந்திரம், எண்ணிக்கையில் ஜேர்மானிய மொழியைப் பேசுபவர்கள் பெரும்பான்மையினராக இருந்தாலும் கூட, மூன்று மொழிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சமத்துவம் (நான்காவது மொழி ஏற்றக் கொள்ளப்பட்டுள்ளது), கோட்டங் களுக்கு வழங்கப்பட்டுள்ள மிக அதிகமான தன்னாட்சி என்பனவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் யாப்பு ரீதியான உத்தரவாதத்திலேயே, இம் முழு முறைமையும் தங்கியுள்ளது.

சிக்கார்ந்த பல்தேசியச் சமூகங்களுக்கு, மேலே தரப்பட்ட தகவல்கள், இது ஒரு பூலோக சுவர்க்கம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தக்கூடும். வேறுபட்ட கலாசாரங்களுக்கிடையிலும் சமயங் களுக்கிடையிலும் மொழிக் குழுக்களுக் கிடையிலும் மூர்க்கமான எதிர்ப்புகள் ஏற்படக்கூடிய உள்ளார்ந்த வாய்ப்புக்கள் இருந்த போதிலும், கடந்த 150 ஆண்டுகளில், சுவிற்சர்லாந்து, உலகத்திலேயே, அரசியல் ரீதியாக மிகவும் உறுதிப்பாடு நிறைந்த (செல்வம் மிக்க) நாடுகளுள் ஒன்றாகிவிட்டது என்பது உண்மை. சுய ஆட்சியையும் பகிரப்பட்ட ஆட்சியையும் இணைக்கும் நிறுவனரீதியான வடிவமைப்பு சாந்தமான தன்மையை ஏற்படுத்தியுள்ளது. செயன்முறை களுக்கு மதிப்புக் கொடுக்கும் பொது கலாசாரம் (கலந்தாலோசித்தல், தரவுகளைப் பகிர்தல் முதல் அபிப்பிராய வாக்கெடுப்பு வரை), அரசியல் வேறுபாடுகளை சமாதானமாக முகாமைத்துவம் செய்வதற்கு வழிவகுத்துள்ளது.

இப்படியிருக்க, பல மட்டங்களில் கருத்தொருமைப்பாடு தேவைப்படும் சிக்கார்ந்த முறைமையும், சமஷ்டி அடியெடுப்புகளைச் சிறு கோட்டங்களுள் பெரும்பாலானவை தடுப்பதற்கு இடமளிக்கும் முறைமையும் விமர்சிக்கப் பட்டுள்ளன. சமஷ்டிச் சட்டம் ஒன்று ஏற்றுக்கொள்ளப் படுவதற்குப் பத்து வருடங்கள் கூட ஆகலாம். இறுதியாக, அரசியல்வாதிகள் ஒரு சட்டத்திற்கு இணக்கம் தெரிவித்த பின்னர், அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றின் மூலம், அது மக்களால் நிராகரிக்கப்படலாம். குடும்பப் படிகள், பிரசவ விடுமுறை என்பன போன்ற சமூக முற்போக்குக் கொள்கைகள் தொடர்பாக இது ஒரு கிரமமான நிகழ்வாகும்.

பெல்ஜிய சமஷ்டி முறைமை, இடைவிடாது மீள் வரைவிலக்கணப்படுத்தலுக்குள்ளாக, ஏனைய சமஷ்டி முறைகள் பரிணாமமடைவதற்குப் பிரத்தியேகமாகக் கஷ்டப்பட்டவாறு இருப்பது போல் தோன்ற, சுவிற்சர்லாந்து, திடமானதொரு ஒத்திணங்களைக் கொண்டுள்ளதென்று



தோன்றுகிறது. 1848ஆம் ஆண்டு அரசியல் யாப்பு, 1874ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு வழிவகுத்தது. இது, பின்னர், 1999ஆம் ஆண்டு நவீனமயப்படுத்தப்பட்டது. அடிப்படை உள்ளடக்கம், சமஷ்டி வடிவமைப்பு என்பன திருத்தப்படவில்லை. மொழி இலகுவாக்கப்பட்டது. ( இது, இந்த, அரசியல் யாப்பை, மிகத் தெளிவான யாப்புகளுள் ஒன்றாக்கியது.) நீதிமன்ற முடிவுகள் அல்லது நடைமுறைகள் என்பவற்றினால் ஏற்படுத்தப்பட்ட சில மாற்றங்கள் அரசியல் யாப்பில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. ஒரு புதிய, மேலும் சமகால, மேலும் சிறந்த விதத்தில் பொருத்தமாக்கப்பட்ட அரசியல் யாப்பை ஏற்றுக்கொள்ளும் செயற் திட்டம், வெற்றிபெற்றது. எனினும், சில முக்கியமான கருத்து வேறுபாடுள்ள பிரச்சினைகள் பிற்போடப்பட்டன. ஒன்று தகுதிகளின் பகிர்வு மாற்றியமைக்கப்பட வேண்டியிருந்தமை ஒன்றாகும் (அதிக சமஷ்டி அதிகாரங்களினூடாக, சிலர் மேலும் ஒரு சீரான நடவடிக்கைகளை விரும்புகிறார்கள். ஏனையோர், தொடர்ந்து கோட்டம் சார் சுதந்திரத்தை விரும்புகிறார்கள்). அரசிறை வரும்படி சார் சமஷ்டியும் செல்வத்தை மீள்பகிர்வு செய்வதும் அடுத்ததாகும். நீதித்துறை தொடர்பான சில திருத்தங்கள், 1999ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதிக்கென விடப்பட்டன.

ஒவ்வொரு பிரச்சினையும் தீர்ப்பதற்கான முயற்சி, செயல் இழப்பைக் கொண்டு வரும் என்பதே கற்க வேண்டி பாடமாகும். சில விடயங்கள் தொடர்பாக, கருத்தொற்று மையை உருவாக்கி, சில சீர்த்திருத்தங்களை ஏற்றுக் கொண்டு, பின்னர் பல மேலதிகப் பிரச்சினைகளைக் கையாளலாம். மேலோட்டமான மாற்றங்கள் மட்டுமே போதிய அளவு முற்றுமுழுதான ஆதரவைப் பெறுதல், படிப்படியான அணுகுமுறையிலுள்ள அபாயமாகும். சீர்திருத்தத்தின் சாரம், ஒருபோதும் உண்மையாகப் பேச்சுவார்த்தைகளுக்குட் படுத்தப்படுவதில்லை (இதுவே சுவிற்சர்லாந்திலுள்ள நிலை என்று சிலர் விவாதிக் கின்றார்கள்).

இறுதியாக, கடந்த சில ஆண்டுகளாக, மக்களின் அரசியல் நிலைமைகள் தொடர்பாக, சமயம் குறைந்தளவு செல்வாக்குச் செலுத்துவது போல் தோன்றுகின்றது. இரண்டு, பிரதான மொழிக் குழுக்களுக்கிடையிலும் அதிக பிளவு ஏற்பட்டுள்ளது போல் தோன்றுகின்றது. இதைச் சமூகப் பாதுகாப்புப் பரப்பில் அவதானிக்க முடிகின்றது. நாட்டின் பிரெஞ் பேசும் பகுதி, முற்போக்குக் கொள்கை களை ஆதரிக்கின்றது. ஜேர்மானிய மொழி பேசும் பகுதி, அதிக அளவில் பழமைபேணும் போக்கைக் கொண் டுள்ளது. இதே போன்று, பிரெஞ் மொழி பேசுவோர், சுவிற்சர்லாந்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் ஒருங்கிணை வதை ஆதரிக்கின்றது. பெரும்பான்மையினரான ஜேர்மானிய மொழியைப் பேசுவோர், அதில் உறுப்பினராவதை விரும்பவில்லை. அல்லது, இந்த வேகத்தில் விரும்பவில்லையெனலாம். இந்த இரு துருவப் பதற்றங்கள், பெல்ஜியத்தில் தென்படுவது போல் துலக்கமாகத் தெரியவில்லை. ஆனாலும், இவை முக்கியத்துவம் பெற்றுக் கொண்டு வருகின்றன. எனவே இவ்வாறு இவை, சமாதானமான சுவிஸ் மாதிரிக்கு அறைகூவலாக அமைகின்றன.

**(முற்றும்)**

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

**04**

## முடிசூடா ராணி

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

ஸோபியா டொறத்தியோ இளமைத் தீயில் வெந்து கருகினாள். தூண்டிவிடப்பட்ட அவளது பெண்மையினை அவளால் அடக்க முடியாமல் இருந்தது. இவ்வேளையிலேயே கிறிஸ்ரோபர் மார்க் என்பவன் டொறத்திக்கு அறிமுகமானான். அவனொரு இராணுவ அதிகாரி என்பது மட்டுமல்ல, டொறத்தியின் நெருங்கிய தோழியினால் அறிமுகப்படுத்தப்பட்ட தோழியின் அண்ணனாகவும் இருந்தான். இத்தனைக்கும் டொறத்திக்கு ஓர் ஆண் குழந்தைகூட இருந்தது. அந்தக் குழந்தையே பிற்காலத்தில் இரண்டாம் ஜோர்ஜ் மன்னரென அழைக்கப்பட்டார். முதலாம் ஜோர்ஜ் மன்னர் அரண்மனையை விட்டு வெளியேறிய உடனேயே, மகாராணி டொறத்தியின் படுக்கை அறை கிறிஸ்ரோபர் மார்க்கின் பள்ளியறையாக மாறிவிடும். கிறிஸ்ரோபர் மார்க் இராணுவ அதிகாரியாக இருந்தது மட்டுமன்றி, கட்டுமஸ்தான ஆண் மகனாகவும் இருந்தான். மன்னர் ஜோர்ஜிடம் கிடைக்காத உடல் சுகத்தினை கிறிஸ்ரோபர் மார்க்கிடம் டொறத்தி தாராளமாகவே பெற்றுக் கொண்டாள். அந்த விடயம் அரசல் புரசலாக தெரியவந்தாலும் அரண்மனை விடயம் என்ற படியினால் அமுக்கியே வாசிக்கப்பட்டது. ஆயினும் இந்த இரகசிய சல்லாபம் வெகு காலம் நீடிக்கவில்லை. மன்னரின் உறவினர்களால் டொறத்தியின் அந்தரங்கம் ஜோர்ஜ் மன்னருக்கு தெரியப்படுத்தப்பட்டது. 1694ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி ஜோர்ஜ் மன்னர் வழமைபோலவே அண்டை நாட்டின் மீது படையெடுப்பதாக அறிவித்து, பரிவாரங்கள் புறப்பட்டுச் சென்றன. ஆனால் யாருக்கும் தெரியாமல் ஜோர்ஜ் மன்னர் அரண்மனையில் தங்கியிருந்தார். வழமைபோலவே இராணி டொறத்தியுடன் சல்லாபிப்பதற்காகப் பள்ளியறைக்குள் நுழைந்த கிறிஸ்ரோபர் மார்க்,



மன்னரின் அந்தரங்கப் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டதாக வரலாறு கூறுகிறது. 1694 ஜூலை 17ஆம் திகதிக்குப் பின்னர் கிறிஸ்ரோபர் மார்க் காணாமல் போன ஒருவராகவே கருதப்பட்டார். அவர் சிரச்சேதம் செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக சில வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து மகாராணி டொறத்தி, அவளது அறையிலேயே சிறைவைக்கப் பட்டாள். அவளது பள்ளியறைக் காதலன் கிறிஸ்டோபர் மார்க் எழுதிய காதல் ரசம் சொட்டும் கடிதங்கள் அவளது அறையிலிருந்து மீட்கப்பட்டன. இதனை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம் 1694ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி டொறத்தி குற்றவாளியெனத் தீர்ப்பளித்தது. அதனைத் தொடர்ந்து அவள் அரண்மனைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டாள். அவளின் தாயார் எவ்வளோ கெஞ்சிக் கேட்டும், அவளைப் பார்ப்பதற்குத் தாயாருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. தொடர்ச்சியாக 32வருட கால சிறை வாழ்க்கையின் பின் 1726ஆம் ஆண்டு தனது 60ஆவது வயதில் முதலாம் ஜோர்ஜ் மன்னரின் மனைவி ஸோபியா டொறத்தி சிறையிலேயே காலமானார்.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்து மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## உரிமை கோரப்படாத புலிகளின் தற்கொலைத் தாக்குதல்கள்

**இலங்கையில்** தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அறிமுகப்படுத்தி, தொடர்ந்தும் அத் தாக்குதலை நடத்தி வரும் ஒரேயொரு இயக்கம் புலிகள்தான். இரு உலகத் தலைவர்களைத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் கொன்றொழித்த ஒரே அமைப்பும் அதுதான். ஆனால், கொழும்பு நகர மண்டப தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவைக் கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. தற்கொலைக் குண்டுதாரியோடு பல அப்பாவி மக்களும் பலியானார்கள். சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவைக் கொலை செய்ய நான்கு தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன வென்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.

### 154 தேனீர் கோப்பைக்குள் இரத்தம்!

எதிரியை அல்லது எதிரியின் இலக்குகளை அழிப்பதோடு தற்கொலைக் குண்டுதாரி தன்னையும் அழித்துக் கொள்வதால், தற்கொலைத் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய தகவலைப் பெற்றுக் கொள்வது மிகக் கஷ்டமான காரியமாகும். ராஜிவ் காந்தியைக் கொன்ற தற்கொலைக் குண்டுதாரியின் பெயர் தனு என்றே நாமறிவோம். ஆனால் இந்திய மரபணு நிபுணர் பி.சந்திரசேகரன் தனுவின் சிதறிய உடற்பாகங்களை வைத்து நடத்திய ஆய்வின் மூலம் பெறப்பட்ட மரபணுக்களைக் கொண்டு அப் பெண்ணின் பெயர் தேன்மொழி இராஜரட்ணம் என அறியப்பட்டது. புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களில் குண்டுதாரி தற்கொலை அங்கி அணிந்து நடத்திய முதலாவது தாக்குதல் இலங்கைக்கு வெளியேதான் நடத்தப்பட்டது. அதுதான் தனு மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல். மில்லர் தற்கொலை அங்கி அணிந்து சென்று தாக்குதல் நடத்தவில்லை. அவர் வெடி மருந்துகள் நிரப்பப்பட்ட வாகனமொன்றினை ஓட்டிச் சென்றே தாக்குதல் நடத்தினார்.

தற்கொலைப் பயங்கரவாதம் பற்றி ஆய்வு நடத்திய




மேற்கு நாட்டு ஆய்வாளர்கள் புலிகள் இயக்கம் 78 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியுள்ளதென்று மதிப்பிட்டுள்ளனர். ஆனால், புலிகள் இயக்கமோ 248 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறியுள்ளது. சிவிலியன்கள் மீதோ சிவிலியன் நிலைகள் மீதோ நடத்தப்படும் தற்கொலைத் தாக்குதல்களுக்குப் புலிகள் உரிமை கோருவதில்லையென்று கூறப்படுகிறது. அதாவது, படையினரோடு சம்பந்தப்படாத தாக்குதல்களுக்குப் புலிகள் உரிமை கோருவதில்லையென்று கூறப்படுகிறது. தம்மைப் பயங்கரவாத இயக்கமெனக் காட்டிக்கொள்ள விரும்பாததாலேயே இவ்வாறு அவர்கள் உரிமை கோருவதில்லையென்றும் சொல்லப்படுகிறது. 1993ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கொல்லப்பட்டார். இவரைக் கொன்றவர் 'பாபு' என்றழைக்கப்பட்ட தற்கொலைக் குண்டுதாரியே இத் தாக்குதலுக்கான சகல அலுவல்களையும் கவனித்தவர்

*(அரசியல் தொடர்)*

புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஜனம் மாஸ்டர் என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன. ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்காவும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலிலேயே உயிரிழந்தார்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்களின் நினைவாக 1999ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஐந்தாம் திகதி கரும் புலிகள் தினத்தை முன்னிட்டு வன்னியிலுள்ள புதுக்குடியிருப்பில் புலிகள் அமைப்பு, ஞாபக ஸ்தூபியொன்றினை திறந்து வைத்தது. அன்றைய தினம் முல்லைத்தீவில் புலிகளின் அரசியல் பிரிவு வெளியிட்ட அறிக்கையில், 1987 முதல் 147 தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தது.

புலிகள், தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் மிக அதிகளவு தலைவர்களைக் கொன்றொழித்தனர். வேறெந்த இயக்கமும் வேறெந்த நாட்டிலும் இந்தளவுக்கு அதிக எண்ணிக்கையில் தலைவர்களைக் கொன்றதில்லையென்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இலங்கையின் பொருளாதார, அரசியல், கலாசார, இராணுவ மையங்களின் மீதும் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அவற்றில் பெருந்தொகையான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பந்தோபஸ்துப் படையினரின் தலைமையகமாக விளங்கிய கூட்டுப்படைத் தலைமையகத்தின் மீதும் கொழும்பிலுள்ள மத்திய வங்கி, உலக வர்த்தக மையம், கண்டி தலதா மாளிகை, கொலன்னாவ எரிபொருள் சேமிப்பு நிலையம் ஆகியவற்றின் மீதும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப் பட்டிருக்கின்றன. கலா நிதி நீலன் திருச்செல்வம், புலிகளின் தற் கொலைக் குண்டுத் தாக்குதலாலேயே கொல்லப்பட்டார். கடற்படைத் தளபதி அட்மிரல் கிளன்சி பேர்னாண்டோ மோட்டார் சைக்கிளில் பயணித்த தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டார். இலங்கை - இந்திய கடற்படை ஒத்துழைப்பு தொடர்பாகப் புதுடில்லியில் கலந்துரையாடிவிட்டு திரும்பிய பின்னரே அவர் கொல்லப்பட்டார். யாழ்.குடா நாட்டுக் கட்டளைத் தளபதியாக விளங்கிய பிரிகேடியர் லாரி விஜேயரத்ன, யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் ஆனந்த ஹம்மன்கொட ஆகியோரும் புலிகள் நடத்திய வெவ்வேறான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் சிலர், புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் சிலர், தமது இலக்குகளைத் தாக்குவதற்கு முன்னரேயே குண்டுகள் வெடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எட்டாம் திகதி, வெடி பொருட்களுடன் வந்த லொறியொன்று காலியில் வெடித்துச் சிதறியது. 1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ஆம் திகதி கொழும்பு ரொறிங்ரன் சதுக்கத்தில் இளநீர்க் குரும்பைகளுடன் வந்து கொண்டிருந்த தள்ளுவண்டியொன்று குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே வெடித்துச் சிதறியது. இந்த வண்டியைத் தள்ளிவந்த தற்கொலைக் குண்டுதாரி உடல் சிதறி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். 1998ஆம் ஆண்டு மார்ச் ஐந்தாம் திகதி வெடிகுண்டுகளுடன் வந்த பஸ்ஸொன்று கொழும்பு, மருதானையில் வெடித்துச் சிதறியது.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

பல தற்கொலைத் தாக்குதல்களுக்கு மட்டுமல்ல, தமிழ் தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், சரோஜினி யோகேஸ்வரன் உட்படப் பலரின் கொலைகளுக்கு புலிகள் உரிமை கோரியது கிடையாது. "எழுத முடியாத காரியங்கள்" என்ற தலைப்பில் உரிமை கோர முடியாத பல கொலைகள் பற்றி 01.09.94 ஆம் திகதிய உலகத் தமிழர் பத்திரிகையில் வெளியான கட்டுரையில் பல உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ராஜிவ் கொலை பற்றியும் பல்வேறு கொலைகள் பற்றியும் அக் கட்டுரையில் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் பல தற்கொலைத் தாக்குதல்களுக்குப் புலிகள் திட்டமிட்டிருந்ததாக இந்திய புலனாய்வுத் துறையினர் இந்திய அரசுக்கு அறிவித்திருந்தனர். இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவிகளை அளிக்குமானால் இவ்வாறு தாக்குதல்களுக்கு திட்டமிட்டிருந்ததாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.

சோனியா காந்தி உட்படப் பல இந்தியத் தலைவர்கள் மீது குறிவைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானும், புலிகளின் முக்கியஸ்தரான வெடி தினேஷ் என்பவரும் பல உளவாளிகளை இந்தியாவுக்குள் அனுப்பி வைத்திருந்ததாகவும் இந்திய புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

ராஜிவ் காந்தி கொல்லப்பட்டபோது பொட்டம்மானின் பெயர் பரவலாக அடிபடத் தொடங்கியது. ராஜிவ் கொலை வழக்கில் அவர் ஓர் எதிரியும் கூட. ஆனால் பொட்டம்மான் என்றொருவர் புலிகள் இயக்கத்தில் இல்லையென்று அப்போது புலிகளின் பிரதித் தலைவராக விளங்கிய மாத்தையா தெரிவித்திருந்தார். பின்னர் 'றோ' உளவாளியென்ற குற்றச்சாட்டில் மாத்தையாவைக் கைது செய்தவரே பொட்டம்மான்தான். அப்போது பொட்டம்மானின் பெயர் பரவலாக அடிபடத் தொடங்கியது.

**(தொடர்ந்து வடியும்....)**




ரேணுகா என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அவள் தன்னைப் பற்றியும் தனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்றும் புலம்பிக் கொண்டிருந்தாள். இதையெல்லாம் குளத்தினுள் பாசித் துண்டுகளை எறிந்த படி குமார் கேட்டுக் கொண்டிருந்தார். திடீரென பெரிய சத்தம் கேட்கவே குமார் திடுக்கிட்டு எழுகிறார். ஆனால்......

குளத்துக்குள்ளிருந்து கரையேறி வருபவர்களின் உருவங்கள் தெளிவாக இருக்கவில்லை. நிழல் வடிவங்கள் போலிருந்த அத்தனை பேரும் பெண்களாக இருந்தனர். குமாருக்கு குழப்பமாக இருந்தது.

"என்ன ரேணுகா இது?- கையை விடுவிக்க முயன்ற குமார் கேட்டார்.

"இவங்கள்லாம் இங்கேயே இருக்கிறவங்கதான். அப்பா, இவங்களை இங்கேதான் தங்க வைச்சிருக்காரு" அவள் சிரித்தபடியே கூறினாள்

"இந்தக் குளத்துத் தண்ணிக்குள்ளயா?" குமார் வியப்புடன் அவளைப் பார்த்தார்.

"உண்மைதான் அப்பா இப்படிப்பட்ட வேடிக்கைகளை நிறையவே செய்றது வழக்கம். அதோ அந்த எட்டி மரத்திலயும் இவுங்களைப் போலச் சிலர் இருக்கிறாங்க!" இப்போதும் அவளது சிரிப்பு மாறவில்லை.

அப்போதுதான் அவளது பேச்சில் ஏதோ உட்பொருள் இருக்கிறது என்பது அவளுக்குப் புரிந்தது.

முடிந்த விரைவில் அங்கிருந்து தப்பிக்க வேண்டுமென்று நினைத்தவர். அவளிடமிருந்து விடுபடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்.

"அட...... சும்மா உட்காருங்க. அவங்க உங்களை ஒண்ணும் பண்ணமாட்டாங்க" - ரேணுகா வற்புறுத்தினாள்.

வேண்டாம் நாம் புறப்படலாம்! அவர் முன்புறமாக நடக்க ஆரம்பித்தார். அப்போது அவருக்குப்



**எழுதுவது சிவன்**

பின்னாலிருந்து ஏராளமானவர்கள் வாய்விட்டுச் சிரிக்கும் சத்தம் கேட்டது.

குமார் திரும்பிப் பார்த்தபோது குளத்திலிருந்து எழுந்து வந்த பெண் உருவங்கள் மொத்தமும் குளக்கரையில் நின்று சிரித்துக்கொண்டிருந்தனர். அவர்களது சிரிப்பு விகாரமானதாகவும், பைசாசிகத்தனமாகவும் இருந்தது.

குமாரின் இதயத்தில் பய உணர்வு அரும்பத் தொடங்கியது.

ஒருவாறாகக் கையை உதறியவர் மிகவும் வேகமாக நடக்கத் தொடங்கினார்.

கையிலிருந்து நழுவிய குமாரின் தோளைப் பிடித்தாள் ரேணுகா.

அந்தப் பிடியின் அழுத்தம் குமாருக்கு ஓரளவு வலியை ஏற்படுத்தவும் செய்தது. கூர்மையான நகம் தனது சதைக்குள் இறங்குவது போல் தோன்றவும் செய்தது. தான் ஏராளமான ஸுகளின் (காட்டேரிகளின்) பிடியில் அகப்பட்டிருப்பது அப்போதுதான் அவருக்குப் புரிந்தது.

எப்படியாவது அந்தப் பைசாசக் கூட்டத்திடமிருந்து தப்பித்தாக வேண்டும் என்கிற சிந்தனையுடன் தலை தெறிக்க ஓடத் தொடங்கினார். தேவதத்தன் நம்பூதிரியின் வீட்டுத் திண்ணையை மிதித்தவர் திரும்பிப் பார்த்தபோது அந்தப் பெண் உருவங்கள் சமாதிக்கு அருகில் மறுபடியும் (கேரளத்தில் இறந்து போனவர்களை அவரது வீட்டைச் சேர்ந்த பகுதியிலோ, தோட்டத்திலோ எரித்து, சாம்பலை வைத்து மாடம் கட்டுவது வழக்கம். இது சமாதி போல் இருக்கும். மாலை நேரத்தில் இந்த மாடத்தில் விளக்கேற்றுவதும் வழக்கம்) நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

தான் கேள்விப்பட்டிருந்ததற்கு மாறாக இத்தகைய பைசாசிக சக்திகளுக்கு மற்றவர்களைத் தொடும் சக்தியும் இருப்பது புரிந்தது.

படுக்கையில் படுத்த பிறகும் அவரால் அன்றிரவு முழுவதும் உறங்க முடியவில்லை.

ஒவ்வொரு தடவை கண்களை மூடும்போதும் சற்று முன்பு நடந்த பயங்கரமான காட்சிகள் கண்களுக்கு முன்னால் வந்து பயமுறுத்தும்.

பொழுது விடிவதற்காக அவர் காத்திருந்தார். கிழக்குத் திசையில் வெளிச்சம் சற்றுத் தென்பட்டபோது குமார் எழுந்தார்.

நேராகக் குளக்கரையை நோக்கி நடந்தார். இரவு நடந்த சம்பவத்தின் அடையாளமாக அங்கு ஏதேனும் மிச்சம் மீதி இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தார்.

அப்படி எந்த அடையாளமும் அங்கு தென்படவில்லை.

ஆனால், குளத்தின் மேற்புறப்படியின் கீழே இலஞ்சிப்பூ ஒன்று கிடப்பதைக் கவனித்தார். சுற்றுமுற்றும் பார்த்தபோது அருகில் எங்கும் இலஞ்சி மரம் தென்படவில்லை. எதற்கும் இருக்கட்டும் என்று அதை எடுத்துக் கொண்டார்.

இரவு தனக்கு நேர்ந்த அனுபவங்களின் அடையாளமாக அந்த இலஞ்சிப்பூ அவருக்குத் தோன்றியது.

குளித்துவிட்டு, மடியில் அந்தப் பூவை வைத்துக் கொண்டு தேவதத்தன் நம்பூதிரியிடம் வந்தார்.

*(வாசனை வீசும்....)*

**மனதுக்கு நிம்மதி**

# நிரந்தர உண்மைகள்

**வாழ்வில்** முன்னேறத் துடிக்கும் நாம், உலகம் ஒரு நியாயத்திற்குக் கட்டுப்பட்டு இயங்கி வருவதை உணரவேண்டும்: உலகில் நிகழும் எல்லாவித காரியங்களும் ஒரு காரணத்தின் விளைவாகவே நிகழ்கின்றன, விதையிலிருந்துதான் செடி கிளம்புகிறது. ஓர் எண்ணத்திலிருந்துதான் செயல் பிறக்கிறது. காரணம் இல்லாமல் காரியமில்லை. நாம் ஒரு காரியத்தைத் துவக்கினோமானால் அதன் விளைவுகளை எதிர்பார்க்க வேண்டும். அதற்கு நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று நமது பெரியவர்கள் அழகாகக் கூறியிருக் கிறார்கள். ஆக, நாம் துவக்கும் செயல்களின் விளைவுகளிலிருந்து தப்பிக்க முடியாது. திருடுபவர்களும், பொய் சொல்பவர்களும், "யார் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்?" என்ற தன்னம்பிக்கையில் பல சமயம் தவறிழைக் கிறார்கள். அங்கே நியாயம் பார்த்துக் கொண்டிருக்கிறது. உண்மை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

தன் மனைவி கண்ணகியை அழைத்துக் கொண்டு வறியவனாய் மதுரை நோக்கிச் செல்லும் கோவலனைப் பார்த்து மாடலன் கேட்கிறான்; "நானறிந்தவரை இம்மையில் நீ செய்தவை எல்லாம் நல்ல காரியங்கள். எப்படி நேர்ந்தது. இக்கதி உனக்கு? என இளங் கோவடிகள் மறைமுகமாக "ஊழ்வினை வந்து உறுத்த", இப்படி நேர்ந்தது கோவலனுக்கு என்று எடுத்துக் காட்டுகிறார். சில சமயம் விளையும் பலன்களுக்கான காரணங்கள் நமக்குப் புரிவதில்லை. அதற்காக "இவ்வுலகம் தறிகெட்டு நடக்கிறது, வாய்த்தவர்களுக்கு வாழ்க்கை" என்று சிலர் வறட்டுத் தத்துவம் பேசுகிறார்கள். இவ்வுலகில் நமக்குத் தெரியாத விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்க முடியாத - எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன.

இவ்வுலகில் எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு என்பதை நாம் உணரவேண்டும். பூக் கள் வசந்த காலத்தில்தான் பூக்கின்றன. பழங்கள் பருவ காலங்களில்தான் பழுக்கின்றன. குழந்தை ஒரு குறிப்பிட்ட வயது வளர்ந்த பிறகுதான் பருவமடைகிறது. அதே போல சில காரியங்கள் நடப்பதற்கும் சில காலம் நேரம் தேவைப்படுகிறது. ஒரு காரியம் நிகழ் வதற்கு அதற்கேற்ற சூழ்நிலை வேண்டி இருக் கிறது. சூழ்நிலை வாய்ப்பாக அமையப் பல மனிதர்கள், சம்பவங்கள் என்று பல விஷயங்கள் சேர்ந்து இயங்க வேண்டி இருக்கிறது.



இந்த உணர்வு தேவை. அதற்கு வேண்டிய பொறுமை தேவை. ... பக்குவம் தேவை.

தடி கொண்... அடித்துக் காயைக் கனியாக்கி விட முடிவதில்லை. இந்த மகத்தான உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதைப் புரிந்துகொள்ளாத போது, அவசரப்படும்போது அதற்கு நேர் எதிரான பலன்கள் புறப்படுவதைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட நாள் அடைகாத்த பின்தான் முட்டை குஞ்சாகிறது. ஒவ்வொன்றுக்கும் ஒரு பருவ காலம் உண்டு.

சதா சிந்தியுங்கள். செயல்படுங்கள். அத்துடன் இயற்கையுடன் ஒத்துப்போங்கள். இரவில் விழித்துக் கொண்டு இருப்பவனுக்கு இரவு நீண்டதாய்த் தோன்றும். நோயில் வாடுபவனுக்கு இரவு நேரம் என்றுமே விடியாத இரவாய்த் தோன் றும். நம் அடிமனத்தில் 'பொழுது விடியப் போகிறது' என்ற நினைவு தேவை. பொழுது விடிவதை எதிர்நோக்கும் மனோபாவம் தேவை. அத்துடன் இரவுக்கெதிராகக், கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்வதை விடுவித்து இரவையும் இரசிக்கத் தெரிந்தவனே - இரவின் அமைதியையும் குளிரையும் அனுபவிக்கத் தெரிந்தவனே - வாழ்க்கையை வெற்றி காண்கிறான்.

பொருளும் சக்தியும் ஒன்றே என்ற உணர்வு, நம்மை நமது சூழ்நிலையின் நண்பனாக்குகிறது. அணுசக்தியில் பொருள் உடைந்து சக்தியாக வெளிவருகிறது. மன மருத்துவர்கள் மூளைக்கும் மனத்திற்குமுள்ள தொடர்பைப் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். அவர் களுடைய அதிசயம், மூளை, என்ற சடப்பொருள், எப்படி எண்ணம் என்கிற சடமல்லாத பொருளாக மாறுகிறது என்பதாகும். கல்லும் மண்ணும், தாவரமும், மிருகமும், மனித இனமும் வெவ்வேறு விழிப்பு நிலை பெற்ற சடப்பொருள்கள் என்ற உணர்வு நமக்கும் நமது சூழ்நிலைக்கும் ஒரு தொடர்பேற்றுகிறது. அதையே "வானில் மின்னும் நட்சத்திரங்களுக்கு இப்பிரபஞ்சத்தில் இடம் இருப்பது எவ்வளவு உரிமையோ, அதே உரிமை மனிதனாகிய உனக்கும் இவ்வுலகில் இருக்கிறது" என்றார் தத்துவஞானி. இதன் மூலம் எல்லாப் பொருட்களையும், எல்லா மனிதர்களையும் சமமாக நோக்கும், அகங்காரமற்ற நிலையில் பார்க்கும் ஓர் அறிவு நம்மை அடைகிறது.

ஓர் அணுவை எடுத்துக் கொண்டோமானால் அதில் நடுவிலே கருப்பொருளும் அதைச் சுற்றி எலக்ட்ரான்களும் ஓடுகின்றன என்று விஞ்ஞானம் கூறுகிறது.

அந்த எலக்ட்ரான்கள் திடப்பொருளாலான ஒரு புள்ளியா அல்லது மேகக் கூட்டம் போன்ற ஓடுகின்றன சக்தியா என்பதை அறுதியிட்டு உரைக்க இயலாது என்று பௌதிகம் கூறுகிறது. ஹைசன்பர்க் என்ற விஞ்ஞானி அதையே 'நிலையற்ற தன்மை' (Uncertainity Principle ) என்கிறார்.

"இத்தகைய பல கோடி அணுக்களினால்தான் மனிதன் ஆகியிருக்கிறான். பொருள் சக்தியாக மாறும் தன்மையும், எலக்ட்ரானின் நிலையற்ற தன்மையுமே, மனித அளவில் மூளை மனமாக பொருள் - சக்தி வடிவம் பெற்றிருக்கிறது போலும்" என விஞ்ஞானிகள் ஹேஷ்யம் செய்கின்றனர்.

கடைசியாக இவ்வுலகம் ஒரு கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. கோள்கள் ஒன்றுக்கொன்று ஒரு பரஸ்பர கவர்ச்சியில், ஈர்ப்பு சக்தியில் இயங்கி வருகின்றன. மனிதர்களுக் கிடையே நிலவும் அத்தகைய சக்தியைக் கவர்ச்சி என்றும், அன்பு என்றும், காதல் என்றும் கூறுகின்றோம். பிறருடைய உரிமைகளுக்கு ஊறு விளைவிக்காத வகையில் ஒரு கட்டுப்பாட்டுடன், ஒரு நெறியில் நம் வாழ்க்கையை இயக்கும்போது நாம் நமது வாழ்வின் தலைவனாகிறோம். நமது விதியை நாம் நிர்ணயிக்கிறோம். கட்டுப்பாடு இல்லாத, நெறியில்லாத, நிதானமில்லாத வாழ்க்கை, தறிகெட்டு ஓடும் கொம்புக் காளைக் குச் சமமாகும். அது பிறரைப் புண்படுத்துவதுடன் தன் வாழ்விற்கும் ஊறு விளைவித்துக் கொள்கிறது.

உணவு, உழைப்பு, தேகப் பயிற்சி, உடலுறவு என்று எதை எடுத்துக்கொண்டாலும் நெறியில்லாத நிலையில் அதன் விதி என்ன என்று யோசித்துப் பாருங்கள். அளவுக்கு மிஞ்சி உண்பவன் நோய்க்கு ஆளாகிறான். அளவுக்கு மிஞ்சி போகிப்பவனும் அப்படியே தன்னை அழித்துக்கொள்கிறான்.

தமிழிலக்கியத்தில் பேசப்படும் கற்பு அத்தகைய ஒரு நெறியாகும். அந்த நெறிக்கு மகத்தான வலிமை உண்டு. அந்த நெறியுள்ளவர்களால் எதனையும் சாதிக்க இயலும். அவர்கள் எதையும் கண்டு அஞ்சுவதில்லை. பட்டினி, விரதம் என்பவை இந்த நெறியை வளர்க்கும் மனப்பயிற்சிகளாகும்.

நெறி என்பது கற்பில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் இருக்க வேண்டிய ஒன்று. துரதிர்ஷ்டவசமாக நம் நாட்டில் கண்ணகியின் கற்பு நெறிகள், பேசப்படுகிற அளவிற்குச் சமுதாய நெறிகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 161க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.எச்.எம். இஸ்மாயில், 662/26, கொடகோ மாவத்த, அனுராதபுரம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. தேவிகா பத்மராஜா. வயல் வீதி, மன்னார்.
2. வ. இளநிதி, 5 கஜலக்ஷ்மி பிள்ளையார் கோயில் வீதி, உப்போடை, மட்டக்களப்பு.
3. திருமதி பத்மா, 28, நவகம்புர, ஸ்டேஸ் வீதி, கொழும்பு 14.
4. எம்.எம்.எம். இஸ்ஹாக், நடுத்தீவு, மூதூர் - 07.
5. எம்.ஜே.எம். அஜ்ஹத், 125, சங்கம, சீனக்குடா.
6. திருமதி நிர்மலா, 11/27 A, மருதானை வீதி, ஹெந்தளை.
7. ந.நாகலிங்கம், 22, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.
8. திருமதி ஜெயா, 155/07, ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13.
9. திருமதி எம். சுந்தரேசன், 49, பார்க் வீதி, ஹட்டன்.
10. த. யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

## குறுக்கெழுத்துப் போட்டி 163

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| | 26 | 27 | 28 | | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1. அர்ச்சுனனின் மைந்தன்.
7. சிற்பங்களை உருவாக்குபவன் (குழம்பியுள்ளது)
11. உடன்பாட்டை உணர்த்தும் சொல்.
15. வார இதழின் பெயரொன்று
20. விக்ரம் நடித்து வெளியான திரைப்படம் (திரும்பியுள்ளது).
22. இராட்சத கணங்களை இப்படியும் அழைப்பர் (குழம்பியுள்ளது).
26. காதல் வயப்பட்ட பெண்களில் ஏற்படும் மாற்றத்தை இவ்வாறு கூறுவர் கவிஞர்.
31. உறுதி என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது).
35. ஓர் தோற்கருவி அல்லது சொல் என்று பொருள் (திரும்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. சக்தியின் நாமங்களில் ஒன்று.
2. புறாவுக்காக தன்னைக் கொடுத்த அரசன் (தலைகீழ்).
3. கோபம் என்று பொருள்.
5. கருவி (குழம்பியுள்ளது).
12. இயற்கை அனர்த்தங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
16. ஆபத்தான உயிரினம் ஒன்று.
20. தவ வலிமையுடையோரால் இடப்படுவது.

**குறுக்கெழுத்துப் போட்டி 161 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நெ | 2 லி | 3 ஸோ | 4 ம் | 5 ய | 6 ன் |
| 7 ல் | 8 ம | 9 க | | 11 சி | 12 மா |
| | 14 ல் | 15 தி | | 17 ம் | 18 ஆ |
| 19 தா | | | 22 டு | 23 வ | |
| 25 தா | 26 லி | | 28 உ | | 30 ணை |
| | 32 பு | 33 றா | | 35 ந | 36 தி |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 04.04.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-163
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

**- வழங்குவது றாஹில்**

## பிறப்பு புன்னகை நிகழ்ச்சியல்ல

இருபால் உயிர்கள்
உருகும்போது சுரந்த
திரவத்துளிகளின் கலப்புத்தான்
நீ!
சின்ன இன்பத்திலிருந்து
உனக்கான விதை உருவானது.
கற்ப அறைக்குள் நீ
துளியாக நுழைந்து உட்கார்ந்த
போது
உன்னைத் தாங்கிய
பெண்பால் தேன் பருக
ஆரம்பிக்கிறான்.
நீ தாயை சிப்பியாக்கி
முத்தாகிறாய்.
அவளை சிறந்த சிற்பியாக்கி
கலையாக முளைக்கிறாய்.
அத்தனை அதிசயங்களையும்
விட உன் கருக்கொள்ளல்
உயர்வானது.
நீ முழுமையாக
வெளிவரவேண்டும் என்பதற்காக
வலிகளை வரவேற்று
தன்னை விருந்து
வைக்கிறாள்.
நீ உண்மையிலேயே
அவளுக்கு நோய்தான்.
இயற்கை நிகழ்த்தும்
விசித்திரம் உன் மூலமாகப்
பதியப்படுகிறது.
நீ வெளியே உமிழப்பட்டதும்
அவளின் வேதனை
புதைந்துபோகும் என்ற
எதிர்பார்ப்பு வாசலில் நின்றுதான்
சுவாசிக்கிறாள் அவள்.
சில நொடிகளில் தன்னைப்
பரிமாறிய போது கிடைத்த பரிசு
நீ!

பிறப்பென்பது இடம் மாறுவது.
ஒளிந்து வளர்ந்த நீ வெளியே
விழுந்து வளர்வதற்கான ஆரம்பமே
பிறப்பு.
உன் பிறப்பு இடம்பெறுவது
குருதிக் குளியலில்.
மரணமுற்றம் வரை உன் தாயை
அழைத்துச் சென்று நீ அவளோடு
மீண்டும் திரும்புகின்றாய்.
இறைவன் இருப்பதை
ஒப்புக்கொள்ள வைக்கின்ற ஒரு
முக்கிய தத்துவந்தான் உன்
பிறப்பென்பது.
உனது கருப்பைக்காலம் என்பது
உனக்கான வகுப்பறை.
உனக்குத் தேவையான சில
அங்கங்களோடும்
ஒரு உயிரோடும் இங்கே
நுழைந்தாய்.
உன் பிறப்பு புன்னகை
நிகழ்ச்சியல்ல.
அது வலிகளாலும்
பயப்பீதியாலும்
தீர்மானிக்கப்படுகின்ற நெருப்பு
அம்சம்.
உன் பிறப்பே உனக்குப்
பாடப்புத்தகமானால்
உன் தாய்க்கு நீ ஊட்டிய
வலிகள் உன் மனதில்
வளருமானால்
இறைவனின் இருப்பைப் பற்றிய
செய்தியே பிரசவம் என்று உன்
அறிவு கூறுமானால்
உன் பிறப்பு சுத்தமடைகிறது.
அப்பொழுது பாவங்களை
விட்டும் நீ பரிசுத்தம் பெறுகிறாய்!

# விதவையின் கணவன்



-சி.ரூபி, யாழ்ப்பாணம்.

**அன்று** ஓர் திங்கட்கிழமை. வழமை போல் தனது வேலைகளை செய்துமுடித்து விட்டு அலுவலகத்திற்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் ப்ரியா. அப்போது அவளது நண்பியும் அலுவலகத்தில் ஒன்றாய் வேலை செய்பவளுமாகிய கீதா வந்தாள். அவளுடன் சேர்ந்து பஸ்ஸைப் பிடித்து ஓரமான இரண்டு இருக்கைகளைப் பிடித்து அமர்ந்தவாறு பயணித்தனர். அரை மணி நேரத்தின் பின் அலுவலகத்தை பஸ் அண்மித்ததும், பெல்லை அடித்து இறங்கி அலுவலகத்தினுட் புகுந்தனர் இருவரும். வேலைகளில் புகுந்து தன்னை மறந்து வேலைகளைச் செய்தாள் ப்ரியா.

ப்ரியா ஓர் கலகலப்பான துடிதுடிப்பான முகத்தில் புன்னகை தவளும் பெண் என்றெல்லாம் கூறிவிட முடியாது. எப்போதுமே கண்களில் சோகம் கரைபுரண்டிருக்கும். முகம் களையிழந்து, வெறுப்புடன் காணப்படும். இப்படியான கோலத்திற்கு இளவயதில் அவள் கணவனை இழந்து விதவையானது தான் காரணம். திருமணம் நடந்து ஆறு மாதத்திலே அவள் நிர்க்கதியாக்கப்பட்டாள். இத்தனை சோகத்திற்கும் சொந்தக்காரியான இவளை, அவளுக்கு நேரே இருந்த பிரசாத் எப்போதுமே பார்த்தவாறு இருப்பான். பிரசாத் மிக அழகான தோற்றமுடைய பண்பானவன். ஆதலால் அனைவர் மனதினையும் கொள்ளையடித்திருந்தான். ஆயினும் இவன் மனதில் புகுந்து மாயாஜாலம் காட்டுபவள் ப்ரியாதானே! ப்ரியா தான் தனக்கு எல்லாம் என நினைப்பவன். தன் காதலை சொன்னால் விதவையிடம் "சேட்டை" விடுகிறான் என நினைப்பார்கள் எனப் பயந்து சொல்லாமல் விட்டுவந்தான். ஆனால், இப்போது காதலை சொல்லி விடுவது என்ற முடிவுடன் இருந்தான். காரணம் அவனின் தாய் நேற்று கூறிய சம்பவமாகும். நேற்று அவனுடைய தாய் ஓர் போட்டோவைக் காட்டி, "டேய் பிரசாத் இந்த போட்டோவை பாருடா. நல்ல அழகான அமைதியான பொண்ணாமடா. அதோட! அவங்களுக்கு பல லட்சக்கணக்கான சொத்து இருக்காமடா, அதற்கெல்லாம் ஒரே வாரிசாமடா நீ அவளை கட்டடா. நல்லாய் இருப்பாய்" என கொஞ்சம் அதட்டலுரிமையுடன் கூறிச் சென்று விட்டாள். அதுதான் காதலை சொல்லத் தைரியம் வந்தமைக்கான காரணம். பிரசாத் நேராக அவளிடம் சென்றான் சென்று "உங்களோட கொஞ்சம் தனிப்பட்ட விசயம் கதைக்க வேண்டும். மொட்டை மாடிக்கு வாருங்கள்" என கூறிவிட்டு பாய்ந்து, பாய்ந்து ஏறி மொட்டை மாடியில் நின்றான்.

ப்ரியாவுக்கோ உடல் நடுங்கி வியர்த்துக் கொட்டியது. கண்களில் அச்சம் பரவியது. ரோஜாவில் பனித்துளி இருப்பதைப் போல் அவள் செந்நிற நெற்றி பூராவும் வியர்வைத் துளி படர்ந்திருக்க மெல்ல ஏறி மேலே சென்றாள். அவளது இந்த படபடப்பிற்குக் காரணம் அவள் வேலைக்குச் சேர்ந்த இந்த 3 மாதத்தில் எந்த ஆடவனுடனும், ஏன் கீதாவைத் தவிர வேறு எந்த பொண்ணுடனும் வேலை சம்பந்தப்பட்டதைத் தவிர அவள் வேறு எதுவும் கதைத்ததில்லை. இப்படி இருந்த ப்ரியாவால் ஓர் இளவயது ஆணுடன் அதுவும் தனியாகக் கதைப்பது என்றால் சும்மாவா! இது பயத்திற்கான ஒரு காரணமாயிருந்தாலும் பிரசாத் தான் முழுக் காரணம். அவள் எல்லோரிடமும் கதைக்கா விட்டாலும் முகக் குறிப்பால் உணர்ந்து கொள்வாள். அவன் தன்னை எப்போதும் பார்த்தபடி இருப்பதையும் அவனின் கண்ணில் காதல் தெரிவதையும் இவள் அறிந்திருக்கிறாள். இருபத்தைந்தே வயதான ப்ரியாவுக்கு மனதில் காதல் துளிர்த்து விடுமே என அவள் ஐயப்பட்டும், பின் தன் இறந்த கணவனை நினைத்து அதை மறந்தேயிருக்கிறாள். இப்படிப்பட்ட அவள் பிரசாத் காதலை தான் கூறப்போகிறான் என எண்ணி பயந்தவாறு சென்றாள். சென்று அவனை நெருங்கினாள்.

"ப்ரியா நான் உங்களை.... நான் உங்களை லவ் பண்றன். இதை கனநாளாய் உங்கள்ட்ட சொல்ல வேண்டும் என நினைத்தன். ஆனா, தைரியம் வரேல்ல. இப்ப வீட்ட பெண் பார்க்கத் தொடங்கி விட்டதால் உங்களிட்ட சொல்லிவிட்டன். நீங்க எனக்கு ஒரு முடிவை சொல்லுங்க" என விண்ணப்பித்துவிட்டு காதலை கூறிய நிம்மதியில் இருந்தான். எனினும் அவளது முடிவுக்காய் அவன் மனம் தவியாய்த் தவித்தது.

ப்ரியா! நிமிட நிசப்தத்தின் பின் பேசத் தொடங்கினாள். ஒரு இங்க பாருங்க பிரசாத், நான் கணவனை இழந்த ஒரு பெண். என்னை நீங்க காதலிக்கிறதா சொல்றது சரிவராது. உங்க அம்மா பாக்கிற பெண்ணைப் பார்த்து கலியாணம் செய்யிறது தான் நல்லது. அதுதான் உங்க வாழ்வுக்கு வசந்தத்தைத் தரும். நானில்லை. புரிஞ்சு நடந்துக்குங்க" எனக் கூறி மாடிப் படியைவிட்டு இறங்கி இருக்கையில் அமர்ந்தபோது அவள் மனது பழைய வாழ்க்கையை வட்டமிட்டது.

ப்ரியாவுக்கு அப்பொழுது வயது 23. முகம் முழுக்க புன்னகை தவழ அக்குடும்ப குலவிளக்காக இருந்து வந்தாள். அப்பா, அம்மா, தங்கைகள் இரண்டு, அழகான ஓர் குடும்பம். தகப்பன் ஏழை என்று சொல்வதற்கில்லாமல் ஓரளவு பணவசதி படைத்தவராகவே இருந்தார். ப்ரியாவுக்கு 23 வயதில் மாப்பிள்ளை தேடும் படலம் கிளம்பியது. பல பல மாப்பிள்ளைகள் பார்த்துவிட்டு அவள் அழகில் மயங்கினாலும் சீதனத் தொகை குறைவாக இருப்பதால் விட்டுச் சென்றார்கள். இவ்வாறு இருபத்தைந்து வயது வரை தட்டிக்கழிக்கப்பட்ட ப்ரியாவுக்கு பங்குனி மாதத்தில் 28 வயதுடைய ராஜா என்ற ஒருவனைப் பேசி கலியாணம் பண்ணி வைத்தார்கள். சீதனமென்று எதுவும் கேட்கவில்லை. ப்ரியாவும் ராஜாவும் ஒன்றாக இணைந்து குடும்ப வாழ்க்கையைச் சந்தோஷமாகக் கழித்து வந்தார்கள். ராஜா ஒரே ஒரு பிள்ளை என்பதால் ப்ரியாவிடமும் மாமியார் மாமனார் அன்புடன் இருந்து வந்தனர். ராஜாவும் அவளை பார்க், பீச், சினிமா என அழைத்துச் சென்று சந்தோஷமாக வைத்திருந்தான். இவளும் அவனை மிக சந்தோஷமாகவும், அன்புடனும் கவனித்து வந்தாள். இவ்வாறு இருந்த காலத்தில் அவனுக்கு இதயத்தில் ஓட்டை எனவும், 'ஒப்பரேசன்' செய்து குணப்படுத்த முடியாது என்றும் அறிந்ததால் அவளுக்கு உலகமே இருண்டது போன்று இருந்தது. அவள் தன் வாழ்க்கை கேள்விக்குறியானதை உணர்ந்து கோபப்பட்டாலும் ராஜா மீதுள்ள அன்பு கோபத்தை வென்றுவிட, அவன் மீது முன்பை விட அன்பை அதிகமாகச் செலுத்தி வாழ்ந்துவந்தாள். இப்படி இருந்த காலத்தில் ஓர் நாள் காலையில் படுக்கையில் வாயெல்லாம் இரத்தம் பீறிட மயங்கிக் கிடந்தான் ராஜா. அவனை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்குள் உயிர் போய்விட ப்ரியா உருக்குலைந்து போனாள். மாமியாரோ "மகனே போய் விட்டான் "நீ எதற்கடி" என கேட்டு துரத்திவிட தாய்வீட்டிற்கு வந்த ப்ரியா தானிருந்தால் தனது தங்கையின் திருமணம் பாதிப்படையும் என நினைத்து, நண்பி கீதாவின் உதவியுடன் வேலைக்குச் சேர்ந்து இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

ப்ரியா தனது நினைவுடன் சங்கமித்துக் கொண்டிருந்தபோது, கீதா அவள் தோளை தட்டி, வாடி சாப்பிடப் போகலாம் என கன்ரீனுக்குக் கூட்டிச் சென்றாள். அங்கு ப்ரியா நடந்தவற்றைக் கூறி அழ, சமாதானம் சொன்ன கீதா," நீ சமூகத்திற்காகத்தான் பயப்படுகிறாய் போலிருக்கிறது. இந்த சமுதாயம் குறை கூறுவதையே வழக்கமாக வைத்துள்ள சமுதாயம். ஓர் காரியத்தைச் செய்தாலும் குற்றம் செய்யாவிடினும் குற்றம் என்று கூறுகின்ற இழிந்த சமுதாயம். இச் சமுதாயத்திற்காக நீ பயந்தாய் என்றால் உன்னைவிட முட்டாள் யாருமில்லை" என கூறி, "விதவை மறு திருமணம் முடிப்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கும் சமுதாயத்திற்கு கட்டுப்படுவதால் உனக்கு வேதனை. உன் அப்பா, அம்மாவிற்கு வேதனை. சரி அதைவிடு. நீ தான் எத்தனை காலம் இப்படி இருப்பாய். "உனக்கென்று ஒரு துணை வேண்டாமா அதோடு மட்டுமல்லாது பிரசாத்தின் வாழ்க்கையையுமல்லவா நீ பாழாக்கப் போகிறாய்" எனக் கூற, மனதில் தெளிவு பிறந்தவளாய் தெளிவான முடிவுடன் பிரசாத்திடம் செல்ல "அவன் ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டான்" என கூறிய மேலதிகாரியிடம் விலாசத்தை வாங்கியவளாய் பிரசாத்தை இல்லை, இல்லை காதலனாய், கணவனாய் ஓர் விதவையின் கணவனைக் காணச் சென்றாள்.

# தலைவரு பாத்துக்குவாரு

**மழை** கொட்டி ஓய்ந்திருந்தது. தெப்பமாய் நனைந்துப் போன கந்தசாமி "ஏண்டி மாரியாயி அந்த சாரத்த எடுத்து ஸ்தோப்புல போடு! கையி கால அலம்பிகிட்டு வாறேன்" என்று வெளியில் நின்றவாறே கூச்சலிட்டான்.

"வந்ததும் வராததுமா ஏங்க இப்பிடி கத்துறீங்க...ஆமா மலையில எதோ தகராறாமே, நமக்கு ஏங்க வீண் பேச்சி. யாரு வந்தா என்னா யாரு போனா நமக்கு என்னா. நாம மலையேறி செத்தாத்தான் நம்ம வயித்த கழுவலாம். கட்சி கத்திரிக்கா எல்லாத்தையும் தூக்கி குப்பையில போட்டுபுட்டு ஒழுங்கு மரியாதையா பொண்டாட்டி புள்ளைய காப்பாத்துற வழியப் பாருங்க" என்று தன் வழமையான புராணத்தைக் கொட்டித் தீர்த்தாள் மாரியாய்.

"அடிப்போடி போக்கத்த கிறுக்கி. கட்சினா அப்பிடி, இப்பிடி இருக்கத்தான் செய்யும். அதுக்கெல்லாம் பயந்து ஓடிட்டா எப்பிடி? ஒனக்கு தெரியுமோ தெரியல. நம்ம தலவருக்கிட்ட எடுப்பா இருந்த நாயி எல்லாம் இன்னக்கி பதவி வந்திருச்சினு தல கால் புரியாம ஆடுறானுங்க. இவனுங்கள எல்லாம் இப்பவே ஒட்ட நறுக்கணும். அதுக்குதான் நம்ம கட்சி காரங்களை எல்லாம் அந்திக்கு கோயிலுக்கு வரச் சொல்லி இருக்கோம். தொண்டவரண்டு போச்சி.... போய் சாயம் ஊத்து" என்று வாயடைத்தான் கந்தசாமி.

ஒரு கட்சியின் தோட்டத் தலைவனான கந்தசாமி நம் அரசியல் தலைவர்களைப் போலவே எந்த எதிர் கூறலும் இன்றி முடிவெடுப்பவன். ஆழ்ந்து, அமர்ந்து நல்ல தீர்மானங்களை எடுப்பதென்பது கிடையாது. எல்லாவற்றையும் குறுகிய நோக்கோடு தூர நோக்கின்றி எதிர்காலம் பற்றிய சிந்தனைகளை விடுத்து சிந்தித்து முடிவெடுப்பதில் கந்தசாமி வல்லவன்தான். எது எப்படியோ வாயால் எல்லோரையும் மிரட்டி தன் வசப் படுத்துவதில் கந்தசாமி சாமர்த்தியக்காரன். என்ன செய்வது "வாயுள்ள பிள்ளை பிழைக்கும்" என்பதுதானே காலமாக இருக்கிறது.


"நேரம் ஏழு மணியைத் தாண்டி விட்டது. கோயில் மண்டபம் நிரம்பிப் போனது. எந்தவித மறுப்புமே காட்டாமல் தலையாட்டிப் போகும் செக்கு மாடுகள், கந்தசாமியின் தீர்மானத்திற்குத் தலையாட்டிப் போனார்கள். பதவியில் இருக்கும் ஒரு கட்சித் தொண்டன் தங்கள் மானசீக தலைவனை அவதூறாய் பேசியதற்காகவே இந்தக் கூட்டம் குழுமியிருக்கிறது என்பது வேடிக்கையான விடயம்தான். இதைவிட கொடுமை குறிப்பிட்ட இச் சம்பவத்திற்காய் நாளை முதல் அடையாள வேலை நிறுத்தத்தை முன்னிலைப்படுத்தப் போவதாகும்.

செய்தி காதுக்கு எட்டியதும் உண்மையில் ஆடிப் போனேன். தனக்கான உரிமைகள், சலுகைகள் எல்லாவற்றையும் சூறையாடிப் போகும் நம் தலைவர்களுக்காய் எதையும் செய்யத் துணியும் இந்த அறிவிலிகள் எப்போது திருந்தப் போகிறார்கள் என்ற சினம் மனசின் மறுபக்கங்களுக்கு உரம் ஊட்ட, நேரே கந்தசாமியிடம் சென்றேன்.

"கந்தசாமி நம்ம சனங்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கு. அதெல்லாத்தையும் விட்டுப்புட்டு ஏன் இப்பிடி ஒன்னுமில்லாத விசயத்துக் கெல்லாம் கூட்டம் போட்டு சனங்கள வீணடிக்கிறீங்க. இந்த மாசம் ஸ்ரைக் பண்ணுனா அடுத்த மாசம், பட்டினியில கெடந்து சாகப் போவது நாமதான். எதிர்காலத்தப் பத்தி சிந்திக்காம யானைக்கும் நாக்காலிக்கும் மாத்தி மாத்தி கோடு போட்டது பத்தாதா. தயவு செஞ்சி யோசனை பண்ணுங்க" என்கிறேன்.

"இங்க பாரு ராசா, எதிர்க்கட்சிக்காரன் வாங்கி ஊத்துனா மூத்திரம் கூட குடிப்பியா? அவனுங்க... ஏதோ சொல்லிப்புட்டானுங்களாம். இவரும் பேச வந்திட்டாராம். ஒன்னு மட்டும் நல்லா தெரிஞ்சிக்க. நமக்குன்னு ஒரு மானம் மரியாத இருக்கு. அது மட்டும் இல்ல காலகாலமா கட்சியில் இருந்து பழம் திண்ணு கொட்ட போட்ட தலவர எப்பிடி தப்பா பேசலாம். நேத்து மொளச்ச காளானுங்களுக்கு நம்ம தலவர பத்தி பேச என்னா யோக்கிதம் இருக்கு. நமக்கு வாற பிரச்சினையை தலவரு பாத்துக்குவாரு. நாங்க நாளைக்கு ஸ்ரைக் பண்ணுவோம்" என்று அடுக்கிக் கொண்டே போனான் கந்தசாமி.

நடுநிலை போக்கின்றி எல்லா கூச்சல்களுக்கும் கோவிந்தா போடும் நம் தலையாட்டி கூட்டங்கள், ஆரவாரித்துக் கூச்சலிட்டு தங்களுடைய மானசீக தலைவர்களுக்காய் ஸ்ரைக் ஒன்றுக்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள். மீண்டும் ஒரு பட்டினி சாபத்திற்கான ஏற்பாடுகளில் கரைந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறியாமலே...



-சிவனு மனோஹரன், ஹட்டன்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

# சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

முத்து பெறுமதி வாய்ந்தது தான். ஆனால், அது சிப்பியிலிருந்து தானே பிறந்தது என்பதற்காக சிப்பியை மாலையாக எவரும் அணிவதில்லை; அதே போல் தாமரை மலர் சேற்றில்தான் பிறக்கிறது என்பதற்காகச் சேற்றைப் பூசிக் கொள்வதுமில்லை. அதுபோல் பெருமை குரியவர் மட்டுமே பெருமைக்குரிய இடத்தில் வைக்கப்படுவர். அதனால் வைக்கப்பட்ட இடமும், வைத்தவரும் பெருமைப்பட வாய்ப்புண்டு. அது தவறும்பட்சத்தில் இரண்டுமே சிறுமைக்குள்ளாக நேரிடும். ஒரு பொறுப்பை ஒப்படைக்கப்பட்டவர் பொருத்தமானவரா? என்பதனை அறியாமல் அப்பணியை ஒப்படைத்தால் அதனால் வரும் துன்பங்களுக்கும், நன்மைகளுக்கும் இரு பகுதியுமே பொறுப்பாவது தவிர்க்க முடியாததொன்றாகி விடுகிறது.

*"காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்*
*பேதமை எல்லாந் தரும்"*

அறிய வேண்டியவைகளை அறியாத ஒருவரை அன்பு காரணமாகத் தெரிந்து அமைத்தல் பேதமை என்பது சான்றோர் கண்ட உண்மை.

# நண்பனும் நங்கை அனையனோ?

**என்றுமில்லாதவாறு** அருள்வர்மனின் முகத்தில் சோகம் குடிகொண்டிருப்பதை அவதானித்த மாறனின் முகத்திலும் இனந்தெரியாததோர் உறக்கம். அதன் பிரதிபலிப்பாக அவன் கையிலிருந்த குத்துவாள் எதையோ சீவியபடி இருந்தது. அதைப் பார்த்ததும் "நண்பா ஏது? யாரிடமோ கோபித்துக் கொண்டு விட்டாய் போலிருக்கிறதே! யாரிடம்?" என்றான் அருள்வர்மன்.

"கோபத்தால் மட்டும்தான் தீமைகள் ஏற்படும் என்பதில்லையே! அன்பாலும், தீமைகள் விளைய வாய்ப்பிருக்கிறது. அதற்கு நீ....."

"என்ன சொல்ல வருகிறாய் புரியவில்லையே"



என்றான் அருள்வர்மன். "புரியாமலிருக்கும் வரைதான் புதிர். புரிந்துவிட்டால் அதற்கு மதிப்பற்றுப்போய் விடும் என்று நினைகிறார்கள் சிலர் உன்னைப் போல. எத்தனை காலமாக நடக்கிறது உங்கள்?..." என்றவனை இடைமறித்தான் அருள்வர்மன். "எதைப்பற்றிக் கூறுகிறாய்?" "உங்கள் காதல் நாடகம்பற்றி, அருள்வர்மா! மனைவியைவிட நண்பனுக்கு முதலிடம் கொடுத்ததாகக் காவியங்கள் பல படித்திருக்கிறேன். ஆனால்..." என்று மாறன் இழுக்கும்போதே அருள்வர்மனுக்குப் புரிந்துவிட்டது விடயம்.

அவன் மௌனமே அவனைக் குற்ற

**தருவது கற்பகன்**

வாளியாக்கியது போலிருந்தது. மாறன் அருள்வர்மனை நெருங்கினான். அவன் முகத்தைப் பார்க்க அஞ்சியவன்போல் நிலத்தையே பார்த்துக்கொண்டிருந்த அருள்வர்மனின் நிலைகண்டு பெரிதும் கவலைப்பட்டான் மாறன்.

"இதுவரையும் என்னிடங்கூடச் சொல்லாமல் மனதைப்போட்டு குழப்பிக் கொண்டிருக்கிறாய். இன்னும் எத்தனை காலத்திற்கு மறைக்கப் போகிறீர்களோ? உன் மனங் கவர்ந்த அந்தப் பூலோக மேனகையை நாங்கள் நாடுகடத்தி விடமாட்டோம்" என்றான் பரிகாசமாக. இதைக்கேட்ட அருள்வர்மன் இனிமேலும் மறைப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்தவனாய் "நண்பா! என்னை மன்னித்துவிடு. நான் ஆண்பிள்ளை, எதையும் தாங்கும் மனமுண்டு. ஆனால் செண்பகவல்லி அபலையாகிறே! அவளுக்கு ஏதும் கெட்ட பெயர் வந்துவிடக் கூடாதே என்பதால் உன்னிடம் கூறாது மறைத்துவிட்டேன். இத்தனை நாளாக என்னைக் காணாது என்ன துன்பப்படுகிறாளோ என்பதை நினைக்கும்போது என்னையே மறந்து விடுகிறேன்" என்றான். அவன் குரலில் தொனித்த தழுதழுப்பு மாறனை வியப்புறச் செய்தது.

"உன்னை ஒரு பெருவீரன் என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறேன், துன்பத்தைக் கண்டு துவண்டு விடுகிறாயே!" என்று தன் வியப்பை வெளிப் படுத்தினான்.

"மிக இலகுவாகச் சொல்லிவிட்டாய் நண்பா! வீரனுக்கு அழகு தனக்கு வரும் துன்பத்தைக் கண்டு துவளாதிருப்பது என்பது உண்மைதான். ஆனால் மற்றவர் படும் துன்பத்தைக் கண்டும் காணாதிருப்பது எப்படி நியாயமாகும் என்பதுதான் புரியவில்லை" என்றான்.

இதைக்கேட்டதும் மாறன், அவனை அறியாமல் கலகலவென்று நகைத்துவிட்டான். மாறனுடைய சிரிப்பு அருள்வர்மனுக்கு சற்று எரிச்சலைத் தந்திருக்க வேண்டும். மாறனை அலட்சியம் செய்வதுபோல் மறுபக்கம் திரும்பி நின்றுகொண்டு எதையோ பார்ப்பவன்போல் பாசாங்கு செய்தான்.

மாறன் அவன் அருகில் சென்று அவன் தோளில் கையை வைத்தபடி, "நண்பா! அவரவர் மனதிலுள்ள துன்பங்கள் அவரவருக்குத்தான் தெரியும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், உனக்குத்தான் அப்படி ஏதும் நடந்ததாகத் தெரியவில்லையே, எல்லாவற்றையும் என் தங்கை என்னிடம் கூறியிருக்கிறாள். உனது வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் உன் காதலி என் தங்கையின் உயிர்த் தோழி என்பதை நீ அறிந்திருக்க வில்லைப் போலும்" என்றவனை வியப்போடு பார்த்தான் அருள்வர்மன்.

"ஏன் நம்ப முடியவில்லையா? இனிமேலாவது வீணாக மனதைக் குழப்பிக் கொள்ளாதே" என்றவனை நன்றிப் பெருக்கோடு நோக்கினான் அருள்வர்மன். மிக விரைவில் எதிரிகள் எம்மைவிட்டு அகன்று விடுவார்கள் என்ற நம்பிக்கை வலுப்பெற்றுக்கொண்டு தானிருக்கிறது. அதற்கான சூழ்நிலைகளும் எமக்குச் சாதகமாக அமைந்து விட்டன. உன்போன்ற காதலியைப் பிரிந்த இளைஞர்களினதும் மனைவி பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் எத்தனையோ நம் படை வீரர்களினதும் ஏக்கங்கள் தீரும் காலம் வெகுவிரைவிலேயே ஏற்பட்டு விடும் என்பது நீயும் அறியாத விடயம் அல்லவே! அதற்குள் அவசரப்பட்டு மனதை வருத்திக்கொள்ளாதே நண்பா!" என்றவன், அருள்வர்மனின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு மெதுவாக நடக்கத் தொடங்கியபடி கேட்டான் "ஏன் பேசாமலிருக்கிறாய்? நான் ஏதும் தவறாகக் கூறிவிட்டேனா"? அவனின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு அருள்வர்மனின் மனதில் ஏற்பட்ட நன்றி உணர்வின் மிகுதியால் அவன் வாயடைத்து நின்றதையும் பார்த்த மாறன் "வேண்டுமென்றால், அரசனின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு நீ போய் வரலாம்" என்றான்.

இதைக் கேட்டதும் அருள்வர்மனின் கண்களில் தோன்றிய ஒளி ஓர் புது உற்சாகத்தைக் காட்டிய போதும் "சேச்சே! அப்படி ஒன்றும் வேண்டாம்" என்றவன், மாறனைக் கட்டித்தழுவியவாறு "நண்பா! என்னை மன்னித்துவிடு." இத்தனை நாளாக உன்னிடம்கூட சொல்லத் தயங்கியதால்தான் எனக்குத் துன்பம் என்று நினைக்கிறன்..." என்றவன் முடிப்பதற்குள் "நண்பா! நட்பு என்பது மனத்திலிருந்து எழவேண்டும் என்பது இலக்கியங்களில் மட்டுமல்ல அனுபவரீதியாகவும் கண்ட உண்மை. உன்போன்ற ஒரு நல்ல நண்பனின் துயரத்தில் பங்கு கொள்வதே ஒரு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. நீ விரும்ப வில்லையானால் எமது ஒற்றர் மூலம் ஓலையை அனுப்பிவைப்போம். அதிலாவது உன்னவள் ஆறுதலடைய வாய்ப்பு இருக்குமல்லவா?" என்றான் மாறன். அருள்வர்மனின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவு கூற முடியவில்லை.

அவசரமாகச் செண்பகவல்லியை அழைத்தபடி ஓடிவந்த பூங்கொடியைக் கண்டதும் செண்பகவல்லி செய்வதறியாது திகைத்துப்போய் நின்று விட்டாள். "ஏதும் விபரீதமான செய்திகள் ஏதும் சொல்ல வந்தாளோ...." "உன்னை எங்கெல்லாம் தேடுவது" என்று பூங்கொடி அவளின் தோளைத் தொடும் வரை அவள் எங்கு இருக்கிறாள் என்பது கூடத் தெரியாத அளவுக்கு நின்றிருந்தவள், பூங்கொடி தொட்டவுடன் கனவுலகில் இருந்து மீண்டவள்போல் "என்னடி! என்ன ஆகிவிட்டது?" என்று கேட்டதும், பூங்கொடி "என்னவாகிற்றா? அவருக்கு ஒன்றும் ஆகிவிட வில்லை. ஆனால், உனக்குத்தான் ஏதோவெல்லாம் ஆகிவிட்டிருக்கிறது" என்று சலித்துக் கொண்டாள். சிலைபோல் நின்றிருந்த செண்பகவல்லிக்கு நடப்பதென்ன கனவா என்று கூட எண்ணத் தோன்றியது.

நினைவுகளிலிருந்து மீண்டு கொண்டவள் பூங்கொடியை உற்று நோக்கினாள். பூங்கொடி இடையில் செருகி, மறைத்து வைத்திருந்த ஓலை கண்ணில் பட்டதும் ஏதோ ஒரு அதிசயத்தைக் கண்டதுபோல் முகமும் கண்களும் மலர்வதைக் கண்ட பூங்கொடி "என்ன இது என்னையே உற்றுப்பார்க்கிறாய்." என்றவள் தன் இடையில் செருகி வைத்திருந்ததை மறைக்க முயன்றாள். அதைக் கண்டாள் செண்பகவல்லி.

"ஏய், எத்தனை காலமாக இந்த விளையாட்டு?" என்றவள் பூங்கொடியின் இடையைப் பிடிக்கத் தாவினாள். அதற்கு இடமளிக்காமல் பூங்கொடி தன் இடையை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு சிட்டாகப் பறந்தாள். களைப்புறும்வரை இருவரும் ஓடிக் களைத்து இறுதியில் பூங்கொடி செண்பகவல்லியின் கையில் அகப்பட்டுக் கொண்டாள். "ஐயோ! என்னை விட்டுவிடு. கொடுத்துவிடுகிறேன்" என்றவள் தன் இடையில் செருகியிருந்த ஓலையைச் செண்பகவல்லியிடம் நீட்டினாள். அதைக் கண்டதும் செண்பகவல்லியின் கண்கள் அகல விரிந்து மலர்ந்தன. அவள் காதலன் வருவதற்கான ஏற்பாடு தொடங்கிவிட்டதற்கான அறிகுறியா இந்த ஓலை?

***"ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப***
***நீடுக மன்னோ இரா"***

***(அதிகாரம் : 133 - குறள் : 1329)***

# சிந்தியா பதில்கள்

**✍ கடைசியாக என்ன படம் பார்த்தீர்கள்?**

-ஷியானா, பதுளை.

ஒன்றல்ல, இரண்டு படங்கள். 'பட்டியல்', 'நாகரீக கோமாளி' ஆபாசம், இரட்டை அர்த்தம், பிரமாண்டம் இல்லாமலேயே அருமையாக படம் எடுக்க முடியும் என்பதனை மீண்டும் ஒருமுறை நிரூபித்து காட்டியுள்ளனர்.

**✍ தமிழ் நாடு சட்டசபை தேர்தலில் அம்மா, அய்யா பிரசாரம் எப்படி?**

-விதுஷன், நாவலப்பிட்டி.

பாட்டெழுதி பரிசு பெறுவோர் உண்டு; பாட்டில் குற்றம் கண்டுபிடித்து பரிசு பெறுவோரும் உண்டு. அம்மா சாதனைகளைச் சொல்லி வோட்டுக் கேட்கின்றார்; அய்யா குறைகளைச் சொல்லி வோட்டுக் கேட்கின்றார்.

**✍ மஹேல ஜெயவர்தன சாதனை படைப்பாரா?**

-கே.பிரபாத், தெஹிவளை.

படைத்து விட்டாரே. தொடர்ச்சியாக 13 தடவை நாணயச் சுழற்சியில் தோற்றுவிட்டார்.

**✍ சிந்தியாவைக் கட்டாயப் பயிற்சிக்குப் பிடிப்பது பற்றி யோசிக்கிறேன். ஏற்கனவே பயிற்சி எடுத்துவிட்டீர்களா?**

-அழகெழில், பூஞ்சோலை.

என்வழி அகிம்சை வழி. ஆயுதம் எனக்கெதற்கு?

**✍ யுத்தமா? சமாதானமா?**

-ஏ.எம்.நௌஷத்,
முள்ளிப்பொத்தானை.

சமாதானத்திற்கான யுத்தம் யுத்தத்திற்கான சமாதானம்.

**✍ அம்பீபியஸ் (Amphibious) என்பது புதிய ரக கார் ஒன்று தானே?**

-ஜி.ரேவனா, தொடர்மாடி,
பம்பலப்பிட்டி.

நீங்கள் சொல்வதில் பாதி சரி. அம்பீபியஸ் என்பது பார்ப்பதற்குக் காரைப் போலவே இருக்கும். ஒரே ஒரு வித்தியாசம். நிலத்திலும் ஓடும் நீரிலும் ஓடும் நவீன போக்குவரத்துச் சாதனம். மழை காலத்தில் வீதி வழியே ஓடுவதற்கென எதிர்காலத்தில் நம்மவர்கள் வாங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**✍ யாழ்ப்பாணம் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, படைமுகாம் ஒன்றிலேயே தங்கியதாக யாழ். பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதைக் கவனித்தீரா?**

-நிரூபன், அரியாலை.

கடந்த இரு வாரங்களில் மட்டும் அதிகாலை 5.30 மணிமுதல் இரவு 8 மணிவரை பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரை நேரடியாகச் சந்தித்து தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்துள்ளனர். மாவட்டத்தின் அனைத்து அரச அதிகாரிகளுக்கும் மக்களின் மேம்பாட்டுத்திட்டங்கள் தொடர்பாக அவர் பணிப்புரைகளை வழங்கியுள்ளார். அதனைவிட சர்வதேசப் பத்திரிகையாளர்கள் குழு ஒன்று அமைச்சரைச் செவ்விகண்டுள்ளது. மேற்குறிப்பிட்ட எவருமே படைமுகாமுக்குச் சென்று அமைச்சரைச் சந்திக்கவில்லை. படைமுகாம் என்றால் என்னவென்று தெரியாமலேயே இதுவரைகாலமும் பத்திரிகை நடத்தியுள்ளார்கள் என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இல்லை?

**✍ அத்தை மகள் சிவப்பா? அத்திப்பழம் சிவப்பா?**

-எம்.முபாரக், மல்வானை.

மன்னிக்கவும். கேள்வி இடம் மாறி வந்துவிட்டது.

**✍ ஆனந்த விகடன் சஞ்சிகை 81ஆம் ஆண்டினை நிறைவு செய்து வெற்றிகரமாக வெளிவருகின்றது. இலங்கையில் அப்படி ஒரு சஞ்சிகை வெளியிட முடியாதா?**

-ரெ.சூசைமுத்து, மல்லாகம்.

ஒரு பத்திரிகையின் வெற்றி பல காரணிகளில் தங்கியுள்ளது. இந்தியாவில் நீங்கள் வீரப்பனையோ, விஜயகாந்தையோ இல்லை முதலமைச்சர், பிரதமரைக் கூட விமர்சிக்கலாம். அப்படி ஒரு பத்திரிகைச் சுதந்திரம் அங்கு உண்டு.



பரத் – ஆர்யா – நாவ்யாநாயர்
பட்டியல்

**✍ உள்ளூராட்சித் தேர்தலை வட கிழக்கில் சில மாவட்டங்களில் ஒத்தி வைத்தது யாருக்கு ஏமாற்றம்?**

- கே.ஜீவா, பம்பைமடு.

ஜனநாயகத்திற்கு.

**✍ அந்த 21 பேரும் தற்போது என்ன செய்கிறார்கள்?**

-மனுநீதி, வன்னியூர்.

அடுத்த கட்டளை வரும்வரை 'கப்சிப்'

**✍ கற்பிட்டிக் கடலில் ரோலர் வெடித்து டோராவும் மூழ்கியுள்ளது. உண்மையில் யாருக்கு இழப்பு?**

-எஸ்.தேனகன், எழுவான்கரை.

கடற்றொழிலாளருக்கு.

**✍ உண்மையைச் சொல்லுங்கள். இலங்கையில் பூர்வீகக் குடிகள் சிங்களவரா? தமிழரா?**

-பி.தவசீலன், சிலாபம்.

இனவாதம் பேசுவது எனக்குப் பிடிக்காது.

**✍ சிந்தியா அதிரடி ஐயாத்துரைக்கு எத்தனை வயது?**

-எஸ்.நிவேதா, டன்பார்.

அவரை விட எனக்கு ஐந்து வயது குறைவு.

**✍ மாமனிதர் ஜோசப்பின் இடம் தொடர்ந்து காலியாகத்தான் இருக்கிறது. என்ன காரணம்?**

-சி.சியாமளா, கல்லடிவேலூர்.

முதலில் எம்.பி. ஆகி, பின்னர் மாமனிதர் ஆகுவதற்குத் தயங்குவதையே காட்டுகிறது.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## டெஸ்ட் போட்டிகளில் செப்பலின் கவனக்குறைவு

**டெஸ்ட்** போட்டியில் இந்திய அணியின் மீதான நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வருகிறது. பாகிஸ்தானுக்கு எதிரான கோப்பையை கோட்டை விட்ட இந்திய வீரர்கள், சொந்த மண்ணில் வலுவில்லாத இங்கிலாந்தைக் கூட வீழ்த்தத் தவறினர். மும்பை டெஸ்டில் தோல்வி அடைந்து தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்தார்கள். இதற்கு காரணம் தான் என்ன...?"

இந்தியா வந்திருக்கும் இங்கிலாந்து அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. புதன்கிழமை முடிந்த இத் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் கோப்பையைப் பகிர்ந்து கொண்டன. இது ஒருவகையில் இங்கிலாந்து அணிக்குக் கிடைத்த வெற்றி என்றே சொல்லலாம். நட்சத்திர வீரர்கள் யாருமே இல்லாமல் களமிறங்கிய இவர்கள் கட்டாயம் படுதோல்வி அடைவார்கள் என்று தான் முதலில் கணிக்கப்பட்டது. ஆனால், மும்பையில் நடந்த கடைசி டெஸ்டில் இந்திய அணியை வெறும் 100 ஓட்டங்களால் சுருட்டி மகத்தான வெற்றி பெற்றார்கள்.

இதற்கு முழுக்க முழுக்க காரணம் கப்டன் பிளின்டொப் தான். மைக்கல் வோன் காயம் காரணமாக விலகிய நிலையில் பொறுப்பேற்ற இவர் துடுப்பாட்டம் பந்துவீச்சு இரண்டிலுமே அட்டாகசமாக ஆடி அணிக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார். இந்திய அணியைப் பொறுத்த வரையில் கைக்கு வரவேண்டிய கோப்பையை முழுதாக வெல்லத் தவறிவிட்டார்கள். மும்பையில் டிரா செய்திருந்தாலே தொடரை வென்றிருக்கலாம் ஆனால், பொறுப்பில்லாமல் ஆடி கோப்பையை பகிர்ந்து




கொண்டார்கள். இதற்கு முக்கிய காரணம் முன்னணி வீரர்களின் சொதப்பல் ஆட்டமே.

சச்சின் சேவாக், யுவராஜ் சிங் என நம்பிக்கை நட்சத்திரங்கள் யாருமே உருப்படியாக ஆடவில்லை. "அதிலும் சச்சின் மொசம் 3 போட்டியில் மொத்தம் 83 ஓட்டங்கள் மட்டமே எடுத்திருக்கிறார். கப்டன் டிராவிட் தனி ஆளாக போராடியிருக்கிறார். இவர் 309 ஓட்டங்கள் எடுத்து ஆறுதல் தருகிறார் என்றாலும், முதலில் பந்து வீச எடுத்த முடிவு தான் தோல்விக்குக் காரணம் என்று டிராவிடே ஒப்புக் கொண்டிருக்கிறார். பந்து வீச்சைப் பொறுத்த வரையில் இளம் வீரர்கள் சிறப்பாக செயல்பட்டுள்ளனர். அனுபவ கும்ளே 16 விக்கெட்டு வீழ்த்தி அசத்தியிருக்கிறார்.

ஆனாலும் இநதிய அணி மும்பை டெஸ்டில் தோல்வி அடைந்ததற்கு காரணம் பயிற்சியாளர் கிரெக் சப்பல் மேற்கொண்ட விஷப் பரீட்சை தான். ஐந்து பந்து வீச்சாளர்கள் சேர்ப்பதெல்லாம் அந்தக் காலம் 1980 - 90 களில் தான் ஐந்து பந்து வீச்சாளர்களைக் கொண்டு டெஸ்டில் களமிறங்குவார்கள். இப்போதைய கால கட்டத்தில் தேவையில்லாத இந்த சோதனை முயற்சியை செய்திருக்கிறார் சப்பல். ஒரு வேளை இரண்டு வேளை இரண்டு சுழற்பந்து வீச்சாளர் என்ற பார்முலாவில் இருந்திருந்தால் லட்சுமண் அல்லது கைவ்பைச் சேர்த்திருக்கலாம். இது இக்கட்டான மும்மை டெஸ்டில் நிச்சயம் உதவியிருக்கும்.


ஏற்கனவே, பாகிஸ்தானுக்கு எதிராக டெஸ்ட் தொடரைக் கோட்டை விட்ட இந்திய வீரர்கள். இங்கிலாந்துக்கு எதிராகவும் தடுமாறியிருக்கிறார்கள். இதனால் சப்பல் தேவையில்லாத சோதனை மேற்கொள்ளாமல், சரியான முயற்சிகள் மேற்கொண்டால் நல்லது. அப்போது தான் ஒரு நாள் தொடர் கோப்பையாவது ஜெயிக்க முடியும்.





அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நேற்று நடந்த காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நிறைவு விழாவில் கலந்து கொண்ட முன்னாள் உலக அழகி லாரா தத்தா, பார்வையாளர்களைப் பார்த்து கையசைக்கிறார். நிறைவு விழாவில் நடந்த கலை நிகழ்ச்சியில் பாலிவுட் நட்சத்திரங்கள் சைப் அலிகானும், ராணி முகர்ஜியும் நடனமாடுகின்றனர்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடந்த காமன் வெல்த் விளையாட்டுப் போட்டி நேற்று நிறைவு பெற்றது. நிறைவு விழாவில் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் நடனமாடி அனைவரையும் கவர்ந்தார்.



## இந்தியாவுக்குத் தடை


**இந்திய** பளுதூக்கும் போட்டியாளர்கள் சர்வதேச பளுதூக்கும் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு 4 வருடகாலதடையை எதிர்நோக்குகின்றனர்.

18ஆவது பொதுநலவாய போட்டிகளில் இந்தியாவின் இரு போட்டியாளர்கள் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும். இந்திய வீரர் ஒருவரும் வீராங்கனையொருவரும் இவ்வாறு ஊக்கமருந்து உட்கொண்டதாக கூறப்படுகிறது. இவர்கள் தொடர்பான விளையாட்டு பிணக்கு மத்தியஸ்த குழுவின் தீர்ப்பு, இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே மற்றொரு வீராங்கனையும் பொதுநலவாய போட்டிகளுக்குச் செல்வதற்கு முன் ஊக்கமருந்து உட்கொண்டமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

சர்வதேச பளுதூக்கும் சம்மேளன விதிகளின் படி ஒரு தேசிய சம்மேளனத்தைச் சேர்ந்த 3 அல்லது அதற் அதிகமான போட்டியாளர்கள் அல்லது ஏனைய நபர்கள் 12 மாதகாலத்திற்குள் ஊக்க மருந்து உட்கொண்டமை கண்டு பிடிக்கப்பட்டால் அச்சங்கத்திற்கு 4 வருட கால தடை விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 05 06 1942



இறப்பு 21 03 2006

### பாவிலுப்பிள்ளை தங்கராசா

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மனைவி தங்கமலர், தாய் - அன்னம்மா, தகப்பன் - பாவிலுப்பிள்ளை (காலஞ்சென்றவர்) மாமா - மனுவேற்பிள்ளை, மாமி - மரியம்மா, பிள்ளைகள் - வினி பிறீடா, அல்பேட் மோகன் (லண்டன்), விஜிதரன், கசில்டா சாந்தி (கனடா), விஜேந்திரன், விஜயகுமார் (சவூதி), சசிகலா, விஜயராஜ் (அமெரிக்கா), லக்கி (வவுனியா), சிந்துஜா, சதீஸ், பேரப்பிள்ளைகள் - ஸ்ரெபானியா, அலெக்ஸ் ஆனோல்ட் (லண்டன்), கமிலேஸ் (கனடா), ஆகாஷ், அபினாஷ் (லண்டன்), சகோதரர்கள் - ஜெயராசா, துரையன், ஜெயமலர், காலஞ்சென்ற செல்வமலர், தவரத்தினம். மச்சான்கள் - பொன்மணி, றஞ்சி, மரியநாயகம் வவா (சுவிஸ்), சகலன் - அருள் (சுவிஸ்), பெறாமக்கள் - ஜினா (லண்டன்), ஜானி, துசாரா (சுவிஸ்), மிரேஸ் தேவானந்தன், ஜீவானந்தன், ஜெயசிறி, அனுசியா, அனுசாந், அனஸ்ரீன், ஆன்சி, மருமக்கள் - றொசாந்தி, நொக்சன், சயந்தன், டிலக்சன், ஜஸ்மின், பகிரதன், நிறோஜன், நிரூபன், ஜெனிற்றா, சந்திரிக்கா, மிதுசா, மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

தகவல்: மகன்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 4, கூட்டெண் - 5

4, 13, 22, 31 போன்ற திகதியில் பிறந்து இவர்களது திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண் 5 வருமேயானால் இவர்கள் ராகு, புதன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

பார்ப்பதற்கு கம்பீரமாகத் தோற்றம் அளிக்கும் இவர்கள், வசதி இருந்தால் நன்றாகப் பருமனாகி விடுவர். எந்த வேலையையும் சீக்கிரம் செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணுவர். தாமதமாக வேலை செய்பவரைக் கண்டால் இவர்களுக்குப் பிடிக்காது. யார் எதைப் பேசினாலும் உடனே 'டேப்' செய்த மாதிரி மனதில் பதிய வைத்துக் கொள்ளுவர். இவர்கள் கூறுகின்ற கருத்துக்களை, பிறகு புரியவில்லை என்றால், கோபம்தான் வரும்.

இவர்கள் போடுகின்ற திட்டம் நிறைவேற மின்னல் வேகத்தில் மூளையைப் பயன்படுத்தி செயல்படுவர். இவர்களை எப்பொழுதும் பத்துப் பேர் சூழ்ந்திருப்பார்கள். தயாள குணம் கொண்ட இவர்கள் பிறருக்கு நன்கு செலவு செய்து அதற்குத் தக்க வேலையையும் வாங்கிவிடுவர். பெரும்பணம் சம்பாதிக்கும் திட்டங்களையே போட்டு அதை இயக்கப் பாடுபடுவர்.

யாரிடமும் உடனே பழகிவிடும் இவர்களைப் புதிதாகப் பார்ப்பவர்களுக்குத் தலைக்கனம் பிடித்த மனிதர் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் நல்ல மனம் கொண்டவர்கள். சில நேரங்களில் பெரிய திட்டங்களில் அவசரப்பட்டு இறங்கி மாட்டிக் கொண்டு சிரமப்பட்டு வெற்றியடைவர்.

தொழில் செய்யும் ஆர்வம் மிகுதியாக இருப்பதால் நேர்மையற்ற காரியங்களிலும் சிலர் இறங்கி வருந்துவதும் உண்டு.

சிறப்பான பேச்சுத்திறன் படைத்த இவர்கள், பேச்சாலே சில காரியங்களைச் சாதிப்பர். அடிக்கடி பயணங்களை மேற்கொள்ளுவதால் உடல் உஷ்ணத்தால் சிறிது வருந்துவர். கவர்ச்சியான நடை, உடையாலும் பிறரை மகிழவைக்கும் காரியங்களினாலும், பலரைத் தன்வயமாக்கிக் கொள்வர். தன் மனதில் தோன்றுகின்ற கருத்துக் களைத் தைரியமாகக் கூறி சிலரது பகையைத் தேடிக் கொள்வர். தனிமையில் இவர்களால் இருக்க முடியாது. இந்த எண்ணிக்கைக் காரர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் இவர்கள் வாகனம், நிலம், வீடு, தொழில் போன்ற எல்லா வசதிகளையும் பெற்று வாழ்வர்.

ஆனால் பெயர் நன்றாக அமையவில்லையென்றால் மனவேதனையால் வாடுவர். தைரியமாக எதையும் எதிர்க்கும் மனம் கொண்ட இவர்கள், தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவதிலும் கை தேர்ந்தவர்கள். தன்னைச் சேர்ந்த நண்பர்களுக்கு ஆபத்து வந்தால் எதையும் யோசனை செய்யாது உதவ முன்வருவர். பேச்சாலும் எழுத்தாலும் சிலருக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று எண்ணுவர். வழக்குகளையும் வம்புகளையும் சந்திக்க நான் தயார் என்று கூறுவர். உத்தியோகத்தில் இருக்கும் சிலர் தமது திறமையால் உயர்ந்த நிலையை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் திறமை இருந்தும் முன்னேற முடியாது. தன் மனம் கடவுளை தியானிப்பதில் அமைதி பெறும் என்று நம்பிக்கை கொண்டவர். சாஸ்திரம், மருத்துவம், சமயம், ஜோதிடம் போன்றவற்றில் நாட்டமுடையவராக இருப்பர். சிறிது தெரிந்த விசயங்களைக் கூட அதிகம் தெரிந்ததுபோல் பேசி கெட்டிக்காரர் என்று பெயர் எடுப்பர். போக விசயங்களில் அதிக நாட்டமுடையவராக இருப்பர்.

எல்லாப் பழக்கங்களையும் அனுபவித்து அதைத் தொடராது விட்டுவிடுவர். இவரை உடன் இருப்பவர்களே புரிந்துகொள்ள முடியாது தவிப்பர். பணம் உள்ளபோது குதூகலமாக இருப்பர். ஆனால் கையில் பணம் இல்லாதபோது கடிந்து விழுவர்.

ஒரு காரியம் வேகமாக முடியவில்லை என்றால் கடுமையான கோபம் வரும். இவர்களது பெயர், பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைந்து விடுமேயானால் வெகு சீக்கிரம் உயர்ந்த நிலையை அடைவர்.

### தொழில்

கமிஷன், ஏஜென்சீஸ், வாகனம், இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழில் இவர்களுக்குச் சிறந்தவையே. ஓரிடத்திலிருந்து பொருளை மற்றோர் இடத்திற்கு அனுப்புவதின் மூலமும் பொருள் சேர்ப்பர். சிலருக்கு இன்டஸ்ட்ரீஸ் அமையும்.

### நோய்

இவர்களுக்கு வாதபித்த நோய்களும், உஷ்ண சம்பந்தமான நோய்களும் வந்து நீங்கும். சர்க்கரை, உப்பு போன்றவற்றைக் குறைத்துக் கொள்வது நலம்.

### பெயர் அமைக்கும் முறை

இராகு, புதன் போன்ற ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சூரியன், சுக்கிரன், புதன் ஆதிக்கமான 19, 37, 46, 64, 73; 15, 24, 33, 42, 51, 69; 14, 23, 32, 41, 59 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண் - 1, 6, 5.
யோகமான திகதிகள் - 1, 10, 19, 28; 6, 15, 24, 5, 14, 23.
யோகமான மோதிரக்கல் - கோமேதகம், வைரம், வெளிர் நீலக்கல்.

யோகமான நிறம் - மஞ்சள், வெளிர் நீலம், சந்தனக் கலர், சாம்பல் நிறம்.
ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு, காப்பிக் கலர்.

ஆகாத திகதிகள் - 8, 17, 26.
குறிப்பு :- ஆனால் 8, 17, 26 எதிர்பாராத நன்மை அளிக்கும்.

அடுத்த வாரம் பிறப்பெண் 4, கூட்டெண் 5 பற்றிப் பார்ப்போம்

# அலெக்சாண்டர் ஃபிளமிங் (கி.பி. 1881 - 1955 நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**சில** நோய் நுண்மங்களின் வளர்ச்சியைத் தடை செய்யப் பயன்படும் "பென்சிலின்" என்ற மருந்தைக் கண்டுபிடித்தவர் அலெக்சாண்டர் ஃபிளமிங் ஆவார். இவர் ஸ்கொட்லாந்திலுள்ள லாக்பீல்டு என்னும் ஊரில் 1881ஆம் ஆண்டு பிறந்தார். லண்டனிலுள்ள புனித மேரி மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவப் பள்ளியில் பட்டம் பெற்ற பின்பு, இவர் தொற்று நோய்த் தடைக்காப்பு ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பின்னர், முதல் உலகப் போரில், காயத்தினால் உண்டாகும் தொற்று நோய்கள் பற்றி பல, நோய் நுண்மங்களுக்கு (Microbes) தீங்கு செய்வதைவிட மிகுதியாக உடலின் உயிரணுக்களுக்கு (Body Cells) தீங்கு விளைவிக்கின்றன என்பதை இவர் கண்டறிந்தார். நோய் நுண்மங்களுக்குத் தீங்கு செய்கிற, ஆனால் மனித உயிரணுக்களுக்குத் தீங்கு செய்யாத பொருள் ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியத்தை இவர் உணர்ந்தார்.

முதல் உலகப் போர் முடிவுற்ற பின்பு ஃபிளமிங் மீண்டும் புனித மேரி மருத்துவமனையின் பணிக்குத் திரும்பினார். அங்கு இவர் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த போது, 1922ஆம் ஆண்டில் 'லைசோசைம்' (Lysozyme) என்னும் பொருளை இவர் கண்டுபிடித்தார். இந்தப் பொருளை மனித உடல் உற்பத்தி செய்கிறது. அது சளியும், (Mucus) கண்ணீரும் அடங்கிய ஒரு பொருளாகும். இப்பொருள், மனித உயிரணுக்களுக்குத் தீங்கு செய்வதில்லை. இது சில நோய் நுண்மங்களை அழிக்கிறது. ஆனால், முக்கியமாக மனிதனுக்குத் தீங்கு செய்யக்கூடிய நோய் நுண்மங்களை இது ஒன்றும் செய்வதில்லை. எனவே இந்தக் கண்டுபிடிப்பு தனிச் சிறப்புடையதாக இருந்த போதிலும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவில்லை.

ஃபிளமிங் தமது மிகப் பெரிய கண்டுபிடிப்பை 1928ஆம் ஆண்டில் செய்தார். இவருடைய ஆய்வுக் கூடத்தில் வளர்க்கப்பட்ட நோய் நுண்ணுயிர்கள் (Staphylococcus Bacteria ) மீது காற்றுப்பட்டு, ஒருவகைப் பூஞ்சக் காளானால் மாசுபட்டன. பூஞ்சக் காளானைச் சுற்றியிருந்த வளர்ச்சிப் பகுதியில் நோய் நுண்ணுயிர்கள் கரைந்து போயிருப்பதை ஃபிளமிங் கண்டார். நோய் நுண்ணுயிர்களுக்கு நஞ்சாக இருக்கக்கூடிய ஏதோ ஒரு பொருளை பூஞ்சக் காளான் உற்பத்திச் செய்கிறது என்பதை ஃபிளமிங் மிகவும் சரியாக ஊகித்தார். அதே பொருள், தீங்கு செய்யக் கூடிய வேறு பலவகை நோய் நுண்ணுயிர்களின் வளர்ச்சியைத் தடை செய்வதையும் இவர் விரைவிலேயே மெய்ப்பித்துக் காட்டினார். அந்தப் பொருளுக்குப் பூஞ்சக் காளானின் (Penicillium notatum) பெயரைக் கொண்டே 'பென்சிலின்' (Penicillin) எனப் பெயரிட்டார். இந்தப் பொருள், மனிதர்களுக்கோ, விலங்குகளுக்கோ நஞ்சாக இருக்கவில்லை என்பதையும் இவர் கண்டறிந்தார்.

ஃபிளமிங்கின் ஆராய்ச்சி முடிவுகள்



1929ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. ஆனால் முதலில் இவை மிகுதியாகக் கவனத்தைக் கவரவில்லை. பென்சிலினை முக்கிய மருந்துப் பொருளாகப் பயன்படுத்தலாம் என ஃபிளமிங் கருதினார். ஆனால், பென்சிலினைத் தூய்மைப்படுத்தும் ஒரு முறையை உருவாக்க அவரால்கூட இயலவில்லை. அதனால், 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த அற்புத மருந்துப் பொருள் பயன்படுத்தப்படாமலே இருந்தது.

இறுதியில் 1930களில் ஹோவர்டு வால்ட்டர் ஃபுளோரி, எர்னஸ்ட் போரிஸ் செயின் என்ற இரு பிரிட்டிஷ் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஃபிளமிங் எழுதிய கட்டுரையைப் படித்தார்கள். ஃபிளமிங் செய்த அதே ஆராய்ச்சியை அவர்களும் செய்து பார்த்தார்கள். அவருடைய முடிவுகளைச் சரி பார்த்தார்கள். பின்னர், அவர்கள் பென்சிலினைச் தூய்மைப்படுத்தினார்கள். அவ்வாறு தூய்மைப்படுத்தப்பட்ட பொருளை ஆய்வுக்கூட விலங்குகளிடம் சோதனை செய்தார்கள். 1841 ஆம் ஆண்டில், பென்சிலினை நோயுற்ற மனிதர்களிடம் பரிசோதனை செய்தார்கள். புதிய மருந்துப் பொருள் வியக்கத்தக்க வகையில் நோய்த் தடுப்பாற்றல் வாய்ந்ததாக இருப்பதை அவர்கள் தெளிவாகக் காட்டினார்கள்.

பிரிட்டிஷ் அரசும், அமெரிக்க அரசும் அளித்த ஊக்கம் காரணமாக, மருந்து நிறுவனங்கள் இத்துறையில் இறங்கி, பேரளவில் பென்சிலினை உற்பத்தி செய்யும் முறைகளை விரைவிலேயே கண்டுபிடித்தன. முதலில் போரில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காகவே பென்சிலின் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், 1944ஆம் ஆண்டு வாக்கில், பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் குடிமக்களின் நோய்களைக் குணப்படுத்துவதற்கும் பெனிசிலின் கிடைக்கலாயிற்று. இரண்டாம் உலகப் போர் 1945ஆம் ஆண்டில் முடிவடைந்த பிறகு, பெனிசிலினைப் பயன்படுத்துவது உலகெங்கும் பரவியது.

பெனிசிலின் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, மற்ற வகை நோய் நுண்மத் தடை மருந்துகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் தீவிரமாயின. அந்த ஆராய்ச்சிகளின் பலனாக வேறு பல "அதிசய மருந்துப் பொருட்களும்" கண்டுபிடிக்கப்பட்டன. எனினும், பெனிசிலின் மிகப் பெருமளவில் பயன்படுத்தப்படும் நோய் நுண்மத் தடை மருந்தாக இன்றும் இருந்து வருகிறது.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



• நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-* •

வணக்கமுங்கோ,

**போனவாரம்** நான் நடத்தின வழக்கைப் படிச்சுப்போட்டு அவசர அவசரமாக அபிப் பிராயங்களையும், விமர்சனங்களையும் அனுப்பின உங்களின்ர உற்சாகத்தைப் பார்த்தால் எனக்கு பூரிப்பா இருக்குதுங்கோ. இயக்கப் பெடியள் என்னதான் பேப்பரை வாங்காதீங்கோ, விக்காதீங்கோ எண்டு சொன்னாலும், அந்தக் காலம் தொட்டு இண்டைக்கு வரைக்கும் நீங்கள் கொடுக்கிற இந்த அபரிமிதமான ஆதரவுதானுங்கோ என்னையும் இத்தனைக்கும் மத்தியில நிண்டு உங்களோட பேச வைக்குது.

ஒருவன் கைதட்டிறான், விசிலடிக்கிறான் எண்டதுக்காக அசிங்கமான அரிதாரத்தை ஒருவன் பூசிக்கொள்ள முடியாது எண்ட பொலிசிதானுங்கோ எனக்கும். நீங்கள் வரவேற்புக் குடுக்கிறியள் எண்டதுக்காக பொய்யைப் பூசி மெழுகி ஒரு நாளும் நான் உங்களோடை பரிமாறிக்கொள்ளயில்லை யெண்டதை நீங்கள் நன்கு தெரிந்தவர்கள். உங்களைப் பொய் சொல்லி ஏமாற்ற முடியாது. எனக்கு அப்படி ஒரு கீழ்த்தரமான நோக்கமும் கிடையாது. ஆனால் என்ன செய்யிறது, நானும் சரி, பத்திரிகையும் சரி, முடியுமான வரைக்கும் விஷயங்களைத் தந்துவிட வேணுமெண்டு கடுமையாக உழைக்கின்றோம். அதை ஜீரணித்துக் கொள்ள முடியாமல், இயக்கமும் - சில ஊதுகுழல் ஊடகங்களும் சதி செய்யினம். செய்து கொண்டிருக்கினமெண்டதை போன வாரம் ஆதாரத்தோடை புரிஞ்சி கொண்ட னாங்கள். உந்த மாதிரியான சதியும் குழி பறிப்பும் எண்டது, இது முதல் தடவை இல்லை எண்டதாலையும், நாங்கள் கருத்துக்களை மதிக்கும் நாகரீகமான மனித சமுதாயத்துக்குள் வாழவில்லை எண்ட தாலையும் அது ஒன்றும் அதிர்ச்சிக் குரியதாகவோ - அச்சுறுத்தலுக்குரிய தாகவோ - இல்லையுங்கோ.

ஏன் உதுகளை நான் இண்டைக்கு உங்களுடன் பகிர்ந்து கொள்ளுறன் எண்டால் நல்லதையும் கெட்டதையும் நான் பகிர்ந்து கொள்வதற்கு இருக்கிறது உங் களை மாதிரி நல்ல வாசகர்கள் தானுங்கோ. அதாலை நீங்கள் ஒண்டும் யோசிக்க வேண்டாம். உங்கள் ஆதரவும், உறுதியான பற்றும் தொடரும் வரை எத்தனை இடையூறுகளுக்கு மத்தியிலும் என் பணி தொடருமுங்கோ.

இது ஒரு பக்கமிருக்கட்டும். நம்மட விஷயத்துக்கு வருவம். போன வாரம் கொழும்பில ஒரு கூட்டம் கூடி "கிழக்கை பாதுகாக்கும் அமைப்பு" எண்டொரு அமைப்பை உருவாக்கிச்சினமாம். அதில கருணாத் தரப்பும் கலந்து கொண்டிச் சினமாம் எண்டொரு செய்தி வந்துச்சிது. விசாரிச்சதில கருணாவோ வேறு எந்தத் தமிழ் தரப்போ அதிலை கலந்துகொள்ள யில்லையுங்கோ. ஒரு சில பேர் கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க வேணும் எண்டு பிடியாரை பண்ணினமாம். அவைக்குத் தலையிடி என்ன தெரியுமோ? வடக்கு - கிழக்கு தமிழரின்ர தாயகம் எண்டதுதான். அவைக்கு புடிக்கயில்லையெண்டதுக்காக நாம என்னங்கோ செய்யிறது? புலியா இருந் தாலும், ஈ.பி.டி.பி.யா இருந்தாலும், புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், உள் நாட்டிலேயே ஒருவேளை சோறுக்கு வழியில்லாமல் வாழ்ந்தாலும் தமிழனாப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் வடக்கு கிழக்குத்தான் நமது தாயகம். அதை எதுக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாதெண்டதும் இரத்தத்தில எழுதியிருக்கிற உறுதிமொழியுங்கோ. அதைப் பாதுகாக்கவும் அந்த இலக்கை அடையவும் நாங்கள் கொடுத்த விலை கொஞ்சம் நஞ்சம் இல்லையுங்கோ.

எல்லா இயக்கங்களும் பலமான நிலை யில இருக்கேக்க, அந்தப் பலத்தைப் பேரம் பேசும் சக்தியா மாற்றியிருந்தால் எப்போவோ இந்த இலக்கை எட்டி இருப்பம்.

புலிகளின்ர தவறான போராட்ட வழி முறை இயக்கங்களையும் அழிச்சுது. தமிழ் மக்களின்ர போராட்டத்தையும் அழிச்சுது. இப்பக்கூட தமிழ்ச் சனத்திற்ற சின்னதா ஒரு எதிர்பார்ப்பு இருக்கு. எப்புடித் தெரியுமோ? புலிகள் தங்கட ஆயுத பலத்தையும், ஈ.பி.டி.பி. தன்ர அரசியல் பலத்தையும் ஒன்று சேர்த்து முதலில சகோதரப் படுகொலை களை முற்றாக நிறுத்தி, தமிழரெல்லாம் ஒற்றுமைப்பட்டால் - பெறக்கூடிய தீர்வை மக்கள் வழங்குகிற ஆணையைப் பெற்று, நிர்வகிக்க எல்லாத் தரப்பும் ஏக மனதாக முடிவெடுத்தால் - நாளைக்கே கூட தமிழ் மக்களுக்கு இணைந்த வடக்கு - கிழக்கான நமது தாயகத்தில் ஒரு நல்ல தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று. உந்த மக்களின்ர மனக்கிடக்கையை புரிஞ்சு கொள்ளாமல், கண்டவனையெல்லாம் கொல்லு, கொல்லுறதை எல்லாம் எழுது, எண்ட கணக்கா நாம ஒரு திசையில போய்க் கொண்டிருந்தால் உப்பிடியான அமைப்பு மட்டுமில்லையுங்கோ, கொஞ்சம் இடம் கொடுத்தால் வடக்கையும் பாது காக்கப் போறமெண்டுவாங்கள். பிறகு தமிழர்கள் அநாதைகள். அவர்களையும் நாங்க தான் பாதுகாக்க வேணும் எண்டுவாங்கள். நாங்கள் நிண்டு அறிக்கை விட்டுக்கொண்டு கோவபடுறதில அர்த்த மில்லையுங்கோ. யோசிங்கோ ப்ளீஸ்...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(30.03.2006 தொடங்கி 05.04.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மீனம் - சூரியன், இராகு. இடபம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். மகரம் - வெள்ளி. கும்பம் - புதன்.
சந்திரன் மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற் கால்.) தொழில் மேன்மை, வீண்விரயம், பணக் கஷ்டம், உறவினர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்பநன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் பகை, மனப்பயம், வீண் குறை கேட்டல், வெளியார் தொல்லை, இன சன மகிழ்ச்சி. குடும்பப் பொறுப்பு. உத்தியோக மேன்மை, உயர்ந்த நிலை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள். வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.)
தொழில் கஷ்டம், பணச் செலவு, உயர்ந்தோர் நட்பு, பலவித நன்மை, பிரயாண மிகுதி, தேகசுகக் கஷ்டம், குடும்பச் செலவு, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, பணவரவு, கௌர வம், பெரியோர் உதவி, மனப்பயம், முயற்சி மேன்மை, குடும்பச் செலவு, கடன்படல், உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் நன்மை, உயர்ந்த நிலை, பணவரவு, வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம், குடும்பப் பொறுப்பு, மனப்பயம், உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திய இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் கலக்கம், கடன் தொல்லை, பெரியோர் உதவி, தூர இடப் பயணம், குடும்ப பாரம், செலவு மிகுதி, உத்தியோக நன்மை, மேலதி காரிகள் உதவி, மாணவர்கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் மாற்றம், செலவு மிகுதி, பெரியோர் சகாயம், தூர இடப் பயணம். மனக்கலக்கம், குடும்பக் கலகம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள் :- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் நன்மை, மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி, தூர இடப் பயணம், செலவு மிகுதி, குடும்பசுகம், மனமகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில பயம், வெளியிடவாசம். மனக்கலக்கம், உயர்ந்தோர் உதவி, உறவினர் பகை, குடும்ப கல்கம், உத்தியோக மாற்றம், மாணவர்கல்வி உயர்ச்சி, விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் சிரமம், எதிர்பாராச் செலவு, மனக்கஷ்டம், பயனுள்ள செயல், இனசன நன்மை, கௌரவம், உறவினர் உபத்திரவம், குடும்பச் செலவு, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும், காரியானுகூலம், குடும்ப நன்மை, பிள்ளை கள் உதவி, உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் சிறப்பு, பணவரவு, மனத்துயர் நீங்கும், இனசன மகிழ்ச்சி, பிரயாண மிகுதி, தேகசுகக் கஷ்டம், குடும்பத் தொல்லை, முரண்பாடு, உத்தி யோகக் கவலை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

| | |
|---|---|
| கிழக்கு மாகாணம் | 107.9, 104.5 |
| வட மாகாணம் | 92.2 |
| கொழும்பு | 105.6 |

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## இலக்கு




நேராகப் பார்த்து, இலக்குத் தவறாமல் அடிப்பது என்பதும் கூட கொஞ்சம் கஷ்டமான காரியமே. ஆயினும் ஆர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த குலுடா கோமஸ் எனும் சர்க்கஸ் வித்தை காட்டும் பெண்மணி ஒருவர் தலைகீழாக நின்று கொண்டு தனது கால்களால் 5.5 மீற்றர் தூரமுடைய இலக்கு ஒன்றுக்கு இலக்குத் தவறாமல் அம்பு எய்து அதிசயமான உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார். இச் சாதனையை இவர் 2001ஆம் ஆண்டு ஆர்ஜென்டினாவில் வைத்தே புரிந்துள்ளார். எவ்வளவு அழகாக கஷ்டமில்லாமல் அம்பு எய்கிறார் பாருங்கள்.

## உயரம்





கோலூன்றிப் பாய்தல் விளையாட்டு நம் நாட்டில் அவ்வளவு தூரம் பிரபல்யமாக இல்லையாம். ஆயினும் வெளிநாட்டவர்கள் இவ்விளையாட்டினை பொழுது போக்காகவும், விருப்பத்துடனும் மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் இங்குள்ளதும் ஒரு சாதனைக்குரிய கோலூன்றிப் பாயும் வீராங்கனையாகும். இவர் கிட்டத்தட்ட 4.9 மீற்றர் உயரத்தினைக் கடந்து பெண்கள் வரிசையில் சாதனை படைத்துள்ளார். ஜெலீனா இஸபெல்லாவோ எனும் ரஷ்ய நாட்டு வீராங்கனையே இச் சாதனையை 2005இல் நிலைநாட்டினார். இதற்கு முன் ஆண்கள் வரிசையில் உக்ரேன் நாட்டைச் சேர்ந்த சேஜீ புக்கா என்பவர் 6.15 மீற்றர் பாய்ந்து சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓடினோம்




மரதன் ஓட்டப் போட்டிகள் ஒலிம்பிக் போட்டிகளில் எப்பொழுதும் தொடக்கப் போட்டியாக நடைபெறுவது வழமை. இங்குள்ளது ஒரு ஒலிம்பிக் போட்டியல்ல. ஆயினும் உலக சாதனை செய்யக் கூடிய மரதன் போட்டி ஒன்றாகும். 2004ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் நடைபெற்ற மரதன் போட்டிகளில் 37,257 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் 36,562 வீரர்கள் தங்களது போட்டியினை ஓடி முடித்தார்கள். முதல் மரதன் போட்டி 1970ஆம் ஆண்டு 55 போட்டியாளர்களை மட்டுமே கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நியூயோர்க் நகரில் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் இந்த மரதன் ஓட்டப் போட்டி அமெரிக்கர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற ஒன்றாகும்.



## சறுக்கினால் சாதனை

நீர்ச் சறுக்கு விளையாட்டில் அவுஸ்திரேலியர்களை மிஞ்ச யாரும் இல்லை என்பது வரலாறு. அதுவும் உண்மைதான். இங்கு சறுக்கி விளையாடும் அம்மணியின் பெயர் லெயீனா டிச்சலி. இவர் நீர்ச் சறுக்கு விளையாட்டுக்கென வழங்கப்படும் ஏ.எஸ்.பி. விருதுகள் ஆறினை தன் வசம் வைத்துள்ளார். 1998 முதல் 2003ஆம் ஆண்டுவரையில் இவர் 6 விருதுகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## மினி...




துள்ளிசைகளையும், மெல்லிசைகளையும் அதற்குரிய விசேடத் தன்மைகளின் மூலம் கேட்டு மகிழ பல புதிய சாதனங்கள் சந்தைக்கு வந்துள்ளன. அந்த வகையில் இங்குள்ளது மிகச் சிறிய மல்டிமீடியா இசைக் கருவியாகும். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆர்கோஸ் எனப்படும் இலத்திரனியல் நிறுவனம் தயாரித்துள்ள இச் சாதனத்தில் எம்.பி 3 மற்றும் எம்.பி.ஈ.ஜீ 4 ஆகிய கணினி கோப்புகளையும் டி.வி.டி.யையும் பார்த்து இரசிக்கலாமாம். இக்கருவியில் 80GB அளவுடைய ஹாட் டிஸ்க் பொருத்தப்பட்டுள்ளதாம். சிறியதாகவும் கூடிய கொள்ளளவுடையதாகவும் இருக்கும் இச் சாதனம் இன்னும் சந்தைக்கு வரவில்லை.

## பார்க்க மட்டும் முட்டைகளால்...



## வறுமை




**நாட்டின்** பொருளாதாரத்தில் பண வீக்கம் என்பது முக்கிய பங்கு வகிக்கும் ஒரு விடயம். பண வீக்கம் அதிகரிக்கும்போது நாட்டின் பொருளாதார நிலைமைகள் சீர்கெட்டு பொருட்களின் விலைகள் அதீதமாக அதிகரிக்கும். இதிலும் ஒரு உலக சாதனை உண்டு. சிம்பாப்வே நாட்டில் 2003ஆம் ஆண்டு திடீரென பண வீக்கம் அதிகரித்ததால், ஒரு இறாத்தல் பாண் 3000 சிம்பாப்வே டொலர்ஸூ க்கு விற்கப்பட்டதாம். (1998ஆம் ஆண்டு ஒரு இறாத்தல் பாண் 0.7 சிம்பாப்வே டொலர்ஸ் விற்கப்பட்டது.) இதுதான் உலகில் ஏற்பட்ட மிகப் பெரிய பண வீக்க அதிகரிப்பு என கின்னஸ் கருதுகின்றது. கின்னஸூ க்கு நம் நாட்டு (சிறிமா காலத்து) 'பாண் வரிசை' தெரியவில்லைப் போலும்.